இந்திய

விடுதலைப் போரின் முதல் முழக்கம்

ந. இராசையா. எம். ஏ.

இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம்

(வரலாற்றுத் திறனாய்வு நூல்)

ஆசிரியர்

ந. இராசையா, எம்.ஏ.

வெளியீடு :

"இந்திரா காந்தி எழுத்தகம்"

8, மதுரைவீரன் கோவில் தெரு,

தியாகை, சென்னை-600 017.

முதற் பதிப்பு சனவரி 1985

விலை ரூ. 10

அச்சிட்டோர் ;

ஆர். வி. எஸ். அச்சகம்,
சென்னை-600 012



முத்துக் கருப்பண்ணர் பெற்றெடுத்த மூதறிஞர்
நத்துகின்ற மு. பெரியசாமி எனும் நல்லோர்தான்
தென்பாண்டித் தேவர் வழிவந்த சீராளர்
கன்னித் தமிழ்காப்போர் காண் !

நூல் ஆசிரியர்

க. இராசையா, பி. ஏ.

முன்னுரை

மாவீரன் புலித்தேவன் என்பான் ஒரு மாபெரும் புரட்சித்தலைவன். தென்பாண்டி நாட்டில் திருநெல் வேலிச் சீமையிலே தோன்றித் தன்னிகரற்றுத் தலை நிமிர்ந்து வாழ்ந்த தமிழ் மறவன்! நெற்கட்டான் செவ்வலைத்தலைமையிட மாகக்கொண்டு செங்கோலோச் சியபாளையக்காரனாவான்; தன் பாளையத்திற்கு மட்டு மின்றி மேற்குப் பாளையத்தார்கட்கெல்லாமும் தலைமை வகித்து மாற்றுரை நடுநடுங்கச் செய்த மாபெரும் போர் வீரன்.

இந்திய விடுதலைக்காக வெள்ளையரை எதிர்த்து முதல் முதலில்''வெள்ளையனே வெளியேறு''என்று முதல் முழுக்க மிட்ட விடுதலைப்புலி 'விடுதலைப் போரொளியும்' கூட

ஆம், இவனுடைய வீரவரலாறு இந்திய விடுதலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பகுதிகளாகும்.

ஆங்கிலேயர், நவாப் போன்ற மாற்றார் அதிகாரம் தமிழ் மண்ணிலே காலூன்றக் கூடாதென்பதற்காக தன் வாழ்நாளெல்லாம் போராடிய நாட்டுப் பற்றாளன்.

ஆறடிக்கு மேற்பட்ட நெடிய தோற்றமும், முழங்கால் வரை நீண்ட கைகளும், வைரம் போன்ற உடலுரமும், உயர்ந்த அரசியல் நுண்ணறிவும், போர்த்திறனும், குறிப் பாகக் குதிரை மீதிருந்து போர் புரிவதில் மிகச்சிறந்த பேராற்றலும் உடையவன். நேர்மையும், நற்பண்பு களும் நிரம்பப் பெற்றவன்.

பாண்டியர் மரபிலே வந்த புலித்தேவன் மதுரையி லிருந்த அந்நியராட்சியை முறியடித்து விட்டு மதுரையில் பாண்டியராட்சியை மீண்டும். நிறுவப்பெரிதும் முனைந்த

வன். இந்தியாவிலேயே தமிழகத்தில் வேரூன்றிய நாயக்கரையும், நாவாபையும் மட்டுமின்றி வெள்ளையரையும் ஏனைய அயலாரையும் எதிர்த்து, வீரபாண்டிய கட்ட பொம்மன் பிறப்பதற்கு முன்னரே வீரமுழக்கமிட்ட மாவீரனாவான்.

அத்தகைய மாவீரன் புலித்தேவனுடைய முதல் விடுதலை முழக்கத்தை-பேராற்றலை வரலாற்றாசிரியர்கள் வியந்து போற்றிய பின்னரும் கூட தமிழறிஞர் முனைவர், ம. பொ. சி. போன்றவர்கள் மாவீரன் புலித்தேவனைப் பின்னுக்குத்தள்ளி அவன் பெருமை விளங்காதவாறு இருட்டடிப்புச் செய்திருப்பது பெருவியப்பிற்கும் வேதனைக்கும் உரியதாகும்.

இத்தகை வியப்பையும் வேதனையையும் இந்நூலாசிரியர் ‘புலவர். ந. இராசையா’ அவர்கள் தமிழாசிரியர் பேரவையின் பொதுக்குழு, செயற்குழு கூட்டிய போதெல்லாமும் பன்முறை வெளிப்படுத்தியுள்ளார்கள். அதன் விளைவே இந்நூல் என்றால் அது மிகையாகாது.

இளந் தலைமுறையினரிடையே வியக்கத் தக்க தேசப் பற்றும், தேசிய ஒருமைப் பாட்டு உணர்வும் குறைந்திருக்கின்றன வென்றால் அது மிகையாகாது.

அந்த வகையில் இந்நூல் தேசப்பற்று, வளர்ச்சிக்கும், இந்திய ஒருமைப்பாட்டுணர்வு மலர்ச்சிக்கும் உதவக்கூடிய நன்னூலாகும். உண்மையை நிலைநாட்ட வந்த மெய் நூலுமாகும. கோழைகளை வீரனுக்கும் எதிர்காலத்தின் ஏற்றம பற்றிய சிந்தனையின்றி சோம்பேறித்தனமாக காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கும் இளம் தலைமுறையினர்க்கோர் வழிகாட்டியாகும்.

புலவர் **வே. புகழேந்தி**
மாநிலத் தலைவர்
தமிழ்நாடு தமிழாசிரியர் பேரவை
தியாகராய நகர். சென்னை-600 017.

வாழ்துரை

செ. அரங்கநாயகம்,
கல்வித்துறை அமைச்சர்

புனித ஜார்ஜ்கோட்டை,
சென்னை-600 009

நாள் : 12—1—1985

இந்திய விடுதலை வரலாற்றில் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டவர்களில் முதல் முழக்கமிட்டு ஆங்கிலேயரைக் கதிகலங்கச் செய்தவன் மாவீரன் புலித்தேவன். இது காறும் தக்க முறையில் தமிழகம் அறிந்திராத மாவீரன் புலித்தேவனைப் பற்றி புலவர். ந. இராசையா, எம்.ஏ., பி.எட். நல்ல முறையில் படம் பிடித்துக் காட்டியிருப்பது மிகவும் போற்றத்தக்கது. புலவர். ந. இராசையாவின் முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

செ. அரங்கநாயகம்

12—1—1985

அரசவைக் கவிஞரின் அணிந்துரை

இந்திய விடுதலைப் போராட்டத்தின் வரலாறு இன்னும் சரியாக வெளிச்சத்திற்கு வரவில்லை.

உண்மையான தியாகிகள் — மாவீரர்கள் இருட்டடிப்புக்கு ஆளாக்கப்படுவதும் போலிகள் புகழ் வெளிச்சம் பெறுவதும் என்றுமே நிகழ்ந்துவரும் வரலாற்றுப் பிழையாகும்.

காந்தியும் நேருவும் ஏனையோரும் பெற்ற புகழில் சிறு பகுதியைக்கூட நேதாஜியும், பகத்சிங்கும பெறாதது வேதனைக் குரியது.

இத்திய சுதந்திரப் போராட்டத்தில் தென்னகத்தின் தமிழகத்தின் முதன்மை கூட தேசிய நீரோட்டம் பேசுபவர்களால் ஒப்புக் கொள்ளப் பெறவில்லை.

"சிப்பாய்க் கலகம்" ஒன்றுதான் விடுதலைப் போராட்டத்தின் "உதய காலம்" என்றுதான் இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிரத் தமிழகத்தில் நடந்த மானமும், வீரமும் மிக்கபோராட்டங்களுக்கு இது வரை மரியாதை கிடைக்கவில்லை.

அப்படி இருட்டடிப்புக்கு ஆளாக்கப்பட்டவன் புலித்தேவன் என்ற மாவீரன். ஆற்காட்டு நவாப்புக்கு கைகட்டி நின்று கப்பம் கட்ட மறுத்து கூலிப்படையாக வந்த வெள்ளையரை எதிர்த்து மானப்போர் புரிந்தவன் தென்பாண்டி மண்டலத்துத் தியாகமறவன் புலித்தேவன்தான்.

அவனது சிறப்பையும் அவனுக்குக் கிடைக்கவேண்டிய கிடைக்கத் தவறிவிட்ட வரிசையையும் எடுத்து விளக்கும் வகையில் தோழர் திரு. ந. இராசையா அவர்கள்.

“இந்திய விடுதலைப் போரில் முதல் முழக்கம்” என்னும் நூலை எழுதி வரலாற்று இருளை அகற்ற முயன்றிருக்கிறார்.

புலித்தேவனின் புகழ்மிக்க வரலாறு நிரல் படுத்தப் பட்டு எழுதப்படாவிடினும் ‘புலித்தேவன்’ யார் என்னும் ஒரு பொதுவான தோற்றத்தை இந்நூல் வாயிலாக ஆசிரியர் காட்டியிருக்கிறார்.

வரலாறு முழுமையாக ஆராய்ந்து வெளியிடப் பெற வில்லை.

இந் நூலை, புலித்தேவன் வரலாற்றுக்கு ஒரு மூன்னுரையாக மட்டுமே வைத்துக்கொண்டு ஒரு தெளி வான வரலாற்றை ஆசிரியர் இனியேனும் எழுத முற்படு வார் என்று எதிர்பார்க்கிறேன். எழுதுவார் என்றும் நம்புகிறேன், புலித்தேவனின் வீரமும், தீரமும் எத்தகை யவை என்பதைக் காட்டும், அடிப்படையில் மட்டும், ஆசிரியர் நில்லாது கட்டபொம்மனை மீண்டும் ஒரு முறை தூக்குக் கயிற்றில் தொங்கவிடும் முயற்சியில் ஈடுபட்டிருப் பதுதான் ஏன் என்று விளங்க வில்லை. கயத்தாற்றில் ஒரு முறை அவனைத் தொங்கவிட்டது போதும்.

கட்டபொம்மனின் வீர வரலாற்றுக்கு மையமாக நின்ற வெள்ளையத் தேவன் கட்டபொம்மனுக்கு இடது புறத்தில் அமைந்த இதயமாகவும், வலது கரமாகவும் விளங்கினான் என்ற உண்மைகளை வேண்டுமானால் சொல்லி இருக்கலாம்.

வெள்ளையர்கள் கட்டபொம்மனைப் பற்றி அளித்துள்ள கறுப்பு அறிக்கைகளை ஏன் இவ்வளவு ஆர்வத்தோடு அங்கீகரிக்கவேண்டும்? வாதியின் வாக்கு மூலங்கள் நீதிபதியின் தீர்ப்புக்கள் ஆகிவிட மாட்டா. வெள்ளையன் யாரை விட்டான். ஒரு மாபெரும் மறவர் குல சமுதாயத்தைக் குற்றப் பரம்பரை என்று கூண்டில் ஏற்றி நிறுத்திக் குற்றம் சுமத்தி (Settlement area) என்ற சேரிப் பகுதியில் சிறைப் படுத்திச் சிறுமைப் படுத்தி வைத்திருக்கும் வெள்ளை ஆட்சியின் நடவடிக்கையை ஆசிரியர் ஒப்புக்கொள்ளமாட்டார் என நம்புகிறேன்.

எது எப்படி இருப்பினும் புலித்தேவன் வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் புரிந்த வீரர்களில் முதன்மையானவன் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. அத்தகைய மாவீரனின் சிரப்பு வரலாற்றை இன்னும் சிறந்த முறையில் ஆய்வு செய்து செந்தமிழ் உலகத்திற்குத் தோழர் திரு. ந. இராசையா அளிப்பாரானால் அதன் மூலம் இவருக்கும் ஒரு வரலாறு நாளை உருவாகும் என்ற நம்பிக்கையோடு வாழ்த்துகிறேன்.

முதன் முயற்சிக்கு என் தமிழ் நெஞ்சங்கனிந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,

புலவர் புலமைப்பித்தன்

அரசவைக் கவிஞர்

அணிந்துரை

நாட்டிற்காய்ச் சாவோர் வரலாற்று ஏட்டில் சாகா வரம் பெற்ற சிரஞ்சீவிகளாவர் !

உலகத்திற்கு "ஞானத்தையும், தத்துவத்தையும், உலகியலையும், வீரத்தையும், ஈரத்தையும் பெற்று வழங்கிய பெருமிதத் தொட்டில் தமிழகம் !

முழங்கும் கடல் கண்டு பிறர்கலங்கி ஓடிய காலத்திலேயே கலங்கள் செலுத்தியவர் தமிழர் !

அதனால்தான் புரட்சிக் கவி **பாரதிதாசன்**

> "ஆற்றில் புனலின் ஊற்றில் கனியின்
> சாற்றில் தென்றல் காற்றில்—நல்ல
> ஆற்றல் மறவர் செயலில்—பெண்கள்
> அழகில் கற்பில் உயர்ந்த நாடு !"

என்று தமிழகத்தைப் பாடினார்.

"சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் பேரரசு" என்று சொல்லப்பட்டு—உலகெலாம் ஒரு குடைக் கீழாண்ட—எட்டுத் திசையிலும் அசைத்த வெள்ளைக் கழுகுகளின் ஏகாதிபத்யக் கறுப்புச் சிறகுகளை வெட்டி வீழ்த்தித் தன் கை விரல் பத்திலும் கடகம் ஏந்திய முதல் மன்னன் மாவீரன் புலித்தேவன் !"

மேலைத்திசையிலிருந்து வந்த ஆதிபத்ய வெள்ளையரை எதிர்த்துத் தென்பாண்டி மண்டலத்திலிருந்து தான் இந்தியாவின் முதல் விடுதலைக் குரல் கேட்கவேண்டும் என்பது கால சரித்திரக் கட்டமாய் அமைந்தது நமக்கெல்லாம் பெருமிதத்திற்குரியது !

சிப்பாய்க் கலகத்திற்கும் முன்னோடியாய் இந்திய நாட்டின் முதல் விடுதலைக் குரலை ஒலித்த வீரமன்னன் பற்றி நம் அன்புச்சகோதரர் திரு புலவர். **ந. இராசையா** எம்.ஏ., பி எட்., அவர்கள் சிறப்புடன் எழுதியுள்ளார்கள். நூல் அளவில் சிறுதெனினும் தேவையான வேளையில் தேவையான செய்தி தர முயன்றமைக்குப் பாராட்டுக்கள்.

அன்புச் சகோதரரின் எழுத்துப்பணி சிறக்க வாழ்த்துக்களுடன் வீரமன்னன் புலித்தேவன் பற்றி கவிதையையும் வடித்துள்ளேன்.

வீரமன்னன் புலித்தேவன்

கீழ் திசையில் செங்கதிரோன் இருளகற்றக்
கிளர்ந்தெழுந்தே வான்கதிரை வீசுதல்போல்
மேல் திசையின் வெண் கழுகுப் பரங்கியர்தம்
மேலாதிக்கக் கொடுமை தூள் பறக்க—கூர்
வேல்திறனால் பகைப்புலத்தின் சிரம்கொய்வித்தான் ;
வீரமிகு புலித்தேவன் அஞ்சா நெஞ்சன்!
சூள் உரைத்து மன்னன்அவன் நடத்தியதே—நம்
சுதந்திரப் போர் வரலாற்றில் முதல்போராகும்!
நீள்கரத்தில் வாளேந்தி நெஞ்சு யர்த்தி—விரி
நெடுங்கடலாய் மறவர்படை வெள்ளம் சேர்த்து
தோல் வெளுத்த பரங்கிஎமை ஆள்வதுண்டோ ?
துரும்படித்து வேழமதும் வீழ்வதுண்டோ?
வெற்றி
பால்குடித்த தாய்முலையைக் கொய்ய வரும்படு
பாதகரின் தலைதப்பிப்போவ துண்டோ ?
வேல்வடிக்கும் குருதியினால் மண் சிவக்கும் ! இனி
வீரர்களே! கிளர்ந்தெழுக! என்றதீரன் !
படைவரிசை வெள்ளையர்க்கோ காலன்! உயிர்
பனிபடரும் இமயவெற்புத் தோழன்! சழக்கர்
கொடுமைதனைச் சாய்க்க—வந்த சூரன்! நனி
கொள்கைஇசை மீட்ட வந்த பாணன்! மண்
அடிமைநிலை எதிர்த்தெழுந்த முதல்வன் ! தீரர்
அனைவர் நெஞ்சம் வாழும் புலித்தேவன்! நம்
விடுதலைவான் மீன்கடலின் துருவன்! நாட்டின்
விடியலுக்காய்த் தனைக்கொடுத்த அமரன்

வாழ்த்துக்கள்.

12—1—1985 அன்புடன்

சென்னை-28 **இ. முத்துராமலிங்கம்**

எம்.ஏ., பி.எஸ்சி., பி.எல்., டி.லிட்.,

தமிழ்நாடு விவசாய விற்பனை வாரியத் தலைவர்

இந்திய விடுதலைப் போரின்
முதல் முழக்கம்

தோற்றுவாய் :

"பாரதபூமி பழம்பெரும்பூமி,
நீரதன்புதல்வர் இந்நினை வகற்றாதீர்"

என்று நாட்டுப்பற்றை நமக்கெல்லாம் ஊட்டிச் சென் றான் கவிக்குயில் பாரதி. இமயமுதல் குமரிவரைப் பரந்து கிடக்கும் இப்பாரதபூமி.

"கொத்துக்கொத்தாய் பூமரும் எங்கள் அன்னை நாடு
கொலைகொலையாய் நெல்குவியும் எங்கள்
அன்னை நாடு
மரக்காலால் முத்தளக்கும் எங்கள் அன்னைநாடு"

என்று பண்டு தொட்டு பல வளங்களுடன் பெருமையும் பெற்று விளங்கும் நாடாகும்.

அந்நியர் இந்நாட்டைக் கைப்பற்றி அதன் வளங் களை எல்லாம் தனதாக்கிச்கொள்ள நடத்தப்பட்ட கொடு மைகள் பலவாகும். "இந்திய மண்ணின்மீது கால்வைக் கும் அந்நியன் எவனாக இருந்தாலும் அடியோடு ஒழித்துக் கட்டவேண்டும்" என்று வீரமுழக்கம் முழங்கியவர் பல ராவார். அவர்களில் முதல் முழக்கம் முழங்கியவன் யார்? என்று ஆராய்வதே நமது நோக்கமாகும். அதனை இங்கு காண்போம்.

ஆங்கிலேயர் வளர்ச்சி :

மொகலாயப் பேரரசர் அக்பரின் ஆட்சிக் காலத்தில் 1600-ம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பெயரில் வெள்ளையர்கள், இந்தியாவில் வேர் ஊன்ற அடிகோலி

னர். 1608-ல் சூரத் ஆங்கிலேயரின் தலைமை இடமானது. 1640-ல சென்னையில் செயின்ட் சார்ச் கோட்டை கட்டப்பட்டது. 1658--க்குப் பின்னர் வணிகத்தொழில் ஆங்கிலேயருக்கும் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது 1687-ல் பம்பாயிலும் 1697-ல் வங்கத்திலும் கோட்டைகளை அமைத்துக்கொண்டதோடு தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் பட்டாளத்தையும் வைத்துக்கொண்டு இந்தியாவைத் தாக்குவதற்கு ஆயத்தமானார்கள்.

நவாப்பும் ஆங்கிலேயரும் :

1736-ல் ஆண்டுவந்த நாயக்கர் பெண்ணரசியான மீனாட்சியோடு மதுரையில் நாயக்கராட்சி முடிவுற்றது. பின்னர் 1741 முதல் பிரஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இந்தியாவில் நாடுபிடிக்கும் ஆசையில் போராட்டம் நடைபெற்றது. 1744-ல் அன்வர் உத்தின் கர்நாடகத்தின் நவாப் ஆனார். பின்னர் இவன் கொலை செய்யப்பட்டு இறந்தபிறகு முகமது அலி நவாப்பானான்.

அப்போது மொகலாயப் பேரரசு 1851-ல் நிஜாம் நவாப் ஆகிய இரு பிரதிநிதிகளின் மூலம் தென்னகத்தை ஆட்சி செய்து வந்தது. ஹைதராபாத் நிஜாமின் ஆட்சிக்கு உட்பட்டு ஆற்காடு நவாப் ஆண்டுவந்தான் திருநெல்வேலிச் சீமையின் கப்பப்பணம் வசூல் செய்வதற்காக மகமது அலி தன் தம்பி ரஹீமை அனுப்பினான். இதற்கு மத்தியில் சந்தாசாகிப் மகமது அலிக்குப் போட்டியில் வசூல் செய்ய ஆரம்பித்தான்.

ஹைதராபாத் நிஜாமுக்கான போட்டியைப் பயன்படுத்தி ஆங்கிலேயர்கள் அரசியல் சூழ்ச்சியில் ஈடுபடலாயினர். ஆற்காடு நவாப்புக்கு ஆதரவாக கலனல் ஹெரான் என்பவரை அனுப்பிவைத்தனர். 1751-ல் முதன் முதல் திருச்சிக் கோட்டையில் ஆங்கிலக் கொடி ஏற்றப்

பட்டது அப்போது இன்னிஸ் துரைதான் திருநெல் வேலிக்கு வந்த இங்கிலீஷ்காரருள் முதன்மையானவர். இதை திருநெல்வேலிச் சீமை சரித்திரம் பக்கம் 46-ல் காணலாம். மேலும் இந்தப் படை எடுப்பைப்பற்றி பிரிட்டிசாரே தங்கள் கைப்பட எழுதிவைத்திருக்கிறார்கள். 'திருநெல்வேலி ஜில்லா மாறுவல் பக்கம் 48-ல் காணலாம்.' அதன் வாசகமாவது ?

"He There fore sent an expedition consisting of 2500 Horses and 3090 Peons, with a detachment of 9o Europeans under Lieutenant Innis Probalely the first English man ever seen in Tinnevelly **to settle the Government.**

இதை அறிந்து மேற்குப் பாளையங்கள் புலித்தேவன் தலைமையில் இன்னிசை எதிர்க்கத்திட்டமிட்டனர். அப்போது ஆற்காடு நவாப்பாக இருந்த மகமது அலிக்கு மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மறவர் பாளையத்தினர் வரிப்பணப் செலுத்தாமலே இருந்தனர். ஆற்காடு நவாப்பின் பரதிநிதியான மாபூஸ்கானை புலித்தேவன் வென்றான். மாபூஸ்கான் தோல்விக்குப் பின்னர் மதுரையைக் கைப்பற்ற புலித்தேவன் திட்டமிட்டான். இதனால் 1755-ல் நவாப்புக்கும கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி கிழக்கிந்தியக் கம்பெனியின் சார்பாக கலனல் ஹெரான் என்பவன் நவாப்பிற்கு உதவியாக பெரும் படையுடன் வந்தான். ஆற்காடு நவாப்பிடம் இருந்து கப்பம் வசூலிக்கும் உரிமை ஆங்கிலேயர் கைக்கு மாறியது. இந்த வரிப்பணத்தை வசூல் செய்வதற்கு ஆற்காடு நவாப்பின் அண்ணன் மாபூஸ்கான், கலனல் ஹெரான், யூசப்கான் ஆகியவர்கள் தலைமையில் திருநெல்வேலிச் சீமையை நோக்கிப் படை புறப்பட்டது.

1755-ல் நடைபெற்ற இந்தப்படை யெடுப்பில் இரண்டாயிரப் சிப்பாய்கள் ஐநூறு ஐரோப்பியர்கள் கலந்து

கொண்டார்கள் கலனல் ஹெரானின் படை எடுப்புக்கான முக்கிய நோக்கம் முதலாவதாக பாளையப்பட்டுக்களிட மிருந்து வரிக்கடன்களை வசூலிப்பது, இரண்டாவதாக கும்பினியர் அதிகாரததை நிலை நிறுத்துவதாகும் இந்தப் படை எடுப்பே தென்சீமைகளை அடக்க முதல் படை எடுப்பாகும்.

கலனல் ஹெரான் படை எடுத்து வரும்போது முதன் முதல் பாஞ்சாலங்குறிச்கிப் பாளையக்காரனான பொல் லாப் பாண்டியன் மீதுதான் பொல்லாப் பாண்டியன் ஏராளமான சீர்வரிசைகளைக் கொடுத்துச் சமாதானப் ப்டுத்த முயன்றான், ஆனால் கலனல் ஹெரான் கண்டிப் பாக வரிப்பணத்தைக் கட்டும்படி கூறினான், தன்னிட முள்ள கொஞ்சத் தொகையை மட்டும் கட்டிவிட்டு மீதத் தொகைக்காக தன் மகனையும், தன்தம்பியையும் பிணைக் கைதிகளாக வைக்கிறான் பொல்லாப் பாண்டின் இந்தப் பொல்லாப் பாண்டியன் தான் வீரபாண்டியக் கட்டபொம் மனின் பாட்டனார் இவன் 1736-முதல் 1760-வரை ஆட்சி புரிந்தான். அப்போதுதான் மேற்குப் பாளையமான நெற் கட்டான் செவ்வலில் புலித்தேவர் ஆட்சிசெய்து வந்தார் கப்பம் கட்டாமல் சுதந்திரமாக வாழப் போராடினார்கள் மேற்கு மறவர் பாளையங்கள் இதுவே இந்திய விடுதலைப் போரட்டத்தின் தொடக்கமாகும் அன்றுமுதல் வெள்ளையர் ஆட்சியை அகற்ற இந்தநாட்டு மக்கள் உடல் பெரருள், ஆவி, அனைத்தையும் தியாகம் செய்தார்கள். தியாகத்தால் மண்ணைச் சிவப்பாக்கினார்கள். ஆங்கில ஆட்சிக்குச் சாவுமணி அடிக்கக் கொதித்தெழுந்த உள்ளங் கள் எத்தனை! எத்தனை !!

“தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை மாய்த் திட விரும்பார் வாழ்வுமோர் வாழ்வுகொல்” என்றார் பாரதி.

தென்பாண்டியச் சீமையின் நிலை :

மேற்கண்ட நிகழ்ச்சிகள் யாவும் நடப்பதற்கு முன்னால் தென்பாண்டியச் சீமையின் நிலை எவ்வாறிருந்தது என்பதையும் நாம் காண வேண்டும.

கிருஷ்ண தேவராயரால் மதுரைக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதியான விசுவநாத நாயக்கரால் மதுரையில் பாண்டியர் ஆட்சி மறைந்தது. விசுவநாதர் தன் சுயநலத்துக்காகப் பிரித்தாளும் கொள்கையை அன்றே கையாண்டார். பாண்டிய மன்னர்கள் காலத்தில் பாண்டிய நாட்டை 52 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கோட்டத்திற்கும ஒவ்வொரு பிரதிநிதியையும் நியமித்திருந்தனர் இதை விசுவநாத நாயக்கர் 72 பாளையங்களாகப் பிரித்தார். இதில் 16 பாளையங்கள் மறவர் பாளையங்களாகவும், 56 பாளையங்கள் நாயக்கர் பாளையங்களாகவும் ஏற்படுத்தினான்.

இந்தப் பாளைங்களின் பணியையும் பற்றி எடுத்துக் கூறுகிறான் முதலாவதாக பாளையத்தின் மொத்த வருவாயில் 3ல்1பங்கு பாளைய நிர்வாகத்துக்கும் மற்ற இரு பங்கைப் பாளையப்பட்டார் செலவுக்கு ஒன்றும், பேரரசின் பாதுகாப்புச் செலவுக்கு ஒன்றுமாக அனுப்ப வேண்டும். இரண்டாவதாக பேரரசுக்குப்படை தேவைப்படும்போது உதவவேண்டும்.

இந்தப் பாளையக்காரார்களில் முதல் பிரிவினரான பாளையங்களில் இராமநாதபுரம், புதுக்கோட்டை' வடகரை, ஏழாயிரம் பண்ணை. நெற்கட்டான் செவ்வல், வீரகேரளம், புதூர் என்ற ஊற்றுமலை, சிவகிரி, சேத்தூர், சிங்கம்பட்டி, தலைவன் கோட்டை' கொல்லங்கொண்டான், அழகாபுரி, ஊர்க்காடு, சுரண்டை, கடம்பூர், மணியாச்சி ஆகியவையாகும.

இந்தப் 16 பாளையங்களும் மதுரையில் நாயக்கர் ஆட்சியை ஒழித்துக்கட்டிவிட்டு மீண்டும் பாண்டியப்பேரரசை நிலைநாட்ட வேண்டும என்று துடித்தனர் ஆனால் இரண்டாம் பிரிவினரான 56 நாயக்கர் பளையங்களும் மதுரையில் நாயக்கர் ஆட்சியை நிலை நிறுத்தவே பாடுபட்டன. விசுவநாதரோ ஆங்காங்கு எழும் சுதந்திர உணர்ச்சிகளை ஒடுக்கும் செயலில் தீவிரமாக ஈடுபட்டான் பஞ்சபாண்டியர் தலைமையில் ஒன்றுகூடி "பரம்பரை பரம்பரையாக ஆண்டு வந்த தமிழனின் ஆட்சிப் பீடத்தில் மாற்றான் ஆட்சி செய்வதா? அன்னியன் யெவனாயினும் ஒழித்துக் கட்டியே தீரவேண்டும்" என்று வீரமுழக்க மிட்டனர்.

நாயக்கராட்சியை ஒழித்துக்கட்ட எழுந்த இந்தப் பாளையங்கள், ஆங்கிலேயரையும் எதிர்த்துப் போர்முரசு முழக்கினர்.

"இது வீரர் பிறந்த மண்ணு—இதில்
நாமெல்லோரும் ஒண்ணு"

என்ற பட்டுக்கோட்டையாரின் பாடலுககுஏற்ப பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரை எதிர்த்து விடுதலைக்காக வீரமுழக்க மிட்டனர் மறத்தமிழர்கள்.

புலித்தேவனின் முதல் முழக்கம் :

ப்தினெட்டாம் நூற்றான்டின் பிற்பகுதியில் தென் பாண்டியச் சீமையில் 1755-ல் கிழக்கிந்தியக் கம்பெனியார் நம்மை அடிமையாக்கப் புறப்பட்டனர். என்பதையும், அதற்கு கலனல் ஹெரான் என்ற கும்பினித் தளபதி தலைமை ஏற்றுவந்ததையும் நாம் அறிவோம். இதனை எதிர்க்கப் புலித்தேவன் தலைமையில் போர் முழக்கம் முழங்கினர்.

" நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்
பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்"

என்று பாரதி பாடலுக்கு ஏற்ப முரசு கொட்டினர்.

" ஒற்றுமையில் ஓங்கிநின்ற சக்தியாலே—மக்கள்
உள்ளமெல்லாம் பொங்குதடா வெள்ளம்போல
வெற்றியென்னும் மேடையிலே அன்புக்காளை
வீர நடை போடுதடா இந்த வேளை"

என்ற பட்டுக்கோட்டையாரின் பாடலுக்கு ஏற்ப புரட்சித் தலைவன் புலித்தேவன் ஆங்கிலேயரை எதிர்த்து வீர முழக்கமிட்டான்.

புலித்தேவனின் வீரமுழக்கத்தைக் கேட்ட மறவர் பாளையங்கள் கொதித்தெழுந்தன. புலித்தேவனுடைய நெற்கட்டான் செவ்வல், வாசுதேவ நல்லூர், புதுக் கோட்டை ஆகிய மூன்று கோட்டைகளைத் தவிர ஊத்து மலை, தலைவன்கோட்டை, சுரண்டை, வடகரை, கொல் லங் கொண்டான் ஆகிய இடங்களிலும் கோட்டைகள் எழுப் பப்பட்டன. இந்த ஐந்து கோட்டைகளுக்கும் பிற்காலப் பரண்டியர்களான பஞ்சபாண்டியர்களின் பெயர்கள் சூட்டப்பட்டன.

புலித் தேவரின் பண்புகள் :

புலித்தேவர், தலைசிறந்த அரசியல் சாணக்கியராயும், நிகரற்ற போர் வன்மை படைத்த மறவர் சிங்கமாயும் திகழ்ந்தார்" என்று டாக்டர் ந. சஞ்சீவி கூறுகிறார்.

புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களில் வியந்து பேசப்படுகின்ற வீரமறவர் பரம்பரையில் பிறந்த விறல் மேவு தமிழ் மகன் அவர் தம்பெயருக்கேற்ப அஞ்சாத நெஞ்சம் படைத்த ஆண்மையாளர் சாம. தான, பேத. தண்டம் என்று சொல்லப்படுகின்ற நால்வகை உபாயங்க ளையும் சமயமறிந்து கையாளுவதில் சாணக்கியனையும் வெல்லக் கூடியவர்.

அவர் ஆறடிக்கு மேற்பட்ட உயரமும், வைரச்சிலை போன்ற உடற்கட்டும் வாழ்ந்தவர் அவரது வலிமைமிக்க கைகள் முழங்கால் வரையில் நீண்டிருக்கும மற்றவர்களால் சுமக்க முடியாத பல ஆயுதங்களைச் சுமந்து கொண்டு நாளொன்றுக்கு 30மைல் தூரம் அவர் எளிதாக நடந்து செல்வார். குதிரை ஏறிப் போர் புரிவதில் அபூர்வமான திறமை படைத்தவராம் வீரமும் வலிமையு மட்டுமின்றி அவர் நேர்மையும் பண்பும் நிறைந்தவர்' என்று திரு, தமிழ் வாணன் கூறுகிறார். இவர் கூறுகின்ற புலித்ம்தேவனை நினைத்துப்பார்க்கையில கம்பராமாயணத்தில் வருகின்ற குகன் தோற்றத்திற்கு ஒப்பிடலாம் போல் தோன்று கின்றது.

புலித் தேவரிடம் கப்பம் கேட்டல் :

காலனல் ஹெரான் வெற்றிகரமாக பொல்லாப்பாண் டியனிடம் கப்பம் வாங்கியதைப் போல் புலித்தேவனையும் அடக்கி கப்பம் பெற்று விடலாம் என்று மமதை கொண் டான் இருந்தாலும் புலித்தேவருக்குப் பயந்து, கலனல் ஹீரான் தன்னுடைய இருமொழியளரான துபாஷ் முதலியை அனுப்பி வைத்தான். துபாஷ்முதலி புலித் தேவனிடம் பெயரளவிற்கு சிறு தொகை ரூபாய் 2000 மட்டும் கட்டினால் போதும், ஹெரான் துறை திருப்தி யோடு திரும்பிவிடுவார் என்று கூறினுன். அதைக் கேட்ட மாத்திரத்தில் புலியெனப் பாய்ந்தார் புலித்தேவர். "நாங்கள் இத்த மண்ணில் பிறந்தவர்கள். இந்த மண் ணுக்கு உரியவர்கள், அவ்வாறிருக்கும்போது வெள்ளைய னுக்கோ அல்லது ஆற்காடு நவாப்புக்கோ நாங்கள் ஏன் கப்பம் செலுத்தவேண்டும்" என்று முழங்கினான் புலித்தேவன்.

இந்த நாட்டில் ஆங்கிலேயரை எதிர்த்து கப்பம் கட்ட மறுத்தது மாவீரன் புலித்தேவனைத் தவிர வேறு யாரு மில்லை இதுவே ஓர் இந்தியன் செய்த வீரம் செறிந்த

புலித்தேவனுக்கு குதிரைமீது அமர்ந்து போர்செய்வ
தென்பது ஒரு தனிக்கலை

முதல் முழக்கம். இதைக் கேட்டமாத்திரத்தில் கலனல் ஹெரான் அவமானப்பட்டு ஓடிவிட்டான்.

புலித்தேவனின் கூட்டணி :

மீண்டும் எந்த நேரத்திலும் கும்பினியரால் அபாயம் வரும் என்று உணர்ந்தார் புலித்தேவர். தற்போது ஹெரான் ஓடியதுகூட தக்க ஆயுதமில்லாமல் இருந்திருக்கலாம். ஆகையால் மீண்டும் ஆங்கிலேயர் படை பலத்தைப் பெருக்கிக்கொண்டு வருவதற்குள் ஒரு வலுவான கூட்டணியை உருவாக்க நினைத்தார். மதுரைப் பாளையங்களுடன் மேற்குப் பாளையங்களெல்லாம் ஒன்று திரண்டு புலித்தேவன் அணியில் முழங்கினர். ஆனால் எட்டையாபுரம், பாஞ்சாலங் குறிச்சி ஆகிய பாளையங்களும் அவர்களைச்சார்ந்த நாயக்கர். பாளையங்களும் இணைய மறுத்துவிட்டன. அப்போது புலித்தேவர் அடைந்த வேதனைக்கு அளவே இல்லை.

திருவில்லிபுத்தூர் கோட்டை தாக்கப்பட்டது :

திருவில்லிபுத்தூர் கோட்டையை நவாப்பின் தம்பியான ரஹீம் பாதுகாத்து வந்தான். பெரும் சுதேசிப் படையொன்றும் கொம்மந்தான்கான் சாகிப் வசம் ஒப்படைக்கப்பட்டது. இதை அறிந்த புலித்தேவன் 1756-ல் திருவில்லிபுத்தூர் கோட்டையைத் தாக்கி கைப்பற்றினான். அப்போது புலித்தேவனிடம் ஆயிரம் குதிரைப் படை வீரர்களும், 25000 காலாட்படை வீரர்களும், இருந்தனர்.

இவ்விதமாக அன்னியர்களின் படை முகாம்களை எல்லாம் அழித்து வந்தான் மாவீரன் புலித்தேவன். திருவில்லிபுத்தூரில் கோட்டை இருந்த இடத்தை இன்றும் "கோட்டைத் தலைவாசல்" என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

இவ்வட்டாரத்திலுள்ள பல ஊர்களில் கொம்மந்தான் கான் சாகிப்பின் பெயரால், கொம்மந்தான்புரம். என்பது "கொம்மந்தாபுரம்" என்றும், மகமதுகான் சாகிப்புரம் "மம்சாபுரம்" என்றும், கான்சாகிப்புரம் "கான்சா புரம்" என்றும் இன்றும் வழங்கி வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

விடுதலை முழக்கத்தின் காலகட்டங்கள் :

இந்தியா அன்னியரிடமிருந்து விடுதலையடைய பல கட்டங்களாகப் போர் நடத்தினர். அதில் இந்திய விடு தலையின் முதல் கட்டமான 1755-ல் புரட்சித் தலைவன் புலித்தேவன் "வெள்ளையனே வெளியேறு" என்று வீர முழக்கமிட்டான். "அன்னியன் எவனாயினும் தம் தாயகத்து மண்ணிலே வேறூன்றி விடக்கூடாது" என்ற அரசியல் எழுச்சியை உண்டாக்கினான் புலித்தேவன். மாவீரன் புலித்தேவன் முழங்கிய "வெள்ளையனே வெளியேறு" என்ற முழக்கத்தையே பின்னாளில் 1942-ல் காந்தியடிகளும் முழங்கினார்.

இரண்டாவது கட்டமாக சிவகங்கையின் அரசியும் வீரமறத்தியுமான வேலு நாச்சியார் 1772-ல் ஆங்கிலேயர் களை எதிர்த்து விடுதலை முழக்கம் முழங்கினார். இந்திய விடுதலை இயக்கத்தில் அன்னியனை எதிர்த்து முதன் முதல் முழக்கமிட்ட வீராங்கனை வேலு நாச்சியாரே முதல் பெண்மணி ஆவார். வீராங்கனை வேலு நாச் சியாரின் வீரத்தைப் பின்பற்றியே பின்னாளில் வடநாட் டில் சான் சிராணி விடுதலை முழக்கம் முழங்கினார்.

மூன்றாவது கட்டமாக மானங்காத்த மருது சகோ தரர்கள் 1780-ல் சிவகங்கைச் சீமையில் அன்னியனை எதிர்த்து விடுதலை முழக்கத்தை முழக்கினர்.

நான்காவது கட்டமாக பாஞ்சாலங் குறிச்சியில் வீர பாண்டியக் கட்டபொம்மன் 1795-ல் விடுதலை முழக்கம் முழங்கினார்.

இவ்விதமாக விடுதலை முழக்கத்தின் காலகட்டங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து கொண்டே வந்தன.

"என்று தணியும் இந்த சுதந்திர தாகம்
என்று தணியும் எங்கள் அடிமையின் மோகம்"

என்ற குரலுக்கு ஏற்றங் கொடுத்தனர் தென்னாட்டு மக்கள். இவ்விடுதலைப் புரட்சியில் பல்லாயிரக் கணக் கான விடுதலை வீரர்களைக் கொன்று குவித்து நாசமாக் கியது மட்டுமல்லாமல், தென்பாண்டியத்திருநாட்டையே இடுகாடாகவும் ஆக்கினர் வெறி பிடித்த வெள்ளையர். இந்தப் போர்களில் ஈடுபட்ட பல லட்சம் மறவர் வீரர்கள் கொல்லப்பட்டார்கள். இந்த வீரர்களின் விவரத்தை விடுதலை இயக்க வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொன்றாகும். என்னே! இவர் களின் நாட்டுப்பற்று.

ம. பொ. சி. அவர்களின் கூற்று :-

"வெள்ளையரை எதிர்த்து முதல் முழக்கம் முழங்கிய வன் வீரபாண்டியக்கட்டபொம்மன்தான்" என்று திருமிகு ம.பொ.சி. அவர்கள் தமது "முதல் முழக்கம்" என்ற நூலில் கூறியுள்ளார். அதில் குறிப்பிட்டுள்ள செய்தி களைக் காண்போம்.

1. "திருநெல்வேலி மாவட்டத்தில் பாஞ்சாலங் குறிச்சி என்னும் சின்னஞ்சிறு பாளையப் பட்டார்தாம். முதன் முதலில் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் தொடங்கினர்" என்கிறார்.

இக் கருத்து முற்றிலும் முரணானதாகும். பாஞ்சை யின் கோட்டை முதன் முதல் 1799 செப்டம்பர் 4ல் பானர் மெனால் தாக்கப்பட்டது. ஆனால் புலித்தேவனின்

கோட்டையோ 1755 மே திங்களில் தாக்கப்பட்டது வீரபாண்டியனின் கோட்டையில் நடந்த போர்க்கு 44 ஆண்டுகளுக்கு முன்பே புலித்தேவன் கோட்டையில் போர் நடந்தது. மேலும் 1799க்கு முன்னர் பல தடவைகள் பாஞ்சாலங் குறிச்சியின் மேல் போர்கள் நடைபெற்றன. வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு முன்னர் ஆண்ட கட்டபொம்மனின் முன்னோர்கள் கோழைகளாகவே கப்பம் கட்டி வாழ்ந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

2. 1798 ஆம் ஆண்டில் தொடங்கி 1801 ஆம் ஆண்டின் இறுதிவரை வீரபாண்டியக் கட்டப்பொம்மன் நிகழ்த்திய போர் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொள்ள ஏற்பட்டது அன்று, செந்தமிழ் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவேயாகும்.

இக்கருத்து முற்றிலும் முரணானதாகும். வீரபாண்டியக் கட்டபொம்மன் தன்னுடைய பாஞ்சைப் பகுதியைப் பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர, வேறு குறிக்கோள் இருந்ததாகத்தெரியவில்லை. தமிழகத்தையோ அல்லது பாண்டிய நாட்டையோ ஒன்று படுத்தவேண்டும். என்று பொதுக் கோரிக்கையை மையமாகக் கொண்டவனாக எந்த இடத்திலும் சித்தரிக்கப் படவில்லை. எனவே தன்னுடைய சிம்மாசனம் காப்பாற்றப்பட வேண்டும என்பதுதான் அவனது குறிக்கோள் என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும் பாஞ்சையைத் தவிர வேறு பாளையங்களை ஆதரித்துப் போர் முழக்கம் முழங்கியதுண்டா? என்றால் உறுதியாகவும் இறுதியாகவும் இல்லை என்றே பதில் கூறலாம்.

இந்நிலையில் இராமநாதபுரத்தில் கம்பெனியாரின் ஆதிக்கத்திற்கெதிராகப் பெருத்த கலகம் மூண்டது. இந்தக் கலகம் முன் எப்போதும் கண்டிராத அளவுக்கு மூண்டு

விட்டது, திருநெல்வேலிச் சீமைப் பாளையக்காரர்கள் பலரும் இந்தக் கலகத்தில் பங்கு கொண்டனர். தென்பாண்டி மக்கள் மனதில் சுதந்திர உணர்ச்சி சுடர்விட்டெழுந்ததைக் கண்ட ஆங்கிலேயர்கள் அச்சங் கொண்டனர். பாஞ்சாலங் குறிச்சி வீரபாண்டியனும் இந்தக் கலகத்தில் கலந்து விட்டால், கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இந்திய மண்ணில் இறுதிச் சடங்கு செய்யும் காலம் நெருங்கி விடுமென்பதைக் கலைக்டர் லூசிங்டன் நன்றாக உணர்ந்து கொண்டான் இக்கருத்தை நாம் கூறவில்லை. திருமிகு, ம.பொ சி. அவர்களே வீரபாண்யக் கட்டப்பொம்மன் என்னும் நூலில் (பக்கம் 31-32) கூறியுள்ளார்

மேலே கூறிய காரணத்திலிருந்து திருநெல்வேலிச் சீமையிலுள்ள பாளையக்காரர்கள் பலரும் இராமநாதபுரம் கலகத்தில் பங்கு கொண்டனர். ஆனால் வீரபாண்டியக் கட்டபொம்மன் மட்டும் கலந்து கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்நிகழ்ச்சியானது வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. ஆனால் வீரபாண்டியனோ அதை நழுவ விட்டு விட்டான். அவ்வாறு இருக்கும் போது செந்தமிழ் நாட்டின் சுதத்திரத்தைப் பாதுகாக்கவே வீரபாண்டியன் முயன்றான் என்று எப்படிச் சொல்ல முடியும்.

ஆனால் மாவீரன் புலித்தேவனோ தென் பாண்டியச் சீமையின் கோடியிலிருந்து வெள்ளையரை எதிர்த்துக்குரல் கொடுத்தது மட்டுமல்லாமல், மதுரையிலும் அந்நியர் ஆட்சியை நீக்க வேண்டும் என்று போர் முழக்கமிட்டான் டச்சுக்காரர்கள், பிரஞ்சுக்காரர்கள், போர்த்துக்கீசியர்கள், சமூக விரோதிகள் ஆகியோர் அனைவரையும் ஒழித்துக் கட்டுவதில் தீவிரம் காட்டினான். அதே நேரத்தில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டுத் தோற்ற பாளையக்காரர்களுக்கெல்லாம் தன் கோட்டையில் அடைக்கலம் கொடுத்

தும் காப்பாற்றி இருக்கிறான். இன்னும் எத்தனையோ சான்றுகள் உண்டு. எனவே கட்டபொம்மனைக் காட்டிலும் மாவீரன் புலித்தேவன் வெள்ளையரை எதிர்த்து முழக்கிய முழக்கமானது தன்னுடைய சிம்மாசனத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஏற்பட்டதன்று, செந்தமிழ் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவே என்பதே உண்மையாகும்.

3. "1792-ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக்கம்பெனியார் ஆற்காடு நவாப்புடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அந்த ஒப்பந்தமாவது கப்பப் பணத்தை வாங்கிக் கொள்ளும் உரிமையைக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்குவதேயாகும். கப்பம் செலுத்திக் கைகட்டி வாழ மறுத்தான் கட்டபொம்மன்" என்கிறார்.

"1792-ல் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் ஆற்காடு நவாப்பிற்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி கப்பம் கட்ட மறுத்தான் வீரபாண்டியன்." என்று ம.பொ.சி முதல் முழக்கத்திற்கான காரணங்களில் ஒன்றாகக் கூறுகிறார். இதற்கு முன்பே 1755-ல் நவாப்பிற்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அப்போதே புலித்தேவன் கப்பம் கட்ட மறுத்தான். 1756-ல் முதலிக்கும் கும்பெனிக்கும் குத்தகை ஒப்பந்தம் கையெழுத்தானது. இதற்கும் கப்பம்கட்ட மறுத்தான் புலித்தேவன். புலித்தேவனும் அவனைச் சார்ந்தவர்களும் கப்பம்கட்ட மறுத்த போது வீரபாண்டியக் கட்டப்பொம்மனின் பாட்டனான பொல்லாப் பாண்டியக் கட்டப்பொம்மன் கர்னல் ஹீரானின் கால்களில் விழுந்து கப்பப் பணத்தைச் செலுத்தினான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே 1755, 1756-ல் ஏற்பட்ட ஒப்பந்தங்களுக்குப் பின்பு ஏற்பட்டதுதான் 1792-ன் ஒப்பந்தம். எனவே காலத்தால் பிந்தியது எப்படி முதல் முழக்கத்திற்கான காரணமாகக் கருதப்படும்.

4. பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்தைச் சேர்ந்த அருங்குளம், சுப்புலாபுரம் ஆகிய ஊர்களை எட்டையா புரத்துடன் இணைத்தனர் கும்பினியார். தன்னுடைய ஊர்களைக் கவர்ந்ததை அறிந்த வீரபாண்டியன் தனது ஆட்சிக்குட்பட்ட பாஞ்சாலங் குறிச்சி எல்லைக்குள் அந்நியர் எவரும் கால் வைக்கக்கூடாது என்று கட்டளை இட்டான். இதுவே முக்கிய காரணங்களில் ஒன்றாகக் காட்டப்படுகிறது.

இந்நிகழ்ச்சியை ஆராய்ந்து பார்த்தால் தெளிவான பதில் கிடைக்கும. தன்னுடைய கிராமமான சுப்புலா புரம், அருங்குளம் ஆகியவற்றை எட்டையபுரத்துடன் ஆங்கிலேயர் இணைத்ததற்காகத்தான். அதுவும் தன்னு டைய அடி மடியிலேயே கைவைதது விட்டார்களே ஆங் கிலேயர்கள் என்ற ஆத்திரத்திலேயேதான் குமுறுகிருன் ஒரு வேளை கும்பினியார் அப்போது அந்தச் செயலைச் செய்யாதிருப்பாராயின் வீரபாண்டியனும் எதிர்க்கத் துணிநதிருக்கமாட்டான் என்பது நமககுத் தெளிவாக விளங்குகிறது.

5. வீரபாண்டியக் கட்டபொம்மன் ஆங்கிலத் தள பதியான பானர்மெனிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறியதாவது :—

“எனக்கு முன்னே பாஞ்சாலங் குறிச்சியை ஆண்ட பாண்டியமரபின் வேந்தர்கள் எந்தக் காலத்திலும் எவரது ஆதிக்கத்திற்கும் கட்டுப்பட்டு வாழ்ந்ததுமில்லை ; கப்பம் செலுத்தியதுமில்லை” எனவே “அவர்களது வழிவந்த நான் அந்நியரா கிய உங்களுக்கு வரி செலுத்த மறுத்தது எப்படிக் குற்றமாகும.” என்று ம.போ.சி. கூறுகிறார்.

எனவே, இதிலிருந்தே உண்மை உள்ளங்கை நெல்லிக் கனிபோல தெற்றன விளங்கும். “வீரபாண்டியக் கட்ட

பொம்மனுக்கு முன்பே பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட பாண்டிய மரபின் வேந்தர்கள் எந்தக்காலத்திலும் எவரது ஆதிக்கத்திற்கும் கட்டுப்பட்டு வாழ்ந்ததுமில்லை. கப்பம் செலுத்தியதுமில்லை.'' என்று திட்டவட்டமாகக் கூறிய திலிருந்தே வீரபாண்டியக் கட்டமொம்மனுக்கு முன்பே பாண்டியச் சிற்றரசர்கள் வெள்ளையனை எதிர்த்து முதல் முழக்கமிட்டனர் என்பது தெளிவாகிறது,

''1798-ஆம் ஆண்டில் தொடங்கி 1801-ஆம் ஆண்டின் இறுதிவரை நான்கு ஆண்டுகள் பாஞ்சாலங்குறிசியாருக்கும், கிழக்கிந்தியக் கமபெனியாருக்கும் கடுமையான போர் நடைபெற்றது'' என்று மா. பொ. சி, கூறுகிறார்.

பாஞ்சாலங்குறிச்சியாருக்கும் கிழக்கிந்தியக் கம்பெனி யாருக்கும் நடந்த போரின் காலக்கட்டத்தைத் தெளிவாகக் கூறியுள்ளார். அதுவும் திட்டவட்டமாக நான்கே ஆண்டுகள்தான் என்று வரையறுத்தும் கூறியுள்ளார். இதனை மையமாகக்கொண்டு ஆராய்ந்தால் புலித்தேவனின் காலம் கட்டபொம்மனின் காலத்தைவிடக் காலத்தால் முந்தியது, இருவருடைய காலத்தையும் ஆராய்ந்து பார்த்தால் தெளிவாக விளங்கும்.

வீரபாண்டியக் கட்டபொம்மன் பிறந்தது 1760. புலித்தேவன் பிறந்தது 1714. வீரபாண்டியக் கட்டபொம்மன் பிறப்பதற்கு முன்பே 1755-ல் கும்பினியரை எதிர்த்து புலித்தேவன் அபாயக்குரல் கொடுத்திருக்கிறான். அதனை அடுத்து 1767-ல் கர்னல் காம்பல் என்பவனால் வாசுதேவ நல்லூர் கோட்டை தாக்கப்பட்டது. தனது தள்ளாத வயதில் தாய் நாட்டின் விடுதலையே தனது லட்சியமாகக் கொண்டு விளங்கினான் புலித்தேவன். கட்டபொம்மன் ஆட்சியை ஏற்றுக்கொண்டது 1790.

எனவே நம்முடைய தாயகத்தைத் தட்டி எழுப்ப முதன் முதல் உரிமைக்குரல் எழுப்பியவன் மாவீரன்

புலித்தேவன்தான். நாடாசைகொண்ட ஆங்கிலேயரை அடியோடு வேரறுக்க

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்று தீரத்துடன் வீர முழக்கமிட்டான்.

இந்திய விடுதலைப் போரின் சரித்திர நாயகர்களான மாவீரன் புலித்தேவன், வீரபாண்டியக் கட்டபொம்மன் ஆகியோர் இருவரையும சீர் தூக்கி ஆராய்ந்து பார்த்தால் "விடுதலை முழக்கம் முழங்கியவர்களில் முதன்மையான வன் மாவீரன் புலித்தேவன் தான்" என்று தெளிவாகத் தெரிகிறது. வீரபாண்டியக் கட்டபொம்மன்தான் முதன் முதலில் முழக்கம் முழங்கினான் என்பதற்கான ம.பொ.சி. யின் சான்றுகள் நிரூபிக்க முடியவில்லை. அவர் கூற்றுப் படி வீரபாண்டியக் கட்டப்பொம்மன் "பாஞ்சை" என்ற வட்டத்துக்குள் நின்று கொண்டு தன்னலத்தோடு போராடினான் என்பது தெளிவாகத் தெரிகிறது. கிஸ்தி கட்ட மறுத்தான். கிஸ்தி கட்ட மறுப்பதை" "விடுதலைப் போராட்டம" என்று விவரிப்பதைவிடச் "சட்டமீறல்" என்றே குறிப்பிட வேண்டும் என்று பேராசிரியர் டாக்டர் நா. சுப்பிரமணியம் கூறுகிறார்.

வீரபாண்டியக் கட்டபொம்மனை முதல் விடுதலைப் போராட்ட வீரனாகச்சித்தரித்தவர்களில் செகவீரபாண்டியனார், ம.பொ. சிவஞானம், எம் எஸ் சுப்பிரமணிய அய்யர், வி.கே. லீலாவதி, எஸ்.என். கே. இராசன், ஈ யூ. தாமோதர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள், செகவீரபாண்டியனாரின் "பாஞ்சாலங் குறிச்சி வீரசரித் திரம்" முதல்பாகம் பக்கம் 66ல் மாவீரன் புலித்தேவனைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். கப்பம் கட்ட மறுத்ததில் முதல்வரிசையில் புலித்தேவனைக்குறிப்பிட்டுள்ளார். அவர் கூறியதாவது "எல்லா ஜமீன்தார்களிடமிருந்து வரிகள் வசூலாயின நெற்கட்டுஞ் செவ்வல் பாளையக்காரனாகிய பூலித்தேவரும், இப்பாஞ்சைப் பதியும் வரிதர மறுத்து

வன்மமுற்று நின்றனர்.'' என்று வீரபாண்டியன் புகழ் பாடக்கூடிய பழம்புலவர் செகவீரபாண்டியனார் கூறுவது சிறப்பாகும். எம் எஸ். சுப்பிரமணிய ஐயரும் புலித்தேவன் சரித்திரம் எழுதியுள்ளார். ஆனால் ம.பொ சி. மட்டும் கட்டப்பொமமனுக்கு வழங்கிய சிறப்பு புலித்தேவனுக்கு வழங்கவில்லை. முதல் முழக்கம் முழங்கியவன் மாவீரன் புலித்தேவன் என்று சொல்லிவிட்டால் தன்னுடைய கட்டப்பொம்மனுககு இழுககு வந்துவிடும் என்று எண்ணி ணாரோ, என்னவோ தெரியவில்லை. இந்த இடத்தில்தான் வரலாற்றுக்கும் ம. பொ. சிக்கும் கருத்துவேறுபாடு. மாவீரன் புலித்தேவன் இந்திய விடுதலைப் போரில் ஆற்றிய தியாகத்தை மறைப்பதன் மூலம் வரலாற்றை மறைக்கும் குற்றத்தையும் துணிந்து செயகிறார் ம பொ.சி. ''சிலரைச்சிலகாலம் ஏமாற்றலாம், பலரைப் பலகாலம் ஏமாற்றலாம், ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது '' என்பதும், ''கெட்டிக்காரன் புளுகு எட்டேநாள்தான்'' என்பதும் இந்த நாடறியும். வருகின்ற சமுதாயம் நிச்சயமாக ம. பொ. சியை மன்னிக்காது.

அறிஞர்கள் கருந்து :

இந்திய விடுதலை இயக்கதின் சரித்திரத்தில் முதன் முதலாக வெள்ளையரையும், ஏனைய அன்னியரையும் எதிர்த்தவ்ன் மாவீரன் புலித்தேவன்தான் என்பதை அறிஞர்கள் அறிந்துகொண்டு விட்டார்கள். ம. பொ. சி. அறியாததுபற்றி நமக்கு வருத்தமில்லை. அறிஞர்களின் கருத்துப்படி ஆராய்ந்து பார்ப்பதும் நம் கடமையாகும். மாவீரன்புலித்தேவரைப்பற்றித் தமிழ்வாணன், புலியூர்க் கேசிகன், டாக்டர் ந. சஞ்சீவி டாக்டர் எஸ் கதிர்வேல் எம் எஸ சுப்பிரமணிய ஐயர், டாக்டர்.ச. செயப்பிரகாசம் எஸ். கே. சாமி, பேராசிரியர் நா. வானமாமலை, குரு குகநாதப்பிள்ளை, வெ. கிருஷ்ணன், நா. சுப்பிரமணியம், வ. வேணுகோபால், பி. முத்துத்தேவர் போன்ற அறிஞர்

களின் கருத்துக்களையும் ஆராய்ந்து பார்ப்பது நம் முடைய கடமையாகும்.

“இந்த நேரத்தில் கட்டபொம்மனைக் கொள்ளைக் காரன் என்று எவனாவது சொன்னால் அவனைக் குத்திக் கிழித்து விடுவார்கள் மக்கள்” என்று ம.பொ.சி. கூறிய நேரத்தில் தமிழ்வாணன் துணிவுடனும் அஞ்சா நெஞ்சத் துடனும் “கட்டபொம்மன் கொள்ளைக்காரன்” என்று புத்தகம் வெளியிட்டார். அதில் அரசாங்க ஆவணங் களிலிருந்து பல சான்றுகளை எடுத்துக் காட்டியுள்ளார்; ம.பொ.சி. கூறிய கூற்றுகளுக்கெல்லாம் தக்க ஆதாரங் களைக் காட்டி விளக்கியுள்ளார். மாவீரன் புலித்தேவ னைப் பற்றி அவர் கூறுவதாவது :

8. மகா வீராதிவீரனென்று பெயரெடுத்த கான்சா கிப் தமிழகத்தின் தவப்பெரும் புதல்வனான புலித்தேவ னின் போர்த்திறனுக்கு ஆற்றமாட்டாது தோற்றோடி னான்.” என்றும் “ டச்சுக்காரனாய் இருந்தாலென்ன? பிரஞ்சுக்காரனாய் இருந்தாலென்ன? ஆற்காடுநவாபபாய் இருந்தாலென்ன ? எவனாயிருந்தாலும் அவன் இந் நாட்டுக்கு அந்நியனே, அவனை எதிர்த்தே தீருவோம்.” என்று புலித்தேவன் வீர முழக்கமிட்டான் என்று “ புலித் தேவன்” என்ற நாடகநூலில் தமிழ்வாணன் கூறியுள்ளார்.

இந்த நாடக நூல் எழுதுவதற்கு முன்பு நான்கூட (ந.இராசையா)நமிழ்வாணனுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில் “ புலித்தேவனின் கதையை மாணவர்கள் நடிப்பதற் கான ஓரங்க நாடகமாக ஆக்கித் தருவீர்களா ”? என்று கேட்டேன். அதற்குத் தமிழ்வாணன் “ நிச்சயமாக புலித் தேவனின் கதை நாடகமாக விரைவில் வெளிவரும்” என்று கூறினார். அதன்ப ‘ புலித்தேவன் ’ என்ற நாடக நூல் வெளியானது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

"புலித்தேவன் வெள்ளையரை மட்டும் எதிர்க்க வில்லை, பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர், ஆதிக்க வெறி பிடித்தோர் மதவெறி பிடித்தவர்கள், உள்நாட்டு ஐந்தாம் படைக் கைக்கூலிகள் ஆகிய பலவகை ஆதிக்கங்களையும் எதிர்த்து விடுதலைப் போரை நடத்தியவன். இந்திய விடுதலைப் போராட்டத்தின் முதல் முழக்கம் செய்த முதல் இந்தியன்" என்றும் ஆனால் அதே நேரத்தில் வீர பாண்டியக் கட்டபொம்மனோ, மக்களைக் கொடுமைப் படுத்தியும், கொள்ளையடித்தும், கிட்டிபோட்டும் வரி வசூலித்தான்" என்று எஸ், கே. சாமி, "தமிழ் வீரன் பூலித்தேவன்" என்ற நூலில் எழுதியுள்ளார், மேலும் அவர் அந்த நூலில் அரசியல் சூழ்நிலைகளால் கட்ட பொம்மனைப்பற்றி அளவுகடந்து நாடெல்லாம் பிரச் சாரம் செய்யப்பட்டபோது, அவனினும் பன்மடங்கு சிறந்த மாவீரனும், அவனுக்கு முன்னரே தென்பாண்டித் தமிழகத்தில் ஆங்கிலேயரை வன்மையுடன் எதிர்த்து நின்ற மாவீரனுமான புலித்தேவனை மறந்துவிட்டார்களே என்று வருந்திக் கூறுவது நமக்கெல்லாம் பன்மடங்கு வேத னையை உண்டாக்குகிறது,

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிழக் கிந்தியக் கம்பெனியை எதிர்த்தவர்களில் முதல் வரிசை யில் புலித்தேவனைக் குறிப்பிடுகிறார் டாக்டர் ந. சஞ்சீவி அவர் கூறுவதாவது "இஸ்லாமிய, ஆங்கிலேய சக்தி களை மதுரையிலிருந்து கூட்டு முயற்சியால் தள்ளிவிட்டு, அங்கு சுதந்திர இந்து அரசை அமைப்பதை அவர் நோக்க மாகக் கொண்டிருந்தார். என்று புலித்தேவனைப் பற்றிக் கூறுகிறார் மேலும் அவர் எழுதிய "வீரத்தலைவர் புலித் தேவர்" என்ற நூலில் கூறியிருப்பதாவது :— "கட்ட பொம்மன் பாட்டனார் சுதந்திர விரோதியாய் இருந்த நாளிலிலேயே தமிழகத்தின் விடுதலைப் போரைத் தொடங்கிவைத்த மாணிக்கம், மறவர்குலத் திலகம், தமிழினத்தின் தனிப்பெரும் புகழ் நம் வீரத்தலைவர் புலித்

தேவர்'' என்றும், ''கட்டபபொம்முவும், திருவாங்கூராரும் துரோகம் இழைக்காமல் இருந்திருந்தால், கான் சாகிப்போர் நடைபெறா திருந்தால் தமிழகத்தின் அரசியல் வேறு விதமாகப் போயிருக்கும்'' என்றும் கூறுகிறார். மேலும் புலித்தேவனின் பெயர் ஆராய்ச்சியையும் சிறப்பாகச் செய்துள்ளதும், அரசாங்க ஆவணங்களையும் எடுத்துக்காட்டிச் சிறப்பாக எழுதியுள்ளார்.

டாக்டர் எஸ். கதிர்வேல் ''மறவர் வரலாறு'' (History of Maravas) என்னும நூலில் புலித்கேவரை முதல் இந்திய விடுதலை வீரர் எனப் பாராட்டுகின்றார். அமெரிக்க விடுதலைப் போருக்கும், பிரெஞ்சுப் புரட்சிக்கும் முன்னரே சுதந்திரத்திற்காக இரத்தம் சிந்திய தியாகத் தலைவர் புலித்தேவராவார் என்று கூறியுள்ளார் மேலும் அவர் நூலில் இந்திய விடுதலைக்காக நவாப்கானையும் ஆங்கிலேயரையும் புலித்வேவன் எதிர்த்தான் என்பதை 148, 149ஆம் பக்கங்களில் காணலாம்.

''Puli Thevan's Bid for the Re-Establishment of A Hindu Kingdom at Madurai'' மேலும் Proceeding of the First International Conference Seminar of Tamil Studies of Volume I என்ற நூலிலும் கூறியுள்ளதாவது.

''His was the pioneer attempt in the South and Kattabomman was only a Successor who followed the path already carved out by Puli Thevar. Though the attempt enaed abruptly due to heavy odds against it, he leaves a blazoning trail of a struggle for independence in the History of South India'' என்று கூறியுள்ளார்.

டாக்டர் ச. செயப்பிரகாசம் எழுதிய இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு என்ற நூலில் ''புலித்தேவனின் வீரமும் ராஜதந்திரமும், சுதந்திர உணர்வும், தலைமை தாங்கும் ஆற்றலும் வியந்து போற்றத்தக்க

தாகும்'' என்றும் ''தமிழ்வாணன் குறிப்பிடுவது போல கட்டபொம்மன் ஒரு கொள்ளைக்காரன் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு'' என்றும் கூறுகிறார்.

எஸ். கே. சாமி எழுதிய ''சிவகங்கைச்சீமை'' என்ற புத்தகத்தில் ''மதுரை, திருநெல்வேலி பகுதிகளில் புலித் தேவனின் விடுதலைப்புரட்சி வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது. சோழவந்தான் என்ற பகுதியையும் கைப்பற்றினான்'' என்றும் ''தமிழ்ப் பாளையங்களுக்குத் தலைவனாக இருந்த புலித்தேவனை எதிர்க்க, தமிழகத் திலே ஒண்டவந்து நிலைத்துவிட்ட கம்பளப் பாளையங் கள் கட்டப்பொம்மன் தலைமையில் தமிழ்ப் பாளையக் காரனை ஒழித்துவிடமுற்பட்டனர். நவாப்பின் கையாட் களான கம்பளப் பாளையக்காரர்கள், புரட்சித் தமிழ்ப் பாளையக்காரர்களைத் தீர்த்துக்கட்ட முனைந்தனர்'' என்றும் கூறுகிறார்.

பேராசிரியர் நா. வானமாமலை எழுதிய கான்சாகிப் சண்டை என்ற நாட்டுப்பாடல் வெளியீட்டில், ''புலித் தேவனின் வரலாறு முழுவதும் நவாப்பை எதிர்த்து அவனது ஆட்சியை ஒழிக்க அணி திரட்டுவதாகவே உள்ளது. பலமுறை தோல்வி அடைந்த பின்னரும் மீண்டும், மீண்டும் நவாபு எதிர்ப்பு, பிரிட்டீஷ் எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டு வீரத்தோடு போராடியவன் புலித் தேவன்'' என்றும், ''புலித்தேவன் மேற்குப் பாளையங் களையும் கீழ்ப்பாளையங்களையும் இணைக்கும் நோக்கத் தோடு கட்டபொம்மு நாய்க்கனைச் சந்தித்து நவாப்பை எதிர்க்கும் அணியில் சேர வேண்டிக்கொண்டான். கட்ட பொம்மு மறுத்துவிட்டான். கொள்ளைக்காரனான கட்ட பொம்மன் விடுதலைப்போர் வீரனாகவும் திகழ்ந்தான் என்பதே உண்மை'' என்றும் கூறுகிறார்.

''பதினெட்டாம் நூற்றாண்டில் பல்லாயிரம் வீரர் அணியினைக் கூட்டி, வாளெடுத்துப் போர் செய்து

எதிர்த்து நின்ற தென்பாண்டித் திருநாட்டு நெற்கட்டும் செவ்வல் பாளையக்காரன் வீரன் புலித்தேவன் என்பதை சரித்திரம் இன்றும் என்றும் கூறும். தமிழர்களின் தன் மானம் காத்த வீரனின் புகழும் அவனது வீரவரலாறு களும் மறைக்கமுடியாத சரித்திரமாயினும் மக்கள் அறியும் வண்ணம் அரசாங்கமும், ஆராய்ச்சியாளர்களும் எடுத் தாளாதிருப்பதைப் பெருங் குறையென அறிவாளிகள் உணராமலில்லை'' என்று நெற்கட்டான் செவ்வலைச் சோந்த முன்னாள் கிராம அதிகாரி வெ கிருஷ்ணன் 15-8-1972-ல் தினமலரில் வெளியிட்டுள்ள கட்டுரையில் கூறு கிறார். தமிழ்வாணன், டாக்டர் ந. சஞ்சீவி போன்றவர் கள் தங்கள் புத்தகங்களில் புலித்தேவன்பற்றி அறிய செய்தி களைக் கொடுத்தவர் வெ. கிருஷ்ணன் என்று புகழ்ந்து இவரைப்பற்றிக் கூறியிருப்பதிலிருந்து புலித்தேவர் ஆராய்ச்சியில் இவர் மிகவும் ஈடுபாடுகொண்டவர் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

''புரட்சித் தலைவன் புலித்தேவன்'' என்ற நாடக நூலில் வ. வேணுகோபாலன் கூறுவதாவது:—

''நம்நாடு, தென்நாடு, வடநாடு, என்ற பிரிவில் உள்ளது. தென்னாட்டில் முதன் முதல் விடுதலைப்போர் முரசு கொட்டியவர்களில் புலித்தேவன் முதலிடம் பெறு கின்றான். புலித்தேவனைப்பற்றிப் பல படியாகச் சிறப் பித்து வரலாறுகள் கூறுகின்றன.'' என்றும்,

''மேல்நாட்டு ஆசிரியர் பலரும் போற்றிய மாவீரன் புலித்தேவன். விடுதலை உணர்ச்சியைத் தமிழ் மக்க ளிடையே ஊட்டி, தமிழினத்தின் உயர்வை நிலைநிறுத்திய ''புரட்சித் தலைவனே, புலித்தேவன்.'' என்றும்,

''வரி மறுத்த புலித்தேவனுக்கு எதிராகப் போரிட்ட வர்கள் வெள்ளையரும், முகலாயருமாவர். அவர்களு

டன் கட்டபொம்மனும் சேர்ந்துகொண்டான். தெலுங்குப் பாளையங்கள் எதுவும் புலித்தேவனுக்கு உதவவில்லை. அதுமட்டுமா; புலித்தேவனின் புரட்சி இயக்கத்துக்கு எதிராக வெள்ளையனுடன் கட்டபொம்மன் சேர்ந்துகொண்டான் என்பது, தமிழினத்தைக் காட்டிக் கொடுத்தான் அவன் என்பதையே எடுத்துக்காட்டுகிறது" என்று கூறுகிறார்.

மாவீரன் புலித்தேவனைப்பற்றி பி. முத்துத்தேவர் "மூவேந்தர்குலத் தேவர் சமூக வரலாறு" என்ற நூலில் கூறுவதாவது :—

"தமிழ் நாட்டில் அரசுரிமைப் பாத்தியம் கோரும் அன்னியர்களை உயிருடன் பாரத மண்ணில் மிதிக்க விடேன். அன்னியர்க்குத் தமிழ்நாட்டில் வரிவசூல் செய்யும் உரிமையை எந்தத் தமிழனும் வழங்கவில்லை என்றுநவாப்புக்கும், கம்பெனியார்க்கும் தெளிவாய்த் தெரிவித்தான். அதுகாலை புலித்தேவனை ஆதரித்து நின்ற பாளையங்கள் ஒவ்வொன்றிலும் 10,000 முதல் 30,000 படைபலம் தக்க ஆயுதங்களுடன் இருந்தது. நவாப்பை எதிர்த்து வரிகொடாப் பிரகடனம் செய்த புலித்தேவனைப் பாளையங்கள் பெரிதும் ஆதரித்தன. மேலும் வரிகொடா இயக்கத்தைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று, மதுரை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டைப் பிரதேசங்களின் மன்னர்கள். தன்னரசுத் தலைவர்கள், பாளையக்காரர்கள் ஆகியவர்களுக்கு ஒற்றர்கள் மூலம் ஓலையனுப்பி நவாப்பையும் கம்பெனிப் படையையும் எதிர்க்கவும், கப்பமோ, தீர்வையோ செலுத்தக்கூடாது என்றும் தெரிவிக்கலாகியது. தென் தமிழகம் வரிகொடா இயக்கத்தைப் பூலித்தேவன் தலைமையில் நடத்தியது" என்று கூறுகிறார்.

Dr. K. Rajayyan, Professor of Madurai University by "Rise And Fall of the Polligars of Tamil Nadu" page 44.

"When the forces advanced a few miles, Maphuz khan Prcvailed upon Heron for undertaking expedition against Puli Thevar Most formidable and talinted of the chieftains of the western region of Tirunelveli"

மேலும் அவருடை "History of Madurai" என்ற புத்த கத்தில் 44, 45, 46, 47, 50, 51, 52, 54, 55, 56, 57, 58. 79 ஆகிய பக்கங்களில் புலித்தேவரைப் பற்றிய குறிப்புக் களைக் காணலாம்.

An Extract from S. C. Hill's எழுதிய "Yuseef Khan" The Robel Commeudand 1914 என்ற புத்தகத்தில் புலித் தேவரைப்பற்றி 35, 39, 40, 50, 58, 60, 98, 101, 104, 258 ஆகிய பக்கங்களில் குறிப்பிட்டுள்ளார்,

Records of Fot St George Country Correspondence Military Department 1758 என்ற நூலில் புலித்தேவரைப் பற்றி 23, 25, 29, 31, 37, 38, 43, 84. 92, 99, ஆகிய பக்கங் களிலும் நெற்கட்டான் செவ்வலைப்பற்றி 14, 21, 23, 29, 30, 31, 106 ஆகிய பக்கங்களிலும் குறிக்கப்பட்டுள்ளது.

Marchand's "precis Historique" paris—1771 என்ற பிரெஞ்சு மொழியில் வெளியிட்டுள்ள வரலாற்று நூலில் பக்கம் 10-ல் புலித்தேவனைப் பற்றிய குறிப்புகள் கூறப் பட்டுள்ளது.

திரு. சிரஞ்சீவி எழுதிய "வீரபாண்டியக்கட்ட பொம்மன்" என்ற நூலில் ஊரின் பெயர் வந்ததற்கான காரணத்தைக் கூறுகிறார். "நெற்கட்டான் செவ்வல்" என்று பக்கம் 288ல் கூறுகிறார்.

"திருநெல்வேலிச் சீமைச்சரித்திரம்" என்ற நூலில் புலித்தேவனைப் பற்றிப் பக்கம் 866-67ல் கூறியுள்ளார். "நெற்கட்டான் செவ்வல்" பற்றிப் பக்கம் 66-ல் கூறி யுள்ளார்.

"மெர்க்கன்சியின் சுவடிகள்" என்ற தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆராய்ச்சித்துறையினர் வெளியிட்டுள்ள "பாளையப் பட்டுக்களின் வம்சாவளிகள்" பகுதி 1 புத்தகத்தில் புலித்தேவனின் பெயர்க் காரணம் பற்றிய குறிப்புகள் கூறப்பட்டுள்ளன.

An extraet from Robert ORME'S History of the Military transactions of the British nation in Indostan" 1861 என்ற நூலில் பக்கம் 565ல் புலித்தேவனைப் பற்றிய குறிப்பு கூறப்பட்டுள்ளது.

திரு. பேட்டி I.C.S. என்பவர் 1917ல் "திருநெல்வேலி கெசட்" என்ற நூலில் 70-71, 72-73, 376, 387—388, 408, 420 ஆகிய பக்கங்களில புலித்தேவரைப் பற்றிய குறிப்புகள் கூறப்பட்டுள்ளன.

அறிஞர் எஸ்.சி. ஹால் எழுதிய "யூசப்கான்-புரட்சித் தளபதி" என்ற ஆங்கில நூல் 1914ல் வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 39-40ல் புலித்தேவனைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் சி.எஸ். சீனிவாசகாச்சாரியார் எழுதிய "ஆனந்தரங்கம்பிள்ளை" என்ற நூலில் பக்கம் 355ல் புலித்தேவனைப்பற்றிய செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். புலித்தேவனின் கோட்டை இடிப்பட்ட துயரச்செய்திகளையும், பாளையக்காரர்களில் புலித்தேவன் ஒருவனே பணிந்து போகாமல் இருந்தான் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

"Extract from the Tənnevelly Gazatter 1917" என்ற நூலில் 70-71, 72-73, 376, 387-88, 408, 420, ஆகிய பக்கங்களில் புலித்தேவனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

கால்டுவெல் எழுதிய "திருநெல்வேலி வரலாறு" என்ற நூலில் புலித்தேவர் பற்றிய செய்திகள் 92,376 ஆகிய பக்

கங்களில் கூறியுள்ளார். மேலும் கட்டபொம்மன் "பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையிலிருந்து ஆயுதமேந்திய துணைவர்களுடன் கிராமங்களைத் தாக்கிக் கொள்ளையடிப்பதுடன், கிராமத் தலைவர்களையும் தூக்கிக் கொண்டு போவான்" என்று 173-ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

Lt. Gol, Heran Marches Against Nelli Tangaville and is Amused By the poligar (இந்துஸ்தான்வரலாறு I) பக்கம் XXXVI iii. இதில் வெள்ளையர்களைப் புலித்தேவன் தாக்கிய செய்திகளைக் கூறியுள்ளார்.

கி.பி. 1764ம் ஆண்டில் வெளியிட்டுள்ள "இந்துஸ்தான் வரலாறு" என்ற நூலில் ஆயிரம் பக்கங்களுக்குமேல் எழுதியவரான இராபர்ட் ஓம் என்பவர் புலித்தேவரை மட்டும் முப்பது இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையிலிருந்து வெளியாகும் "தேவர் குரல்" என்ற மாத ஏட்டில் "மாவீரன் புலித்தேவனைப் பற்றி "முதல் விடுதலைக்குரல்" தமிழகத்தின் முதல் விடுதலைப் போர்' 'இந்திய சுதந்திரப் போராட்டமுதல் வீரன்' என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளார் அதன் ஆசிரியர் டாக்டர் வீ. இராமகிருஷ்ணன்.

"அகம்படியார்" என்ற மாத இதழில் (1982) புலித்தேவனுக்குரிய வரலாற்றுச் சான்றுகளை விளக்கி, "முதல் முழக்கம் முழங்கியவன் புலித்தேவனே" என்று அதன் ஆசிரியர் பாண்டியன் சேர்வை விளக்கியுள்ளார்.

"தமிழக வரலாறும் பண்பாடும்" என்ற நூலில் "பாளையப்பட்டுக்களில் சுய ஆட்சி உரிமைப் போராட்டம் பரவியது. நெல்லையில் மேற்குப்பகுதியில் புலித்தேவனும், கிழக்குப் பகுதியில் கட்டபொம்மனும் தலைமை தாங்கி ஆங்கிலேயரை எதிர்த்தனர்" என்று டாக்டர் ஐ. அண்ணாமலை கூறுகிறார்.

கல்கண்டு, கலைமகள், சுதேசமித்திரன், தினமலர் போன்ற ஏடுகளும் இந்திய விடுதலை இயக்கத்தில் புலித் தேவனின் மகத்தான தொண்டுபற்றிய கட்டுரைகளை வெளியிட்டுள்ளன.

"வீரத்தலைவர் புலித்தேவர்" என்னும் நூலை டாக்டர் ந. சஞ்சீவி எழுதியுள்ளார். இதற்கு ஆங்கில நாளேடான இந்து பத்திரிக்கையில் கீழ்கண்டவாறு மதிப்புரை வெளியிட்டுள்ளது.

"This is the life story of a warrior who boldly fought against the British forty four years before Katta Bomman fought the East India Company. His valour, his knowledge of military strategy and the art of diplomacy is well brought out in this powerfully drawn portrait, we see from his Narrative that polli Thevar could not have been defeated if Katta Bomman's Grandfather and the king of Travancore had not aided the British. The author has given in the appendices the Sourees from which he got the material for this historical piece. Students of history will find this book useful and interesting

இதன் தமிழ் மொழி பெயர்ப்பாவது :-

கட்டபொம்மன், கிழக்கிந்தியக் கம்பெனியாரை எதிர்ப்பதற்கு 44 ஆண்டுகளுக்கு முன்பே, ஆங்கிலேயர்களை மிகவும் எதிர்த்தான் என்று புலித்தேவனுடைய வரலாறு கூறுகிறது அவனுடைய தைரியமும், படை நடத்திச் செல்லக் கூடிய நுண்ணறிவும், அரசியல் சாணக்சியத்துவமும், அவனுடைய வீரமும் இந்த வரலாற்றின் மூலம் அறிய முடிகிறது.

''திருவாங்கூர் மன்னனும். கட்டபொம்மனின் பாட்டனும் கும்பினியருக்கு உதவி செய்யாதிருந்தால், புலித்தேவனை குமபினியார் வெல்ல முடியாமல் போயிருக்கும்'' என்பதை இந்த வரலாற்றிலிருந்து நாம் அறிந்துகொள்ள முடிகிறது. இந்த வரலாற்றை எழுநிய ஆசிரியர் பல ஆதாரங்களைக் கொடுத்துள்ளார். அந்த ஆதாரங்களிலிருந்து இவனுடைய வரலாற்றுக்குத் துணைபுரிகிறார். வரலாறு படிக்கும் மாணவர்களுக்கு இந்த நூல் படிப்பதற்கு ஆர்வமுளள்தாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்'' என்று இந்து நாளிதழ் எழுதியுள்ளது.

புலித்தேவனின் பூர்வீகம் :-

புலித்தேவனின் முன்னோர்கள் இராமநாதபுரம் பகுதியிலுள்ள ஆப்பநாடு, கிளுவைநாடு, அகப்பநாடு, ஆன்மநாடு ஆகிய பகுதிகளிலிருந்து வந்தவர்கள் என்று அறியப்படுகிறது. திசைக்காவலுக்காக நியமிக்கப்பட்டார்கள். பின்னர் நெற்கட்ட்ான் செவ்வலிலுள்ள பகடைகளின் சொத்துக்களை இருளப்பிள்ளை என்பவர் பறிமுதல்செய்து தனதாக்கிக்கொண்டார். இந்தச்செய்தியை, பகடைகள் எல்லோரும் சேர்ந்து புலித்தேவரிடம் கூறினர். உடனே புலித்தேவர் ஆத்திரங்கொண்டு புலியெனப் பாய்ந்து இருளப்ப பிள்ளையைக்கொன்று அச்சொத்துக்களை மீட்டார். அன்றுமுதல் பகடைகள் மாவீரன் புலித்தேவனின் தலைமையில் செயல்பட்டார்கள்.

புலித்தேவரின் உறவினர்களில் ஒரு பிரிவினர் இங்கிருந்து நெல்லைமாவட்டததில் முக்கூட்ல பகுதிக்குச்சென்று வாழ்ந்தனர். அங்கு புலித்தேவரின் பெயரில் ஏராளமான சொத்துக்கள் இருப்பதாகத்தெரிகிறது. அப்பகுதியில் அன்னச்சத்திரம் கட்டிவைத்திருப்பதாகவும் தெரியவருகிறது. அது ''புலித்தேவரின்மடம்'' என்று தற்போதும் வழங்கி வருகிறது.

இளமைக்காலம் :-

புலித்தேவர், சித்திரபுத்திரத்தேவர், சிவஞான நாச்சியார் என்பவர்களுக்கு 1714-ல் மகனாகப்பிறந்தார். இவருடைய பெற்றோர் இவருக்குக் காத்தப்பதுரை என்று பெயரிட்டனர். இளமையில் தெய்வ ஆராதனை செய்து ஞானியாக விளங்கினார். வாணிகச் செட்டியார், வள்ளுவர் என்ற ஆசிரியர்களிடம் ஆரம்பக்கல்வியைக் கருத்துடன் கற்றார். 10வயதில் இலஞ்சியைச் சேர்ந்த சுப்பிரமணிய ஆசிரியரிடம் சன்மார்க்க நெறியைப் பயின்றார். அதன்பின்னர் நூலாராய்ச்சியில் வல்லவராகத் திகழ்ந்தார். தமிழில் இலக்கண, இலக்கிய நூல்களைச் செவ்வவனே பயின்றார். கவிதை எழுதும் ஆற்றலையும் பெற்றார். தனது 12 வயதில் யானையேற்றம், குதிரையேற்றம், குஸ்தி, வாள்வீச்சு, கரடி, புலி, சிலம்புவரிசைகள் ஆகியவற்றைச் செவ்வனே முறைப்படிக் கற்றுத் தேர்ந்தார்.

பின்னர் இவருடைய இல்லக்கிழத்தியராக கயல்கண்ணி என்ற இலட்சுமி நாச்சியார் விளங்கினார். இவருடைய மைத்துனர் சவணத்தேவர். புலிதேவருக்கு, சிவஞான பாண்டியன், சித்திரபுத்திரத்தேவர் என்ற இரண்டு ஆண்பிள்ளைகளும், கோமதி முத்துத்தலவச்சி என்ற பெண் மகவும் பிறந்தனர். இந்த அம்மையாரின் பெயரால் "கோமதி முத்துபுரம்" என்ற ஊர் உள்ளது. இந்த ஊர் பனையூருக்கு வடக்கே ஒருகல் தொலைவில் உள்ளது.

இவர்கள் முன்னோர் நெற்கட்டான செவ்வலுக்குக் கிழக்கே புதுக்கோட்டை என்ற இடத்தில் ஆதியில் கோட்டை கட்டி வாழ்ந்தார்கள். அதன் பின்னரே தற்போதுள்ள நெற்கட்டான் செவ்வலில் கோட்டையைக் கட்டிக் குடியேறினர் என்று தெரிகிறது.

இந்தப் புதுக்கோட்டை கும்பினியாரின் தாக்குதலால் அழிவுற்றது. அந்த இடம் இன்றும் இடிந்த மேடாகக்

காணப்படுகிறது. இந்த ஊரின் பெயரையே, ''ஆவுடையாள் புரம்'' என்று ஆங்கிலேயர்கள் மாற்றிவிட்டனர். இச்செய்தியை திருநெல்வேலி கெசட்டில் 11-14, 70, 71, 72, 412 ஆகிய பக்கங்களில் காணலாம்.

புலித்தேவன் பெயர் ஆராய்ச்சி :—

டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் தனது நூலில் புலித்தேவனின் பெயர் பற்றிய ஆராய்ச்சி செய்துள்ளார்.

1. **பூலி–த்தல்** என்றால் உடம்பு பூரித்தல். அதனால் புலித்தேவனுடைய உடம்பு அமைப்பு அவ்வாறு இருந்தது. அதனால் அப்பெயர் ஏற்பட்டது.

2. பூல்-பூலா என்ற செடியின் பெயரை வைத்திருக்கலாம். இயற்கைப் பெயரைச் சூடுதல் பண்டைய தமிழ் மரபு அதனால் அப்பெயர் ஏற்பட்டது என்று கூறுகிறார்.

3. தமிழ்வாணன் தனது 20-7-58-ல் வெளியிட்டுள்ள கல்கண்டு இதழில் ''புலித்தேவர்'' என்றும் ''பூலித்தேவர்'' என்றும் வழங்கப்படுகிறது என்று கூறுகிறார்.

4. பூலித்தேவன் வெள்ளையர் கைகளில் சிக்கி கைது செய்யப்பட்டு, தூக்குக் கயிற்றிலோ, துப்பாக்கி முனையிலோ, கோழையைப்போல சாகாமல் சங்கான் கோவில் சுரங்கத்திற்குள் புலித்தேவன் சிவனுடன் ஐக்கியமாகி விட்டான் என்பதால் ''பூலி சிவஞானம்'' என்று பெயர் வந்ததாகப் பழைய ஏட்டுப்பிரதிகள் கூறுவதாக எஸ். கே. சாமி ''தமிழ் வீரன் புலித்தேவன்'' என்ற நூலில் கூறுகிறார்.

5. மெர்க்கன்சியின் சுவடிகளிலுள்ள ''பாளையப் பட்டு வம்சாவளிகள்'' என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆராச்சித்துறையினரால் வெளியிட்டு

உள்ள நூலில் I பகுதியில் புலித்தேவனின் பெயர்க் காரணத்திற்கான குறிப்புகள் காணப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு கீழ்த்திசை நூலகச் சுவடி மெர்க்கன் சியின் ஏட்டுப்பிரதியிலிருந்து "பாளையப்பட்டுக்களின் வரலாறு" தொகுதி—1-ல், "ஆவுடையார் (ப்) புரம் பாளையக்காரர் வம்சாவளி" என்ற தலைப்பில் நிட்டல நாயுடு குமாஸ்தா என்பவரால் தெலுங்கில் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ள நூலில் புலித்தேவரைப்பற்றிக் கூறி இருப்பதன் சுருக்கம் வருமாறு —

மதுராபுரிப் பட்டணத்துக்கு மேற்கேயுள்ள நாகமலையில் ஒரு பதினாறடி வேங்கைப் புலியானது மக்களைக் கொன்று குவித்து வந்தது. இதனை அறிந்த மதுரை மன்னன் மக்களுக்கு, "யார் புலியைக் கொல்லுகிறார்களோ அவர்களுக்கு கிராமத்தையே பரிசாகக் கொடுத்து, பலவகையான சன்மானங்களும் வழங்கப்படும்" என்று ஓர் அறிவிப்புக் கொடுத்தான். பலரும் புலியைக் கொல்லச் சென்று மாண்டனர். இதை அறிந்த நெற்கட்டான் செவ்வல் பாளையக்காரன் சென்று புலியைக் கொல்லச் சென்றான். "யானையிடத்தில் போர்ச் சிங்கமானது போவதுபோலச் சென்றான். புலியானது கர்ச்சனை செய்து பாய்ந்தது. உடனே தன் கையிலிருந்த கட்டாறியால் புலியைக் குத்திக்கொன்றான். மதுரை மன்னன் பெருமகிழ்ச்சி எய்தப் பெற்றவனாய் "வரகுணராம சிந்தாமணி புலித்தேவன்" என்ற பட்டமும் வழங்கினான். பின்னர் புலித்தேவனைப் பல்லக்கிலேற்றி, மீன் கொடி, பச்சைக்குடை, உபசாமரம், வெள்ளித்தடி, முதலானவையும் கொடுத்து, பட்டுப் பீதாம்பரங்கள் அணிவித்து மதுரை நகரில் வலம்வந்து, ஏற்கனவே ஆண்டுவந்த பாளையத்தையும் பரிசாக வழங்கினான். பின்னர் சேர நாட்டிற்கும் படைவீரர்களை வழங்கி நல்ல முறையில் ஆண்டுவந்தான்.

பின்னர் அவன் குமாரன் வடக்காத்தான் புலித்தேவன் சாலிவாகன சகாப்த்தம் 1346-ல் பட்டத்திற்கு வந்தான். அதன் பின்னர் சமசதித் தேவனுடைய தம்பி காத்தப்பத் தேவன் பட்டத்திற்கு வந்தான். பின்னர் இவன் குமாரன் காத்தப் புலிக்கத் தேவன் பட்டத்திற்கு வந்தான் பின்னர் முறையே சித்திர புத்திரத்தேவன், காத்தப்ப புலித்தேவன், சித்திர புத்திரத் தேவன், காத்தப்ப புலித்தேவன் முறையே ஆண்டுவந்தார்கள்.

காத்தப்புலித்தேவன் தினமும் அதிகாலையில் குளித்து வேதியர்களை வைத்துக் கடவுள் வழிபாடுசெய்தும், அன்ன தானம் செய்தும், ஆடைகள் வழங்கியும் வந்தான். அதன் பின்னரே காலை உணவு உண்பான்.

இவரிடம் பணிபுரியும் பணியாளுக்கு 12 மரக்கால் 6 கலம் நெல்லும், மனைவிக்குத் தேவையான புடவைகளும் வழங்கினார்.

ஒரு நிமிடம்கூட காலத்தை வீணாகக் கழிக்காமல் ஆசிரியர் போதனைகளைக் கேட்டுக்கொண்டே இருப்பார் வசதி இல்லாதவர்களுக்கு 100 பொன், 200 பொன் என்று கொடுத்து, பிரமச்சாரிகளின் திருமணத்தையும் முன் னின்று நடத்தி வந்தார்.

இவருக்கு வயது 18 ஆகும்போது சிவகிரிப்பாளையக் காரன் 3000 பேருடன் வந்து இவரது கிராமத்திலுள்ள மாடுகளைக் கொள்ளையிட்டுச் சென்றான். இதை அறிந்த காததப்புலித்தேவன் பாலாவை எடுத்துக்கொண்டு, தன் னுடன் 150 போர் வீரர்களையும் அழைத்துக்கொண்டு சென்று சிவகிரிப்பாளையப் போர் வீரர்களைக் கத்திகளி னாலும், பாலாக்களினாலும் குத்தித் தள்ளிக் கொன்றார் கள். வாசுதேவ நல்லூரிலிருந்து சிவகிரிவரைப் பிணக்குவிய லாய்க் கிடந்தது. தமது ஆநிரையை மீட்டிக்கொண்டு

வெற்றிகரமாகக் காத்தப்பபுலித்தேவன் தன் ஊர் திரும்பி னான். பண்டைய தமிழர் போர் நெறியை இது காட்டு கிறது.

இச்செயலிலிருந்து புலித்தேவனின் பெயரைக் கேட் டால் 72 பாளையங்களுக்கும் சிம்ம சொப்பனமாயிருந் தது மண்கோட்டையை வைத்துக்கொண்டு மூன்றாண்டு கள் இரவும் பகலுமாகப் போர்புரிந்து தனி வீரனாயிருந்து 42 ஆண்டுகள் அரசாண்டான். இவன் புரிந்த போரை மிக வும் பாராட்டிக் கூறுவதிலிருந்து புலித்தேவனின் வீரம் பளீரென்று சுடர்விட்டு மின்னுகிறது, இதுவரையிலும் "காத்தப்பசாமி புலித்தேவன்" என்று அழைக்கப்பட்ட வனே இவ்வரலாற்றில்வரும் புலித்தேவனாவான். இப் புலித்தேவனே புலியைக் கொன்றவனாக இருக்க வேண் டும் இவனுடைய முன்னோர்களில் பலர் "புலித்தேவன்" என்ற பெயரைத் தாங்கியிருப்பதால் இது ஆராய்ச்சி செய்யக்கூடிய நிலையில் உள்ளது. எனவே "புலித்தேவன்" என்ற பெயரே "பூலித்தேவன்" என்று வழக்கில் வந்திருக் கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

6. ஏட்டுப்பிரதிகளில் இவருடைய பெயர் ஏற்பட்ட தற்கான காரணமாகக கூறப்படுவதாவது :—

மதுரையில் சொக்கநாதர்-மீனாட்சி திருக்கோயிலின் வடக்கு வாசலில் புலியொன்று படுத்துக்கொண்டு, வழி பட வருபவர்களை அச்சுருத்திக்கொண்டிருந்தது. எவரா லும் அதை அடக்க முடியவில்லை. மதுரை மன்னன், எல்லாப் பாளையக்காரர்களுக்கும் உடனடியாக வரும்படி ஒலை அனுப்பினான். காத்தப்பதுரை என்று அழைக் கப்படும் புலித்தேவரும் மதுரை வந்து சேர்ந்தார். புலியைக் கொல்வோருக்கு காக்காத்தோப்பு அரண்மனை யும், ஏனைய வெகுமதிகளும் பரிசாகத் தரப்படும் என்று மதுரை மன்னன் அறிவித்தும் யாரும் முன்வரவில்லை.

மாவீரன் புலித்தேவன்தான் புலியை அடக்குவதாகக் கூறி முன்வந்தான். ஏற்கனவே புலியை அடக்கவேண்டிய முறைகளையெல்லாம் கற்ற வீரனானதால், துணிவுடன் புலியை அடக்க முனைந்தான். புலியோ தன் கோரப் பற்களைக்காட்டி, வாலைத் தூக்கி, குபீரென்று புலித் தேவன்மீது பாய்ந்தது. ஆனால் மாவீரன் புலித்தேவனோ இடது பக்கமாகப் புலி கீழே விழுமாறு வலதுபுறமாக ஒதுங்கினான். இடது பக்கமாக விழுநத புலியின் பின்னங் கால்கள் இரண்டையும் பிடித்துக் கரகரவென்று இழுத்து, தரையில் ஓங்கி அடித்தான். அடியைத் தாங்கமாட்டா மல் புலி உருமிக்கொண்டு ரத்தம் சிந்தி இறந்தது. உடனே மதுரை மன்னன் புலித்தேவனுக்கு "வடக்கு வாசல் காத்தான் புலி" என்ற பட்டத்தையும் சூட்டினார். அதன் பின்னர் பல வெகுமதிகளும், காக்காய் தோப்பு அரண்மனையும் அவருக்குப் பரிசாக வழங்கப்பட்டது. அன்றிலிருந்து காத்தப்பதுறை என்ற பெயர் மாறி. "புலித் தேவர்" என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார். அன்றிலிருந்து புலித்தேவரின் பெயரும், புகழும் தென் தமிழகம் முழுவதும் விளங்கலாயிற்று.

நெற்கட்டான் செவ்வல் :

புலித்தேவன் வாழ்ந்த ஊர் நெற்கட்டான் செவ்வல். திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன் கோவிலுக்கு வட மேற்கே சுமார் 7 கல் தொலைவிலுள்ளது. இந்த நெற் கட்டான் செவ்வல்.

அன்னியன் எவனும் தன்னுடைய பகுதியில் வரி வசூலிக்கும் உரிமையைத் தனதாக்கிக்கொண்டு காலடி எடுத்து வைக்கக்கூடாது, வரி என்ற பெயரால் ஒரு மணி நெல்லைக்கூட கட்டுவதில்லை" என்று ஆணையிட்டான். அன்றுமுதல் அந்த ஊர் நெற்கட்டான் செவ்வல் என்ற பெயரைப் பெற்றது.

இவ்வூரின் பெயர் ஏற்பட்டதற்கு வேறு ஒரு காரண மும் சொல்லப்படுகிறது ஆதியில், கோட்டை இருந்த இடத்தில் ஏராளமான நெக்கட்டான் செடி வளர்ந்து இருந்ததாகவும் அச்செடியின் அடியில் இருந்த முயல் வேட்டைக்குச் சென்ற நாய்களை எதிர்த்து நின்று போரிட்டது எனவும் அதன் பெருமையை உணர்ந்த பின்னரே அந்த இடத்தில் கோட்டை கட்டப்பட்டது எனவும் கூறப்படு கிறது.

இந்த "நெற்கட்டான் செவ்வலில், வெள்ளையரை எதிர்ப்பதில் புலித்தேவனுக்கு உதவியாக முன்னணியில் இருந்தவர்களில் பகடை நொண்டி வீரனும், வெண்ணிக் காலாடியும் குறிபபிடத்தக்கவர்கள் இவர்களுடன் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் தளபதிகளாக 350 பேர் இருந்திருக்கிறார்கள். இவர்களைக் கம்புக்காரர்கள். என்று எல்லோரும் அழைப்பர். இவர்கள் சேவையைப் பெருமைப்படுத்தி ஏராளமான மானியம் புலித்தேவரால் வழங்கப்பட்டது. இதற்கு ஆதாரமாகச் செப்புப்பட்டயமும் இருக்கிறது. வெண்ணிக்காலாடி, பகடை நொண்டி வீரன் ஆகியவர்களுக்கு சிலை வைத்து வழிபாடு செய்யும் வழக்கம் இன்றும இவ்வூர் மக்களிடத்திலிருந்து வருகிறது.

நெற்கட்டான் செவ்வலைத் தாக்குவதற்காகக் கும்பினியர் பாளையப்பட்டாரை நோக்கி, எங்களிடமுள்ள பட்டாக்கத்தியை எடுத்து, பட்டத்துக் குதிரையையும் பிடித்து, வெங்கல நகராவையும் முழக்கி வெற்றி பெற்றால் நாங்கள் இந்தச் சீமையை விட்டே சென்றுவிடுகிறோம் என்று வாய்க்கொழுப்பாகப் பேசினாராம். உடனே புலித்தேவனின் படைவீரனான பகடை நொண்டி வீரன் தனக்கு அனுமதி கொடுத்தால் வெற்றி பெற்று வருவதாகப் புலித்தேவனிடம் கூறினான். புலித்தேவனும் அவனை வாழ்த்தி வழியனுப்பினான் பகடை நொண்டி வீரன் பிச்சைக்காரனைப் போல வேடம் போட்டுக்

கொண்டு, கும்பினியாரை அணுகி, "நான் ஒரு பகடை குதிரைக்கு வார் கட்டுவேன், பூட்ஸ் செய்வேன்" என்று சாமர்த்தியமாகப் பேசி அங்கேயே வேலைக்கு அமர்ந்து, எல்லா விவரங்களையும ரகசியமாகத் தெரிந்துகொண்டு இருந்தான். ஒருநாள் இரவு பட்டத்து வாளை, யாரும் அறியா வண்ணம் கவர்ந்துகொண்டு, பட்டத்துக் குதிரையைப் பிடிக்கும்போது அது கலவரப்படடு ஓடியது. அதைக்கண்ட கும்பினியப் போர் வீரர்கள் குதிரையைப் பிடித்துக் கொண்டுவந்து கட்ட. வந்தார்கள். இதைக் கண்ட நொண்டிவீரன் குதிரையின் காடிக்குள் தன்மேல புல்லைத் தூவிக்கொண்டு யாரும் அறியாவண்ணம் மறைந்துகொண்டான் கும்பினியர், குதிரையின் முளையை நொண்டிவீரன் கைமேலேயே அரைந்துவிட்டார்கள் அந்தக் கொடிய நிகழ்ச்சியின்போது எந்தவிதமான அபாயக்குரலும் கொடுக்காமல் வலியைத் தாங்கிக் கொண்டான். நொண்டிவீரன், அவர்கள் சென்றவுடன் தன் கையை வெட்டியெடுத்து, பட்டத்துக் குதிரையையும் பிடித்துக்கொண்டு, கும்பினியர், நெற்கட்டான் செவ்வலை நோக்கிவைத்திருந்த பீரங்கியையும் கும்பினியரின் படையின் பக்கம் திருப்பிவைத்தான். பின்னர் வெங்கல நகாரவை அடித்தான். உடனே பகைவர் வந்துவிட்டாரென்று கும்பினியர் பீரெங்கியை இயக்கினர். ஆனால் பீரங்கி கும்பினியரின் படை முகத்தை நோக்கிக் குண்டு மாறிப் பொழிந்து எறிந்தது. நொண்டி வீரன் பட்டத்து வாளையும், பட்டத்துக் குதிரையையும் புலித்தேவரிடம் ஒப்படைத்தான். நொண்டிவீரனின் ஒருகை போனதை அறிந்து பலர் அவனிடம் வருத்தப்பட்டனர். ஆனால் நொண்டிவீரனோ" "இந்தக்கை போனாலென்ன? எங்க மகாராசா புலித்தேவர் தங்கக் கைகொடுப்பார்" என்றானாம். இதிலிருந்து நொண்டி வீரனின் வீரமும், புலித்தேவருடைய பெருமையும் நன்கு விளங்கும். இந்தச் செய்தி நாட்டுப் பாடல்களிலிருந்து தெரிய வருகிறது.

புலித்தேவனின் பணிகள் :

தென்பாண்டிச் சீமையின் மூலை முடுக்கெல்லாம் போர் அபாயம் குடிகொண்டிருந்த நேரத்திலும் மாவீரன் புலித்தேவன் மக்களுக்கு நன்மை செய்யும் பணியையும் மறக்கவில்லை. மக்களின் சேவையே மகேசனின் சேவை யாகக் கொண்டான். நெற்கட்டும் செவ்வலில் கன்னி காத்த விநாயகர் கோவில், உள்ளம் உடையார் கோவில், ஆகியவற்றைக் கட்டினான்.

சங்கரன் கோவிலுக்கு மேற்கே இடமலைத் தொண் டில் ஆனையூருக்கு அருகில் வழிப்போக்கர்கள் தங்குவ தற்கு மண்டபம் கட்டி, கிணறும் வெட்டி வைத்தான். உணவும் வழங்கினான். இன்றும் இப்பகுதியில் நாட்டுப் பாடல்கள் பாடுவதிலிருந்து இது தெரியவருகிறது.

> ''பங்கமில்லா இடமலைத் தொண்டிலே
> தங்கும் மண்டபம் கட்டிவைத்தார்
> லட்சுமி கடாச்சியம் பேர் துலங்கவே
> நதியும் வெட்டி நந்தவனமும் கட்டிவைத்தார்''

திருநெல்வேலியிலும் பல நன்மைகளைச் செய்துள் ளான். நெல்லையில் புலியூர் அக்ரகாரத்தை உண்டாக் கினான். இதன் காரணமாகப் புலி புதுத்தெரு, பூதத்தான் முடுக்குத்தெரு, என்ற பெயர்கள் இன்றும் வழங்கி வருகின் றன. நெல்லையில் வாகையாடி அம்மன் கோவிலையும் கட்டி,அதற்காக நிலக்கொடையும் வழங்கினான் என்றும் தெரியவருகிறது.

சீவலப்பேரியில் மண்டபமும் கட்டி அன்னதானமும் செய்தான் என்று அங்குள்ள ஸ்தல வரலாறு கூறுகிறது. இன்றும் அம்மண்டபம் ''புலித்தேவன் மண்டபம்'' என்று வழங்கி வருகிறது. புலித்தேவன் பெயரில் ஏராள மான நிலங்களும் உள்ளன.

சங்கரன் கோவில் சபாபதி மண்டபமும், தெப்பமும் வெட்டிவைத்தான். ஆலயபூசைக்கும், அந்தணர்களுக்கும் கூடநல்லூர் நஞ்சையில் இறைவன் பவனிவரப் பல்லக்கும், பிற அணி வகைகளும் வழங்கினான்.

கரிவலம் வந்த நல்லூரிலுள்ள கோவிலின் மூன் மண்டபம் கட்டி, உண்டியலும், வெள்ளி வாகனமும், தேரும் அமைத்தான், என்று தெரிகிறது. 30 ஏக்கர் நஞ்சையும் ஏராளமான ஆபரணங்களும் வழங்கினான். இந்த மண்டபத்தில் மாவீரன் புலிததேவன் இறைவனை வணங்கும் தோற்றத்துடன் கற்சிலை உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மதுரையிலுள்ள சொக்கநாதர் கோவிலுக்கு ஏராளமான நகையும், வாகனமும், வழங்கியுள்ளான். இதற்கிடையில் மக்களின் உணவுப் பிரச்சனைகளையும், தொழில் பிரச்சனைகளையும் கவனித்து வந்தான். போர் செய்யும் தொழிலோடு நிலத்தை உழுது பயிர் செய்து விளைச்சலைப் பெருக்க வேண்டும் என்று மக்களுக்கு அறிவுரை கூறினான் அதில் அதிகக் கவனமும் செலுத்தினான். இது தொடர்காக ரகசிய அணைகளையும் மக்களுக்கு அனுப்பினான். வாள்பிடிக்கும் கைகள் ஏர்பிடித்தன.

போரில் உயிர்துறந்தவர்களின் குடும்பங்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைத்தானே நேரில் சென்று கவனித்தான். போரில் காயமடைந்தவர்களை நேரில் பார்த்து ஆறுதல் கூறியும், நிதிஉதவியும் செய்து அவர்களுக்கு ஊக்கமூட்டினான்.

தன்னுடைய பாளையத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவியதோடு, ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட பிற பாளையக்காரர்களுக்கெல்லாம் தன் அரண்மனையிலேயே தஞ்சம் கொடுத்துக் காப்பாற்றினான் புலித்தேவன். மீண்டும் வெள்ளையரை எதிர்த்துப் போரிட்டுத் தாய்நாட்

டைக் காக்கு ஊக்கமும் கொடுத்து வழி அனுப்பி வைக்கும் பண்பினன்.

எளியவர்களுக்கு இரங்கும் மனமபடைத்தவன் சாதி, மத பேதமற்ற செம்மல். காரியா ஊரில் மகமதியர்களை ஒரு பிரிவினர் துன்புறுத்தினர். உடனே மாவீரன் புலித் தேவன் சென்று இருபிரிவினருக்கும் சமாதானம் செய்து வைத்தார். இச்செய்தியை சீவலப்பேரியிலுள்ள கல்வெட்டு கூறுகிறது.

வாசுதேவ நல்லூர் அர்த்த நாரீஸ்வரர் கல்யாண மண்டபமும், கோவிலின் நடுமண்டபமும் புலித்தேவனால் கட்டப்பட்டன.

புலித்தேவனின் பெருமைகளை வாசுதேவ நல்லூர் வண்ணக்கோடாங்கியினர் பாடிவருகிறார்கள்.

புலித்தேவன், மக்களுக்கும், தெய்வத்திற்கும் பல தொண்டுகள் செய்து வருங்காலம் கும்பினியர் போர் தொடுத்தனர். முதலாவதாக புலித்வேனின் பலம்வாய்ந்த வாசுதேவ நல்லூர் கோட்டையின்மீது கும்பினியர் பாய்ந்தனர்.

வாசுதேவ நல்லூர் போர் :—

1759-ஆம் ஆண்டு நவம்பர் 6-ஆம் நாள் பூலித்தேவ னுக்கும் முகமது யூசப்கானுக்கும் போர் மூண்டது. சுமார் ஒருமாத காலம் போர் நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான வீரர்கள் பலியாயினர். பின்னர் 1759 டிசம்பர் 4 இல் வாசுதேவ நல்லூர் கோட்டையை யூசப்கான் முற்றுகையிட்டான். கானுக்கு ஆதரவாக பாளையங் கோட்டை, தூத்துக்குடி, மதுரை, முதலிய இடங்களில் இருந்து ஏராளமான படை வீரர்களும் வந்தனர்.

புலித்தேவனின் படை வீரர்கள், கும்பினியரால் சுட்டுத் தள்ளப்பட்டபோதிலும், வாசுதேவ நல்லூர் கோட்டையைப் பாதுகாப்பதில் கண்ணுங் கருத்துமாக விளங்கினர். இருதரத்தாருக்கும் கடுமையான போர் நடந்து வரும்போது பூலித்தேவன் நெற்கட்டான் செவ்வல் கோட்டையிலிருந்தும் எதிரிகளைத் தாக்கினான். இப்படிக் கத்தரித்தாக்குதலால் கான்சாகிப் படைகள் பெருத்த அளவுக்குச் சேதமடைந்தன. தமிழகத்தின் விடுதலைக்காக நடந்த இந்தப் போரில், தமிழர்கள் தேசவிடுதலைக்காகத் தங்கள் உயிரைத் திரணமாக மதித்து ஆவேசத்துடன் போரிட்டான்.

கான்சாகிப் உடனே பீரங்கிகளை வைத்துத் தாக்க ஆரமபித்தான். 18 பவுண்டு வெடி குண்டுகளை வீசக் கூடிய சக்திவாய்ந்த பீரங்கிகளைக்கொண்டு தாக்கினான். குண்டுவீச்சைக்கண்டு இம்மியேனும் கலங்காத வீரத் தமிழ் மறவர்கள் தங்கள் நாட்டு விடுதலைக்காக உயிரைப் பெரிதென எண்ணாமல் கோட்டையைக்காத்து நின்றனர். இரண்டு மாதங்களாக நடந்த இநதப் போர் வாசுதேவ நல்லூர் கோட்டையின் ஒரு பக்கத்துச் சுவர்தான் இடிந்தது.

வெடி குண்டுகள் காலியாகிவிட்டதால் செய்வதறியாது கான்சாகிப் திகைத்தான். இந்தச் சமயத்தில் நெற்கட்டான் செவ்வல் கோட்டையின் வீரர்கள் சுமார் 3,000 பேர் கானின்படை முகாமிற்குள் புகுந்து கூடாரங்களுக்குத் தீயிட்டுக் கொளுத்தினர். காடுகளிலுள்ள பச்சை மரங்கள்கூட எரிந்தன. புலித்தேவனின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் கான்சாகிப் பின்வாங்கினான். புலித்தேவன் படை வீரர்கள் கான்சாசிப்பின் படை வீரர்களை ஓட, ஓட, விரட்டி அடித்தனர். புலித்தேவன் மாபெரும் வெற்றியடைந்தான்.

இதனால் தென் தமிழகமெங்கும் புலித்தேவன் புகழ் ஒளி விளக்காகத் திகழ்ந்தது. இதுவரைத் தோல்வியே கண்டறியாத கான்சாகிப்பின் வீராதி வீரத்தனமெல்லாம் பரந்தோடிப் போயின. புலித்தேவனிடம் தோற்றோடி, அவமானப்பட்ட கான்சாகிப் மீண்டும் புலித்தேவனைத் தாக்க தக்க சமயத்தை எதிர்நோக்கிய வண்ணமிருந்தான்.

நெற்கட்டான் செவ்வல் போர் :-

திருநெல்வேலிப் பகுதியிலுள்ள கான்சாகிப்பின் படை முகாமிற்குப் புலித்தேவனின் படைவீரர்கள் தீயிட்டுக் கொளுத்திப் பெருஞ்சேதத்தை உண்டுபண்ணி வந்தனர். நேருக்குநேர் போரிட முடியாமல் கான்சாகிப் வஞ்சகமாக புலித்தேவனை வெற்றி கொள்ள நினைத்தான். நெற்கட்டான் செவ்வல் காட்டில் போர் வீரர்களுடன் பதுங்கியிருந்தான்; பீரங்கிகளையும் அமைத்தான். 1760 டிசம்பர் 12ல் இது நடைபெற்றது,

கான் சாகிப் தன்னுடைய பகுதியில் ரகசியமாகத் தங்கியிருக்கும் செய்தியைப் புலித்தேவன் ஒற்றர்கள் மூலம் அறிந்தான். சினங்கொண்ட சிங்கத்தைப்போலச் சீறி எழுந்தான். தன்னுடைய படைவீரர்களுடன் தென்பாண்டியச் சிங்கம் மாவீரன் புலித்தேவன் கான்சாகிப்மீது பாய்ந்தான். புலித்தேவன் போர்வீரர்கள் சுமார் 100 பேர் கொல்லப்பட்டனர். ஆனால் கான்சாகிப்பின் போர் வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர். குதிரைகள் பல மடிந்தன. எதிரியின் படைகளைக் கதிகலங்கச் செய்தான். புலித்தேவனிடம் படுதோல்வியடைந்த கான்சாகிப் புறமுதுகிட்டு ஓடினான். நெற்கட்டான் செவ்வலுக்குத் தென்புறம் ஒரு பெரிய மேடு இருக்கிறது. அதில்தான் கான்சாகிப் 18 பவுண்டு பீரங்கிகளை அமைத்தான். இப்போது அந்த இடத்தைக் "கான்சாமேடு" என்று அழைத்து வருகின்றனர்.

இப்போதும் புலித்தேவனை எதிர்த்துப் படுதோல்வியடைந்த கான்சாகிப் எப்படியும் புலித்தேவனை வெல்ல வேண்டும் என்று கங்கணம்கட்டிக் கொண்டிருந்தான். இந்தக் கான்சாகிப்பிற்கு இவ்வளவு வீரம் வந்ததற்குக் காரணமே, அவன் இந்த மண்ணிலே பிறந்ததால்தான். இவன் ஆதியில் இந்துவாக இருந்து, பின்னர் சென்னை சென்று, தன் பெயரையும் மாற்றிக்கொண்டு, தென்னாட்டின் மீதே போர் தொடுக்க கும்பினியரால் அனுப்பபட்டான். கான்சாகிப் இப்பகுதியைச் சேர்ந்வனாதலால், கும்பினியர் இவனையே தென்னாட்டிற்குத் தளபதியாக அனுப்பிவைத்தனர். "முள்ளை முள்ளால் எடுப்பதைப் போல" இவன் ஆங்கிலேயருக்குப் பயன்பட்டான்.

1767ம் ஆண்டு மே திங்கள் 13ல் புலித்தேவனின் வாசுதேவ நல்லூர் கோட்டையை டொனால்டு காம்பல் தாக்கினான். அந்தத் தாக்குதலின் முடிவில் புலித்தேவனும் அவனைச் சார்ந்தவர்களும் தலைமறைவாகிவிட்டார்கள். வாசுதேவ நல்லூர் கோட்டை தாக்கப்பட்டது பற்றி 28-5-1767ல் கலனல் காம்பல் கும்பினியருக்கு எழுதிய கடிதத்தின் சுருக்கமாவது :-

வாசுதேவநல்லூர் புலித்தேவனின் கோட்டையைத் தாக்குமாறு தம் படைக்குஉத்தரவிட்டேன். பீரங்கிக்குண்டுகளாலேயே கோட்டையைத் தகர்க்க முடியவில்லை. குண்டு பட்ட இடங்களில் ஓட்டைகள் மட்டுமே விழுந்தன. ஓட்டைகளைப் புலித்தேவன்வீரர்கள் பச்சை மண்ணும், பனை நாரும் கொண்டு அப்போதைக்கப்போது அடைத்துவிட்டார்கள். விடாது சுட்டுத்தள்ளச் சொன்னேன். ஓட்டைகளைத் தமிழ் மறவர்கள் தங்கள் உடல்களாலேயே அடைத்து நின்றார்கள். சுட்ட இடங்களிலெல்லாம் மணணும் நாரும் எப்படிச் சிதறுமோ, அப்படியே புலித்தேவனின் வீரர்களின் உடல்களும் சிதறின. அதன் பின்னரும் அந்த வீரர்கள் அஞ்சாமல் தங்கள் பணியைச் செய்வதைக் கண்டு என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை. நாக

நாகரீகம் குறைந்தவர்கள் என்று நம்மால் கருதப்படுகிற தமிழ் மறவர்களின் வீரம், நம் ஐரோப்பியர்களின் வீரத்திற்கு எந்தவகையிலும்குறைந்த தன்று'' என்று எழுதியுள்ளார். இக்கடிதம் எழும்பூர் ஆவணக் காப்பகத்தில் இருக்கிறது.

மாவீரன் புலித்தேவனின் நெற்கட்டான் செவ்வல் கோட்டை, வாசுதேவ நல்லூர் கோட்டை ஆகியவற்றையும், புலித்தேவனின் நண்பர்களின் கோட்டைகளான கொல்லங்கொண்டான், சேத்தூர் ஆகியவற்றையும் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டனர் கும்பினியர். தமிழனுக்கே உரிய தன்மான உணர்ச்சியுடன், கடைசிவரைப் போரிட்டுப் புலித்தேவன் தன் படைகளுடன் வெளியேறி, எங்கே சென்றான் என்று கும்பினியர் வியக்கும் வண்ணம் மாயமாய் மறைந்துவிட்டான்.

இந்தமாதிரியான இக்கட்டான சூழ்நிலையில் தலைமறைவாய் இருந்துகொண்டு அந்நியரைத் தாக்கி அழிக்க வேண்டும் என்ற திட்டத்தின்படி, புலித்தேவன் மேற்குத் தொடர்ச்சி மலையை ஏற்கனவே தெரிவு செய்து வைத்திருந்தான். என்னே அவனுடைய ராஜ தந்திரம்.

வாசுதேவ நல்லூருக்கு மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலையில் குகை ஒன்று உள்ளது. புலிததேவனும், அவனைச் சார்ந்தவர்களும் இங்குதான் தங்கியிருந்தனர். அதனால் இக்குகைக்குப் "புலித்தேவர் குகை" என்றே இன்றும் வழங்கி வருகின்றனர். இந்தக் குகையின் அமைப்பை உற்றுக் கவனித்தால் அரண்மனை ஆலோசனை மண்டபம் போன்று இயற்கையிலேயே அமைந்துள்ளது. முன்புறம் அகலமான வெளியாக சுமார் 300 பேர் உட்காரும் இடமாக இருக்கிறது. அதற்கு அடுத்தாற்போல் சற்று உயரமான இடமாக உள்ளது. அதில் சுமார் 100பேர் அமரலாம் அதன் பின்னர் அரசன், அமைச்சர்கள் உட்காரும் இடம்போன்று குறுகிய இடமாக உள்ளது. இராச தர்ப்பார் நடைபெறும் அரண்மனை போலவே

இக்குகை விளங்குகிறது. இந்த இடத்தைத்தான் தலை மறைவாக இருப்பதற்குத் தகுந்த இடமாகத்தேர்ந் தெடுத்து, நீண்டகாலம் தங்கிவந்தான்.

புலித்தேவர் தலைமறைவாக இருப்பதை அறிந்த இவ் வட்டார மக்கள் கும்பினியருக்குத் தெரியாமல் தினமும் நார்ப்பெட்டிகளில் உணவு கொண்டு சென்றனர் என்று தெரிகிறது. அந்த உணவுப் பெட்டிகளை மலையிலுள்ள பாறையில் வைத்துவிட்டு வந்துவிடுவார்களாம். இரவு நேரம் வந்தவுடன் உணவுப் பெட்டிகள் குகைக்கு எடுத் துச் சென்றுவிடுவார்களாம். இப்படித் தினமும் நடை பெறுமாம். ஆகையால் அந்தப் பாறைக்குச் "சோறு ஊட்டும் பாறை" என்று இன்றும் வழக்கத்தில் இருந்து வருகிறது.

இந்த நிலையில் கும்பினியாரைத் தாக்க புலித்தேவன் விரும்பவில்லை. ஏனென்றால் இவர்கள் தங்கள் பீரங்கி களைக்கொண்டும், துப்பாக்கிகளைக் கொண்டும் தமிழர் களைச் சுட்டுப்பொசுக்கி விடுகின்றனர். என்பதை அனு பவத்தின் மூலமாக புலித்தேவன் உணர்ந்திருந்தான். நாமும் அம்முறையையே கடைப்பிடிக்க வேண்டும் அது வரைப் பொறுத்திருக்க வேண்டும் என்று கருதினான்.

மாவீரன் புலித்தேவன் குகையில் இருந்தாலும் ஒற்றர் களின் மூலம் நாட்டில் நடைபெறும் அன்றாட நிகழ்ச்சி களையும் உடனுக்குடன் தெரிந்து வந்தான். அப்போது 1792ல் சேத்தூரில் லாண்டன் என்பவன் நிர்வாகத்துக்கார வெள்ளையனை நியமித்தான். தலைமறைவாயிருந்த புலித் தேவனின் யோசனைப்படி அந்த வெள்ளையனைச் சிறை யிலேஅடைத்துவிட்டார்கள். இதனால் 1793ல் கேப்டன் டைட்டன் என்பவன் சேத்தூர் மீது படை எடுத்தான். புலித்தேவனும், ஊத்துமலையாரும் சேர்ந்து எதிர்த்தனர். கடுமையாக எதிர்தாக்குதல் நடத்தியும் பயனில்லை.

போகவே புலித்தேவன் தலைமறைவானான். புலித்தேவன் இருக்கும் இடத்தை அறிந்து எப்படியும் பிடித்துவிட வேண்டும் என்று படைகளுடன் தேடலானான் கேப்டன் டைட்டன்.

பின்னர் ஆங்கிலேயரை இந்த நாட்டைவிட்டு விரட்ட வேண்டும், அதற்காகக் கடைசிவரை போராடவேண்டும் என்று சிந்திக்கலானான். ஆனால், "தன் நாட்டு மக்களையும், படை வீரர்களையும் ஏராளமாகப் பலிகொடுத்த இந்த நேரத்தில் நம்மால் என்ன செய்ய முடியும்"? என்று ஒரு கணம் சிந்திக்கலானான். தென்பாண்டியச் சீமையெல்லாம் இரத்த ஆறு ஓடியதையும், இப்போது அந்த மண்ணே சிவந்திருப்பதையும் எண்ணிப்பெருமூச்சுவிட்டான், உடனே ஒரு முடிவுக்கு வருகிறவனாய், இருக்கின்ற போர் வீரர்களில் சிலரை அழைத்துக் கொண்டு தென்னாடு முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து கும்பினியருக்கு எதிராகப் படையைத்திரட்டி மீண்டும் பெரியதோர் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டான். அதன்படி தலைமறைவாகத் தமிழகத்தின் பல பகுதிகளையும் நோக்கிப்புறப்பட்டான். பலரைச்சந்தித்து அவர்களின் ஆதரவைப் பெற்றான். மாவீரன் புலித்தேவன் இந்தத் தள்ளாத வயதில் தேசியத்தைக்காக்க, அந்நியனை இந்த நாட்டை விட்டு விரட்டியடிக்க அடைந்த இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இவ்வாறாகப் பலருடைய ஆதரவையும் திரட்டிக் கொண்டு ஆரணிக்கோட்டை சென்றடைந்தான். எப்படியோ கும்பினியார் இதை அறிந்து மாவீரன் புலித்தேவனைக் கைது செய்து ஒரு பெரிய இரும்புக் கூண்டுக்குள் அடைத்து வைத்தனர் மாவீரன் புலித்தேவனை விடுவிக்க முயன்றார்கள். மாவீரன் புலித்தேவனோ, சிறிதும் மனம் கலங்காமல் "புலி கூண்டுக்குள் அடைபட்டுவிட்டது. இனி ஒன்றும் செய்ய முடியாது. ஆகையால் நீங்கள் நம் தென்பாண்டியச் சீமையை நோக்கிச் சென்று, நம் நாட்டையும் நம்மக்களையும் கும்பினியரிடமிருந்து

காப்பாற்ற உங்கள் கடைசி மூச்சு உள்ளவரைப் போரா டுங்கள். இந்த நாடு அந்நியரிடமிருந்து விடுதலை அடை யும்வரை போராடுங்கள். இதுவே இந்த நாட்டுக்கும், எனக்கும் நீங்கள் செய்யக்கூடிய கைமாறாகும்'' என்று அவர்களிடம் கூறினான்.

ஆனால் நாட்டுப்பாடலின் மூலம் இதற்கு மாறான செய்தியும குறிப்பிடப்பட்டுள்ளது.

புலித்தேவன் தலைமறைவாக இருந்துகொண்டு நவீன ஆயுதங்களையும் தயார் செய்து, போர் வீரர்களையும் பெருக்கிக்கொண்டு, ஆங்கிலேயரை மீண்டும் தாக்கப் பல ருடைய ஆதரவையும் திரட்டி வந்தான். அவ்வாறு தமிழக மெங்கும் புறப்பட்டு ஆதரவைத் திரட்டும் நேரத்தில் ஆங் கிலேயர்கள், புலித்தேவனுடன் நேருக்குநேர் யுத்தம் செய்து தப்பிக்கமுடியாது என்றெண்ணி சூழ்ச்சியாகக் கொல்லத் திட்டமிட்டனர். இந்த சதித்திட்டத்திற்கு ஆரணிக்கோட்டையின் தலைவன் அனந்த நாராயணன் உடந்தையாக இருந்தான். அனந்த நாராயணக்கு ஆதர வாகப் பலதடவை படை உதவி செய்து, ஆங்கிலேயரை எதிர்த்துத் தாக்கியுள்ளான் புலித்தேவன். அனந்த நாரா யணன் புலித்தேவனுக்கு ஒரு கடிதம் எழுதினான். ''அதில் வெள்ளையருக்கு எதிராகத் தான் ஒரு ஆயுதச் சாலையைக் கட்டியிருப்பதாகவும், அதன் திறப்பு விழாவிற்கு வருகை தரும்படியும், அவ்வாறு வரும்போது கும்பினியரை எதிர்ப் பது சம்மந்தமாகவும் பேசிக்கொள்வோம்'' என்று எழுதி யிருந்தான். உடனே மாவீரன் புலித்தேவன் அனந்த நாராயணனின் அழைப்பை ஏற்றுப்புறப்பட்டு ஆரணியை அடைந்தான். அனந்த நாராயணனும் புலித்தேவனை வரவேற்று, ஆயுதச்சாலையைச் சுற்றிக்காட்டுபவன் போல் புலித்தேவனை வஞ்சகமாக மறைத்து வைக்கப் பட்டிருந்த இரும்புக்கூண்டுக்குள் அடைத்தான். உடனே புலித்தேவன் அனந்தநாராயணனின் சூழ்ச்சியை அறிந்து குமுறினான்.

அதன் பின்னர் ஆங்கிலேயர்கள், புலித்தேவனைப் பாளையங்கோட்டை சிறைச்சாலைக்கு, கைவிலங்கு, கால்விலங்கு இட்டு அழைத்துவந்தனர். "என்று ஏட்டுப் பிரதிகளில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தன் ஒப்பற்ற தலைவனை விட்டுப் பிரிய முடியாத நிலையில, தலைமறைவாக இருந்து இனி நடக்கப்போவதை உன்னிப்பாகக் கவனித்து, எப்படியும மாவீரன் புலிதம்தவனை விடுவிக்கத திட்டமிட்டனர்

கும்பினியர் உடனடியாகப் புலித்தேவனைப் பாளையங்கோட்டைக்கு அழைத்துச் சென்று தூக்கிலிடுவது என்றுதிட்டமிட்டு,மாவீரன் கையில் விலங்கிட்டனர். அந்தோ ! பரிதாபம், இந்திய வரலாற்றில் வெள்ளையர்களால் முதன் முதல் விலங்கிடபபடும்பேறு மாவீரன் புலித்தேவனுக்குக்கிடைத்தது. புலித்தேவனுககு இடப பட்டஇந்த விலங்கானது பாரத அன்னைக்குப்பூட்டப் பட்ட விலங்காகும. "ஒரு மாவீரன் கைகளில் பூட்டிய விலங்குக்குச் சொற்ப ஆயுட்காலமாக அமைந்தது.

கும்பினியரின் ஏராளமான படைகள் புலித்தேவனைக் கைதியாக்கிப் பாளையங்கோட்டைக்குச் செல்லும வழியில் சங்கரன் கோவில் வந்தடைந்தனர். அப்போது சங்கரன் கோவில் வெள்ளையர்களின் இராணுவ முகாமாகவே இருந்தது. இதில் தமிழரல்லாத ஆங்கிலேயர்களே படைவீரர்களாய் இருந்தனர். இந்தக் காட்சியைக் கண்ட புலித்தேவன் குமுறினான். வெள்ளையர் கரங்களிலே சிக்கி, தூக்குக் கயிற்றிலோ, துப்பாக்கி முனையிலோ சாகாமல் நாமே அழிவைத் தேடிக் கொள்வது நல்லது" என்று எண்ணியவனாய், "தன்னுடைய குலதெய்வமான ஆவுடையநாச்சியாரை வணங்க வேண்டும்" என்று கும்பினியரிடம் கேட்க, அவர்களும அதற்கு ஒப்புக்கொண்டு பலத்த காவலுடன் சங்கரன் கோவிலுக்

சங்கரன் கோவிலில் புலித்தேவர் அறையிலுள்ள
ஓவியம்

குள் அனுமதித்தனர். தன் கைகளில் பூட்டப்பட்டிருந்த விலங்கை அடித்து நொறுக்கிவிட்டு, கோவிலுக்குள்ளே யுள்ள குகைக்குள் ஓடி மறைந்து கொண்டான். குகைக் குள்ளே நுழைந்து பிடிக்க முனைந்தும், முடியாமல் வெறுங் கையுடன் திரும்பினர் கும்பினியர்.

இவன் விலங்கு உடைந்ததை நாட்டுப்பாடல்களின் மூலம் அறியும் செய்தியாவது :

புலித்தேவன் சங்கரன் கோவிலுக்குள் சென்று "அகப்பைக் கிணத்துத் தண்ணியை அனுபவித்தேன் சில காலம் உப்புக் கிணத்துத் தண்ணி உதவலியே ஆவுடை யாள்" என்று உள்ள முருகப்பாடினான். அப்போது கை விலங்கு தானாக அறுந்து விழுந்தது என்றும் அதன் பின் னரே குகைக்குள் சென்று மறைந்து விட்டான் என்றும் நாட்டுப்பாடல்கள் கூறுகிறது. தற்போது "புலித்தேவர் அறை" என்று சங்கரன் கோவிலினுள் இருக்கும் அறையே முன்னாளில் குகையாக இருந்தது என்று கூறுகிறார்கள்.

"பூலி' சிவனுடன் ஐக்கியமாகிவிட்டான்" என்றும் அதனால், "பூலி சிவஞானம்' என்றே பலராலும் அழைக் கப்படலானார்" என்றும் பழைய ஏட்டுப்பிரதி கூறுகிறது.

மாவீரன் புலித்தேவனின் கடைசிக் காலம் பற்றித் திட்டவட்டமான செய்திகள் ஒன்றும் தெரியவில்லை. அந்த மாவீரனின் மறைவு எல்லோருக்கும் ஒரு புதிராகவே இருந்து வருகிறது. எனவே மாவீரன் புலித்தேவனின் இறுதிக் காலம் பற்றி ஆராய்வது நம்முடைய தலையாய கடமையாகும்.

மாவீரன் புலித்தேவனும் டச்சுக்காரனும் :-

மாவீரன் புலித்தேவனின், வாசுதே நல்லூர், நெற்கட் டான் செவ்வல் ஆகிய கோட்டைகளில் நடைபெற்ற போர்க்கு ஈடுகொடுக்க முடியாமல் கான்சாகிப் தோற் றோடினான். வாசுதேவநல்லூர். நெற்கட்டான் செவ்வல்

ஆகிய இடங்களில் புலித்தேவனுக்குக் கிடைத்த வெற்றியினால் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் அவன் புகழ் பரவியது. புலித்தேவனிடம் தோல்வியடைந்த கான் சாகிப்போ, எப்படியும் புலித்தேவனைப் பழிவாங்கவும், அவன் போர்வீரர்களைப் பீரங்கிகளால் சுட்டுப்பொசுக்கவும் திட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

இந்த நிலையில் தமிழர் பாளையங்களின் ஒப்பற்ற தலைவனும் வெற்றிவீரனுமான புலித்தேவனுக்குப் படைகளையும், பீரங்கிகளையும் டச்சு அரசாங்கம் இலவசமாக வழங்கத்தயாராக இருந்தது. ஆங்கிலேயரை வஞ்சம் தீர்த்துக்கொள்ள தக்கசமயமென்று எண்ணி புலித்தேவனை அணுகிப்பார்த்தனர். ஆனால் புலித்தேவனோ ''டச்சுக்காரனாக இருந்தாலும் சரி, பிரெஞ்சுக்காரனாக இருந்தாலும் சரி, ஆங்கிலேயனாக இருந்தாலும் சரி, தமிழ்மண்ணில் வர்த்தக உறவோடு மட்டும் வாழ இடமிருக்குமேயன்றிப் பகையோடு ஆதிக்கம் செலுத்தி வாழ அணுவளவும் இடமில்லை'' என்று கூறினான்.

''பாண்டியநாட்டின் சிறப்புக்கே உரியதான தூத்துக்குடியின் முத்துக் குளிப்புத் தொழிலைக் கைப்பற்றியுள்ள டச்சுக்காரர், உடனடியாகத் தூத்துக்குடியை விட்டு வெளியேற வேண்டும்'' என்று சிம்மக்குரல் கொடுத்தான். ''முத்துக்குளிக்கும் தென்கடல் தமிழனின் தனிச்சொத்து அதைக்கைப்பற்றியவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள தமிழர்களின் எதிரிகளே'' என்று கூறினான் மாவீரன் புலித்தேவன் இதனால் டச்சுக்காரர்களும் புலித்தேவனை ஒழித்துக் கட்டத்திட்டம் தீட்டினார்கள்.

கான்சாகிப்பின் முடிவு :-

வெள்ளையரின் மாவீரனாக விளங்கிய கான்சாகிப்பை புலித்தேவன் எதிரியாகவே கருதினான். தமிழனாகப் பிறந்து மகமதிய மதத்தில் சேர்ந்து கும்பினியரின் தளபதி

யாக வந்து பிறந்த மண்ணையே அந்நியனுக்குக் காட்டிக் கொடுக்கும் கயவனை நேருக்குநேர் போர் செய்து கொல்ல வேண்டும் என்று துடிதுடித்தான். திருச்சிக்கு அருகிலுள்ள பொன் மலைக்குச் சென்றான் புலித்தேவன். அப்போது ஆற்காடு நவாபபாயிருந்த முகம்மது அலி புலித்தேவனை வரம்வேற்று, ஆங்கிலேயரை ஒழித்துக்கட்ட ஆலோசனை யும் கேட்டான்.

தன் நாட்டுமக்களையே கொன்று குவிக்கும் கொடு மைக்காரன் கான்சாகிப்பைக் கொன்றால்தான் வெள்ளை யரின் ஆணவம் தென்னாட்டில் ஒடுங்கும். கான்சாகிப்பின் கொலை கும்பினியருக்கு ஒரு பாடமாக அமையும் என்று புலித்தேவர், முகமது அலியிடம் கூறினார்.

இந்த நிலையில் கான்சாகிப் தன்னை சர்வாதிகாரி யாக்கிக் கொண்டு சுயேச்சையாகப் போரிட எண்ணி னான் எந்தக்கும்பினி ஆட்சிக்காகத் தாயகத்தின் விடுதலை வீரர் களைச் சுட்டுச் சாம்பலாக்கினானோ, அவனே கும்பினி ஆட்சிக்கு எதிராகப் போர்க்கொடியைத் தூக்கினான். அதனால் 1764 அக்டோபர் 14ல் கான் சாகிப்பை கைது செய்தனர் கும்பினியர். பின்னர் அக்டோபர் 15ல் மதுரைக்கு அருகில் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டான் இவனுடைய சமாதி மதுரைக்கு அருகிலுள்ள செம்மட்டி புரத்தில் இருக்கிறது. மாவீரன் புலித்தேவனையும். அவன் வீரர்களையும் கொன்று குவிக்கத் திட்டமிட்ட கான்சாகிப்பின் முடிவு பரிதாப மாகப் போயிற்று.

இனி வெள்ளையரை எதிர்த்துப் போரிட புலித்தேவன் தான் இருக்கிறான். அவனை ஒழித்துக் கட்டுவது இலே சான காரியமில்லை என்பதை உணர்ந்த கும்பினியர் லண் டன் சைனியங்களை வரவழைத்தனர். புலித்தேவனைக் கண்டு வெள்ளையர்கள் மிகவும அஞ்சினார்கள். இங்கி லாந்து ராணுவங்களையும் குதிரைப்படைகளையும் கப்ப

லில் கொண்டுவந்து இறக்கினர். இதைக் கேள்விப்படட புலித்தேவன் பொன்மலையிலிருந்து நெற்கட்டான் செவ் வலுக்குத் திரும்பிவிட்டான். மீண்டும் கும்பினியருடன் போருக்குத் தயாரானான் மாவீரன் புலித்தேவன்.

களக்காடு கோட்டையில் போர் :

திருவனந்தபுரத்தின் எல்லைப் பகுதியில் உள்ளது களக் காட்டுக் கோட்டை இக்கோட்டைக்கு "வீரபாண்டியன் கோட்டை" என்றுபெயர் சேர, பாண்டிய மன்னர்களின் போராட்டம் அடிக்கடி இங்கு நடந்ததால் "களக்காடு" என்று ஆயிற்று என்று கூறப்படுகிறது. இதன் பழைய பெயர் சோழ குலவல்லிபுரம். மாவீரன் புலித்தேவன் இக் கோட்டையின் மீது மிகுந்த அக்கரை காட்டி வந்தான். அதற்கு முக்கிய காரணமும் உண்டு. பாண்டிய நாட்டை யும், கேரள நாட்டையும் இணைக்கும் பாலமாகக் களக் காடு விளங்கியதுதான் முக்சியமான காரணமாகும்.

களக்காடுக் கோட்டையின் மீது மாபூஸ்கானும், கும்பினியர்களும் படை எடுத்துத் தாக்கியபோது மாவீரன் புலித்தேவன் மிகவும் கடுமையாக எதிர்த்தான். தனக்கு உதவிக்கு திருவாங்கூர் மன்னனின் படைகளையும் சேர்த் துக் கொண்டான். கடலும், கடலும் மோதுவதைப் போன்று இரு திரத்துப் படையும் மோதின புலித்தேவ னின் வீரமிக்க போரின்முன்பு ஆற்காடு நவாப்பின் வீரர் களும், கும்பினியப் பட்டாளமும் புறங்காட்டி ஓடின. களக்காட்டுக் கோட்டையின் வெறறிக்கு மாவீரன் புலித் தேவனின் வீரமும், தீரமும்தான் காரணம்.

களக்காட்டுக் கோட்டையில் தோல்வியடைந்த மாபூஸ்கான் புலித்தேவன் மீது ஆத்திரங்கொண்டு, பெரும்படையுடன் நெற்கட்டான் செவ்வல் கோட்டை யைத் தாக்கினான் மாவீரன் புலித்தேவன் இபபோரில வெற்றி பெற்றான். மாபூஸ்கான் படுதோல்வியடைந்து திருநெல்வேலிக்கு ஓடிவிட்டான்.

இதன் பின்னர், மாபூஸ்கானின் தம்பி ரகீம் என்பவன் திருவல்லிபுத்தூர் கோட்டையில் இருந்து கொண்டு மாபூஸ் கானுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தான். இதனை அறிந்த புலித்தேவன் பெரும்படையுடன் திருவல்லிபுத்தூர் தூர் கோட்டையைத் தாக்கினான். நீண்ட நேரப்போருக் குப்பின்பு மாவீரன் புலித்தேவன் வெற்றி பெற்றான்.

புலித்தேவனின் நண்பர்கள் :

இந்திய விடுதலை இயக்கத்திற்கு மாவீரன் புலித் தேவனோடு தோளொடு தோள் கொடுததுத் தமிழகத் தின் தன்மானத்தைக்காக்க முழக்கமிட்ட தியாகச் செம்மல்கள் பலராவர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் கள் கொல்லங்கொண்டான் பாளையக்காரன் வாண் டாயத்தேவன், சொக்கம்பட்டி பாளையக்காரன் குமார சின்னணைஞ்சாத்தேவன், ஈஸ்வரத்தேவன் ஆகியோர்.

அத்துடன், மாவீரன் புலித்தேவனின் புதுக்கோட்டை, நெற்கட்டான் செவ்வல், வாசுதேவ நல்லூர் ஆகிய கோட்டைகளிலுள்ள படைத்தலைவர்கள் தீரமிக்க போர் செய்தார்கள், அவர்களும் புலித்தேவனுக்குப் பக்கத் துணையாயிருந்து அல்லும் பகலும் பாடுபட்டனர். அவர் களின் பட்டியலைக் காணலாம்.

நெற்கட்டான் செவ்வல் :

பாண்டியத்தேவன், பழநியாண்டித்தேவன், சுரக் காண்டித் தேவன், புலியப்பத் தேவன், சொக்கப்பத் தேவன், பொன் பெருமாள் தேவன், அரிச்சந்திர அய்யா, வாக்குடையார்த் தேவன், மூக்கரையாத் தேவன், திருவுடையார்த் தேவன், நல்லமாடத் தேவன், கற்ற முடையார் தேவன், கரணிபாடத் தேவன், அழகுத் தேவன், செல்லக்குமராண்டிததேவன், பூச்சாலித்தேவன், நரசிங்கத் தேவன், இராமமூர்த்தித் தேவன், அருணாசலத் தேவன் ஆகியோர்.

வாசுதேவ நல்லூர் கோட்டை :

முத்துச்சாமித் தேவன், கைலாசத்தேவன், அருணாசலத் தேவன், சின்ன அருணாசலத் தேவன், பெரிய அருணாசலத் தேவன் பூலையாத் தேவன், வேலையாத் தேவன் ஆகியோார்.

புதுக் கோட்டை :

ஆண்டிகரையாளன், உடையார் கரையாளன், சிவ ஞானத் தேவன், மாயாண்டித் தேவன், திருவெற்றித் தேவன், மாயாண்டித் தேவன், இராமுத் தேவன், நல்ல மாடத்தேவன், மூக்காண்டித்தேவன், சித்தார்த்த தேவன், முத்திவீரத் தேவன், சின்னமுத்துத் தேவன், ஒண்டி வீரன், ஒடிக்குத்தான் பகடை, சின்னக்காய்ச் சொக்கன் சிவத்த சொக்கான், கருத்தச் சொக்கன் ஆகியோர்.

கொல்லங்கொண்டானில் போர்:-

தென்னகத்தின் தேசிய எழுச்சிக்கு மாவீரன் புலித்தேவனோடு தோளோடு தோள் கொடுத்துத் தமிழகத்தின் தன் மானத்தைக் காக்க முழக்கமிட்ட, தமிழ் மறவன் வாண்டாயத்தேவன். கொல்லங்கொண்டான் பாளையக் காரனான வாண்டாயத்தேவன், புலித்தேவனுக்கு மிகவும் நெருக்கமானவன். இந்தக் கொல்லங் கொண்டான் கோட்டையானது இராச பாளையத்திற்குத் தென்மேற்கில்சுமார் 5 கல் தொலைவில் உள்ளது. நெற்கட்டான் செவ்வல் கோட்டைக்கு வடக்கே சுமார் 20 கல் தொலைவில் உள்ளது. நெற்கட்டான் செவ்வல் கோட்டைக்குப் பாதுகாப்பாக வடக்கே அரணாக விளங்கியது கொல்லங்கொண்டான் கோட்டை. ஒருகாலத்தில் 'கொல்லம் என்ற வேணாட்டுப் பகுதியின் மீது படை எடுத்துச் சென்று வெற்றிகொண்ட பாண்டியனின் நினைவுச் சின்னமாக இக்கோட்டை விளங்கியது. இந்தக் கோட்டையின் தலைவனான வாண்டாயத் தேவனின் தலைமைத்தளபதியாக

வந்தியத் தேவன் என்பவன் விளங்கிவந்தான். இவன் புலித்தேவனுக்கு மிகவும் நெருங்கிய நண்பனாகவும். விளங்கி வந்தான். மலையே விழுந்தாலும் நிலைகுலையாத மனத்தை உடையவன் .

இங்கு பழம்பெருமை வாய்ந்த இடர்தீர்த்த பெருமாள் கோவில் ஒன்று உள்ளது. இக்கோயில் 12ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதென்றும், 14ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதென்றும் கூறப்படுகிறது. குலசேகரதேவ பராக்கிரம பாண்டியனும், அவன் மகன் வரதுங்க பாண்டியனும், புரோகிதர்களுக்கும், பண்டிதர்களுக்கும் ஏராளமான நிலபுலன்களை அளித்திருப்பதாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. இந்தப்பராக்கிரம பாண்டியன் என்பவன் தென்பாண்டி நாட்டில் தென்காசியைத் தலைநகரமாகக் கொண்ட பிற்காலப் பாண்டியர்களாக இருக்கவேண்டும் என்று தெரிகிறது. இக்காலத்தைக் கொண்டு கணக்கிட்டால் பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். பராக்கிரம பாண்டியனின் இரண்டாவது மகன் வரதுங்க ராமபாண்டியன் கி.பி.1588ல் முடிசூடப்பெற்றான் என்று பாண்டியர் வரலாறு கூறுவதிலிருந்தும் இதன் காலத்தைத் தெளிவாக அறியலாம். ஆனால், கி.பி.1162ல் குலசேகர பாண்டியன் என்ற மன்னன் திருநெல்வேலியிலிருந்து பாண்டிய நாட்டின் தென்பகுதியை ஆட்சிபுரிந்து கொண்டிருந்த நாட்களில் பாாக்கிரம பாண்டியன் என்பவன் மதுரையிலிருந்து கொண்டு பாண்டிய நாட்டின் வடபகுதியை ஆண்டுவந்தான். இவ்விருவரும் தாயத்தினர் என்ற செய்தியை அறிய முடியகிறது. மேலும் இவன் காலத்தில் இவனுகக்கு ஆதரவாகவும் எதிராகவும் இரண்டாம இராசாதி ராச சோழனுக்கும் ஈழவேந்தன் பராக்கிரமபாகு ஆகியோருக்கும் இப்பகுதியில் போர் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. இதற்குச்சான்றாக இவ்வூரின் அருகில் "ஈழம திரைகொண்டான்," "சோழபுரம" ஆகிய ஊர்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும் இச்சோழ

புரம் கோவிலில் உள்ள கல்வெட்டுக்களை, தமிழக அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துரையினர்படி எடுத்து வெளியிட்டுள்ளனர் இச்செய்தியிலிருந்தும் இங்குள்ள திருக் கோயில் திருவல்லிபுத்தூரில் அவதரித்த பெரியாழ்வார் காலத்துக்கு முந்தியதாகத்தெரிகிறது. விஷ்ணுதேவாலயங் களிலெல்லாம் ஆண்டாளுக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டி ருக்கும். ஆனால் இக்கோயிலில் அவ்வாறு இல்லை. பிற் கால மன்னர்கள் காலத்தில திருவல்லிபுத்தூரிலுள்ள ஆண்டாள் ஆண்டுக்கொருமுறை எழுந்தருளிச் சிறப்புச் செய்த பெருமை இவ்வூருக்குண்டு .இதிலிருந்து பன்னி ரெண்டாம் நூற்றாண்டுக்கும் முந்தியது என்பது தெரி கிறது.

பிற்காலத்தில் இக்கொல்லங்கொண்டான் பாளையக் காரனாக விளங்கிய மாவீரன் வாண்டாயத்தேவன் வீரர் பரம்பரையிலே தோன்றியவன். காஞ்சிபுரத்தைத் தலை நகராகக் கொண்டு வீரசோழன் என்பவன் சோழநாட்டை ஆண்டுவந்தபோது, வாண்டாயத் தேவனின் முன்னோ ரான வீரமானியத்தேவர் சோழநாட்டின் பொருள் காப் பாளராக விளங்கினார். வீரமானியத்தேவர் இறந்தபிறகு இவருடைய பரம்பரையினர் அரசியல் காரணங்களால் தஞ்சாவூர் வந்து சேர்ந்தனர். அப்போது தஞ்சை யில் குலோத்துங்க சோழன் ஆண்டுவந்தான். அங்கு குலோத்துங்க சோழனுக்கு ஆதரவாக இருந்து வந்தனர். பின்னர் காஞ்சிபுரத்துக்கும் தஞ்சைக்கும் போர் ஏற் படவே சொந்த நாட்டை ஆதரிப்பதா? அல்லது புகுந்த நாட்டை ஆதரிப்பதா? என்ற இக்கட்டான நிலையில் யாரையும் ஆதரிக்காமல் மதுரை வந்து சேர்ந்தனர். அப் போது மதுரையில் பராக்கிரம பாண்டியன் ஆண்டுவந் தான். பராக்கிரம பாண்டியனுக்கு பெரிய கொம்புயானை யைப் பிடித்துக் கொடுத்து ''வேளம்புதூர்'' என்ற ஊரை யும் பரிசாகப்பெற்றனர். பின்னர் பாண்டிய நாட்டின் தென்பகுதியில் அடிக்கடி ஏற்பட்ட கொள்ளை

யடிப்பின் காரணமாக சின்னையாத்தேவர் என்பவர் தலைமையில் 1582ல் எல்லைப்பாதுகாப்பாளர்களாக நியமிககப்பட்டார்கள் அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்தான் வாண்டாயத்தேவனின் பரம்பரையினராவர். அப்பரம்பரையில் தோன்றியவனே மாவீரன் வாண்டாயத்தேவன்.

மாவீரன் வாண்டாயத்தேவன் கலைஞானமும், மெய் வப்பற்றும் மிகக் கொண்டு விளங்கினான். இங்குள்ள இடர்தீர்த்த பெருமாள் கோவிலுக்கு ஏராளமான நிலம் மானியமாக அளித்துள்ளான். இக்கோயிலுக்கு நாட்டிய மாடும் நாட்டிய சகோதரிகளான மயிலாள், குயிலாள் ஆகிய இருவருக்கும் இரண்டு குளத்து நிலங்களையும் தானமாகக் கொடுத்துள்ளான். இன்றும் மயிலாள்குளம், குயிலாள்குளம் என்று வழககத்திலிருந்து வருகிறது. அத்துடன் சேத்தூர் பாளையத்துக்குச் சொந்தமான தேவதானம் நச்சாடைதவர்த்தவர்-தவம் பெற்ற நாயகி கோவிலுக்கு ஒரு வேளைப் பூசை செய்வதற்கும், ஒருநாள் திருவிழா நடைபெறுவதற்கும் ஒருகுளத்து நஞ்சையையும் தானமாக வழங்கியுள்ளான். இன்றும் அக்குளத்திற்கு வாண்டாயத் தேவன் குளம் என்று வழங்கப்பட்டு வருவது குறிப்பிடதக்கதாகும்.

வாண்டாயத்தேவன், நாட்டுப்பற்று மிகக்கொண்டவன். அந்நியனை எதிர்த்து, தமிழினத்தைக்காக்கவும், தாய்நாட்டைக்காக்கவும் புலித்தேவனோடு முதல்முழக்கமிட்ட மாவீரனாவான். இவன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய குறிப்புகளை The Aristocracy of South India. Volume II By A. Vadivelu என்ற நூலில் காணலாம். அதில் மகமது யூசப்கான் என்னும் ஆங்கிலத்தளபதி 1759ல் கொல்லங்கொண்டான் கோட்டையைத் தாக்கினான். நீண்ட நேரம்போர் நடந்தது. பின்னர் 1766 டிசம்பர் 26ல் கும்பினித்தளபதியான மேஜர் பிளிண்ட் என்பவன் மாவீரன் வாண்டாயத்தேவனோடு போர்செய்து தோல்வி

யடைந்து ஓடினான். அப்போது வாண்டாயத்தேவனிடம் சுமார் 20,000 படைவீரர்கள் இருந்தனர். இரண்டுநாள் போர்நடந்தது. பின்னர் கும்பினித் தளபதியான கலனல் டொனால்டு காம்பெல் என்பவனுடன் 1767ல் ஏப்ரல் 26ல் கடுமையான போர் நடைபெற்றது. இப்போரினால் கோட்டையைத் தகர்க்க முடிந்ததே தவிர, வாண்டாயத் தேவனைக் கைது செய்து பணிய வைக்க முடியவில்லை இந்தத் தாக்குதல் குறித்து கலனல் காம்பல் 1767 மே 1ம் நாள் கிழக்கிந்தியக் கம்பெனிக் கவர்னர் சார்லஷ் பௌர்ஷியருக்கு எழுதிய கடிதம் குறிப்பிடத்தக்கது. ஆங்கிலக் கடிதத்தின் (புலியூர்க் கேசிகனின்) தமிழ்மொழி பெயர்ப்பு பின்வருமாறு :-

அன்புடைய ஐயா, ஐயன்மீர் !

சென்ற மாதம் 24ஆம் தேதிவரை நான் என்னுடைய வேலைத் திட்டங்களை விளக்கியுள்ளேன். 25-ம் தேதி யன்று, நான் இராசபாளையத்திலிருந்து படைகளுடன் புறப்பட்டு 26-ம் தேதியன்று காலையில் இங்கு முகாமிட்டேன். எனக்குக் கிடைத்துள்ள அனுபவத்திலிருந்து, ஒரு கோட்டையைச் சுற்றிக் காடுகள் இருக்குமேயானால் அந்தக் கோட்டையிலுள்ள மக்கள் இரவோடு இரவாக வெளியேறி விடுவதுண்டு. முற்றுகை முயற்சிகளை நான் அறிவிக்கவில்லை. ஏனென்றால், எந்தவிதமான கட்டுமானங்களை நான் அமைப்பதாக அவர்களுக்குத் தெரிந்தாலும், எதிர்க்கப்போவதாகத் தெரிந்தாலும் அவர்கள் வெளியேறி விடுவார்கள் என்றே நான் தீர்மானித்தேன். எனவே, நாங்கள் செய்யக் கூடியவற்றை அவர்கள் அறிந்து கொள்ளாமல் இருப்பதற்காகப் பதுங்கும் குழிகளையும் பீரங்கி பைட்புகளையும், அமைப்பதற்கான தளவாடங்களைச் சேகரித்து ஒரே இரவுக்குள் அமைத்து, அவர்கள் வெளியேறுவதை மறுநாளென்று வைத்துக்கொள்ளட்டுமென்று நினைத்தேன். அதற்கேற்ப ஆ29-ம் தேதியன்று

மாலையில் பதுங்கும் குழிகளை 250 வேலை யாட்களைக் கொண்டு தோண்டவைத்தேன். பீரங்கிகளின் விசைகளை யும் சரிவரக் கவனித்தேன். நான் நினைத்தபடி எல்லா வேலைகளும் முடியப்போகும் தருணத்தில் ஒரு நீல ஒளி விளக்கொன்று கோட்டையிலே எதிரிகள் தொங்க விடு வதைக்கண்டு, வேலை செய்த கூலியாட்களும், சிப்பாய் களும் தங்கள் மீது, கோட்டையிலிருந்து எதிரிகளின் நெருப்புக் குண்டுகள் பாயும் என்று நினைத்துத் திடீரென்று பயந்து புறங்கால் முதுகில் பட ஓடி விட்டார் கள் அவர்களைத் திரும்ப அழைத்து வருவதற்குள் மிக அதிகமான காலதாமதம் ஆகியது தரையும் மிகவும கெட்டியாக இருந்ததால் நான் எதிர்பார்த்தபடி அன்றிரவுக் குள்ளாகவே அவர்களைக் கொண்டு பீரங்கி களை நிறுத்தமுடியாமல் ஏமாற்றமடைந்தேன். எப்படி யும மறுநாள் மாலையில் மீண்டும் தொடர்ந்து நாங்கள் செய்கின்ற வேலையை எதிரிகள் எளிதாகக் கண்டு கொள் ளாமலிருப்பதாக இருட்டியவுடன் கோட்டையைச் சுற்றி லும் வட்டமாக நமது படைகளைச் சங்கிலியைப்போல நிற்கவைக்க முயன்றும், துரதிஷ்டவசமாக நமது படைகள் போதாமையால், நாவப்பின் குதிரைப் படைகளை நிற்க வைத்து, மற்ற வேலைகளுக்கான ஆட்களையும் நியமித்து விட்டேன்

இன்று காலை எங்களுடைய 18 பவுண்டு பீரங்கி களைக் கொண்டு 34 முறை சுடத் துவங்கிய உடன் நவாபின் படைகளின் அசாக்கிரதையால் எதிரிகள் வெளி யேறி விட்டனர். அவர்கள் கோட்டையைப் பிரிந்து சென்றதைக் கண்டுபிடித்தோம். அவர்கள் எங்கள் படை முகாமைக் கலவரப்படுத்தும் பொருட்டும், ஒரு ஐரோப் பியரைப் படுகாயப்படுத்தவும் உபயோகித்த ஒரு பீரங்கி யானது தானாகவே வெடித்து, ஒரே பவுண்டு எடையுள்ள ஒரு குண்டானது எங்கள் சுமைவண்டியில் வந்து விழுந்தது.

நான் எத்தகைய முன்னெச்சரிக்கையான முயற்சிகளை யெடுத்துக் கொண்டிருந்துங்கூட என்னால் கைது செய்ய முடியாதபடி அவர்கள் தப்பியதைப்பார்த்தால், ஒரு இராணுவம் எவ்வளவு பலம் வாய்ந்ததாக இருப்பினுங் கூட ஒரு நாட்டினை அதன் தேசிய வாதிகளால் காப்பாற்ற இயலாத நேரத்தில், எந்தவிதமான நம்பிக்கைக்கும் இட மில்லாத நேரத்தில் அவைகளை அவர்களே பாழாக்கி நம் மையும் அனாதரவாக ஆக்கி விடுவார்கள். இராசபாளை யத்தில் நான் ஒரு மறவர் கூட்டத்தையே விட்டுவிட்டேன். இருந்தாலும்கூட எனக்கு உணவு தானியங்களைக் கொடுத்து உதவிய சில வீதிகளைப் புரட்சிக்காரர்கள் தீயிடடுக் கொளுத்தி அழித்து விட்டனர். ஒரு சில அசா தாரண துரதிர்ஷ்டங்களால் அதற்கான காரணங்களை எடுத்துக்காட்ட இயலாத ரீதியில் நான் அவர்களுடைய கோட்டைகளை அழிக்காமல் தடுப்பதற்கில்லை. ஆனால், அவர்களின் கூட்டணித தலைவர்களைக் கைது செய்யாத வரை, அவர்கள் திரும்பவும் நாம் எதிர்பார்க்கும் செலவை விடக் குறைந்த செலவில் கோட்டைகள்ளக் கட்டிக்கொள் வதற்கு நாமே இடங்கொடுப்பது போலாகி விடுமாகை யால், அவர்கள் வெளியில் இருக்கும்போது, அவர்கள் தங் கள் நாட்டை அழிப்பதிலிருந்து, பிற்காலத்தில் அந்த ராணுவம் காத்துக்கொள்ள முடியாத நிலைகூட ஏற்பட்டு விடுகிறது. திருவில்லிபுத்தூரின் தென்பகுதியிலுள்ள ஊர் களெல்லாம் ஏற்கனவே இத்தகைய மோசமான ரீதியில் பாதிக்கப்பட்டிருப்பதால், எங்களுக்கு வந்து கொண்டி ருக்கும உதவிகள் நீண்ட நெடுந்தூரத்திலிருந்து வருகிற தென்ற காரணத்தால், அவைகளில் ஒவ்வொரு அவுன்சும் நான் பலத்த பாதுகாப்புத் துருப்புக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறேன். இதன் நாட்டாண்மைக்காரன், யூசப்கானின் காலத்தில் வாழ்ந்த நிலையில் தங்களை வைப் பதற்கும, எதிர்ப்பைச் சமாளிப்பதற்கான செலவுகளைச் சரிக்கட்டுவதாக ஒப்புக்கொள்வதற்கும், இத்தகைய ஏற் பாடுகளைக் கவனிப்பதற்கான துருப்புகளை அமர்த்து

வதற்கான செலவுகளை ஒப்புக்கொள்வதானால், நவாப் பின் அரசாங்கத்தின் நல்லதொரு பிரசையாக இருப்பதற்கு ஒப்புக்கொள்வதாகக் கேள்விப்பட்டேன். அவர்கள் எந்த விதமான ஏற்பாட்டையும் என்னிடம் கொண்டுவர வில்லை. நானும் என்னுடைய புத்திக்கெட்டிய வரையில் அவர்கள் எந்தவிதமான ஒப்பந்தத்திற்கு வருவார்கள் என்று நிச்சயிக்க முடியவில்லை. என்றாலுங்கூட, என்னால் இந்த விசயத்தைப் பற்றி விசாரிக்காமல் இருக்க முடிய வில்லை.

(கையொப்பம்)

டோனால்டுகாம்பெல்.

இந்தக் கடிதத்திலிருந்து கொல்லங்கொண்டான் கோட்டை எந்தவிதமான முன்னறிவிப்பும் இன்றி, மறை வாகத் தாக்கப்பட்டது என்பது நமக்குத்தெளிவாகத் தெரிகிறது. 250 வேலையாட்களை வைத்துக் கொண்டு இரவோடு இரவாக பீரங்கிகளையும், பதுங்கும குழிகளை யும் தயார் நிலையில் வைத்திருக்கிறான். மேலும் பலம் வாய்ந்த 18 பவுண்டு பீரங்கிகளைக் கொண்டு தாக்கினார் கள். அந்த நிலையிலும தேசிய வாதிகளின் திட்டவட்ட மான செயல்கள் தொடர்ந்து நடைபெற்றன. இராச பாளையத்தில் கும்பினியருக்கு உதவிய தெருக்களையே தீயிட்டுப் பொசுக்கினர். சரணாகதிக்குச் சிறிதும் வழியே இல்லை. கோட்டையைத் தரையோடு தரையாக நொறுக் கினர் கோட்டையின் அருகிலிருந்த இடர்தீர்த்தபெருமாள் கோயிலின் சுற்றுச்சுவர்கள்கூட இத்தாக்குதலினால் பழு தடைந்தன. இன்றும் கோயில் பழுதடைந்த நிலையிலேயே இருக்கிறது. இக்கோட்டை இயற்கையில் காடாக இருந்த தாலும், கோட்டையின் பக்கத்தில் பெரிய ஆறு ஒன்று இருந்ததாலும் கோட்டைகளிலிருந்தவர்கள்தப்பிக்கமுடிந் தது. ஆனால் வாண்டாயத் தேவனின் இறுதிக்கால முடிவு என்ன ? என்று தெரியாத நிலையில் உள்ளது. செவிவழிச்

செய்தியாக அறியும்போது கோட்டையை ஆங்கிலேயர் முற்றுகையிட்டவுடன், கர்ப்பவதியாக இருந்த தன்னுடைய மனைவியைக் கும்பினியர் அறியாவண்ணம் பத்திரமாக கோட்டையை விட்டு வெளியே அனுப்பித் தன் வாரிசைக் காத்தான். பின்னர் வாண்டாயத் தேவன் கோவிலின் உள்ளேயுள்ள குகைக்குள் சென்று புலித்தேவனைப் போலவே இறைவனுடன் ஐக்கியமாகி விட்டான் என்று தெரிகிறது.

கோட்டையை விட்டு வெளியேறிய மகாராணியைக் காட்டின் வழியே அழைத்துச் சென்றனர். நடுக்காட்டில் ஆண்குழந்தை பிறந்தது. மகாராணியையும், இளவரசனையும் அந்த இடத்திலேயே பாதுகாத்து வந்தனர். அவர்கள் தங்கிய இடம் தற்போது பஞ்சம்பட்டி என்று அழைக்கப்படும் கிராமமாகும். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்த இளவரசன் சகல கலா வல்லனாகத் திகழ்ந்தான். ஒருநாள் இளவரசன் சிவகிரிக்காடுகளில் சென்று வேட்டையாடச் சென்றான். அப்போது ஒரு புலியைத் துரத்திச் சென்று அதனுடன் வீரர்ப்போர் புரிந்து கொன்றான். அப்போது புலியைக் கொன்ற ஆர்வத்தில் .''சும்மாவிடுவானா திருமலை வாண்டாயத் தேவன்'' என்று முழங்கினான் இதனை அறிந்த எதிரிகள் கும்பினியருக்கு, வாண்டாயத் தேவனுடைய வாரீசாகிய இளவரசன் உயிருடன் இருக்கிறான் என்ற செய்தியை அறிவித்தனர். எதிரிகளின் சூழ்ச்சியை அறிந்த இளவரசன் திருமலை வாண்டாயத்தேவனும், மகாராணியையும், மற்றவர்களும் பஞ்சமபட்டியில் இருந்தால் கும்பினியரால் ஆபத்து ஏற்படும் என்று அறிந்து அதைவிட்டுப்புறப்பட்டு வடக்காகச்சென்று நடுக்காட்டுக்குள் வந்து தங்கினர் பின்னர் அந்த இடத்திலேயே கோட்டை கட்டி வாழ்ந்தார்கள். அந்த இடமே தற்போது ''கோட்டை 'என்றும்''' ஜமீன் கொல்லங்கொண்டான் ''என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. இந்தஊரில் இன்றும் ஜமீன் கொல்லங்கொண்டா

னில் வாண்டாயத் தேவனுடைய பரம்பரையினர் இருந்து வருகின்றனர். தற்போதுள்ள ஜமீன்தார் அரிகர திருமலை வாண்டாயத் தேவர் அந்தப்பரம்பரையைச் சார்ந்தரே யாவார். ஜமீன் கொல்லங்கொண்டான் ஆதி ஊராகிய கொல்லங் கொண்டானுக்கு அருகிலேயே இருக்கிறது. பின்னாளில் கும்பினியரால் பழைய ஊரை அயன் கொல் லங்கொண்டான் என்று மாற்றப்பட்டது. தற்போது ஜமீன் கொல்லங்கொண்டான், அயன்கொல்லங்கொண டான் என்ற இரண்டு ஊர்களும் இருப்பது குறிப்பிடத் தக்கதாகும.

இக்கொல்லங்கொண்டான் பாளையத்தைப் பற்றி டாக்டர் எஸ். கதிர்வேல் எழுதிய "மறவர்களின் சரித் திரம்" என்ற நூலில் கூறியிருப்பதாவது :

"In 1765, Periasamy Thevar, Palayagar of Vadagarai, endeavoured for the union of the western Palayagars against the Nawabe and the British. However, his scheme had to be postponed because of internal in his Palayam. Kollamkondan succeeded where Vadagarai failed. Pulithevar was now back in his Palayam but his main fort Vasudevanallur was still under the direct control of the British forces, commanded by Ensign Foulsom."

Before the arrival col. campbell, the Marava Palayagar league headed by KollamKondan decided to relive the fort of Vasudevanallur and attacked in sep. 1766.

மேலும் அவருடைய நூலில் கொல்லங்கொண்டா னைப் பற்றிய குறிப்புகள் பக்கம் 119, 131, 148, 148 – 151 ஆகியவற்றில் காணலாம்.

கொல்லங்கொண்டான் வீர சரிதித்ரத்தைப் பல ஆங்கி லேயர்கள் புகழ்ந்து எழுதியுள்ளார்கள். அவற்றை

யெல்லாம் வெளிக்கொணர்ந்து நாடறியச்செய்வது நம்முடைய கடமையாகும்.

சேத்தூரில் போர்

சேத்தூர் பாளையக்காரன் புலித்தேவனுக்கு மிகவும் நெருங்கிய நண்பன்; கொல்லங்கொண்டான் பாளையக் காரனான வாண்டாயத் தேவனுக்கு உறவினன். 1767 மே 3-ல் சேத்தூர் கோட்டை தாக்கப்பட்டது. கோட்டை யைத் தாக்கியபோது கோட்டை வீரர்கள் அருகிலுள்ள காடுகளிலிருந்து பாய்கின்ற சூறாவளியைப்போல பாய்ந்து கும்பினியப் படைகளைச் சின்னா பின்னமாக்கினார்கள். இது சம்மந்தமாக கர்னல் காம்பல் கும்பினிக் கவர்னர் சார்லஸ் பௌர்சியருக்கு எழுதிய கடிதத்தின் சுருக்க மாவது :-

மதிப்பிற்குரிய ஐயா.

நேற்று நான் கொல்லங் கொண்டானிலிருந்து எனது படைகளை நடத்திக் கொண்டு சேத்தூருக்கு வந்தவுடன் கோட்டையின் சிறிது தூரத்திலுள்ள சததிரத்தின் பின் புரத்தில் இருந்த படைவீரர்கள் நம்மை வந்து தாக்கினர். காப்டன் கூப்பர் மிதமிஞ்சிய வீராவேசத்துடன் போரிட் டுங்கூட, எதிரிகளின் படைகள் இடைவிடாமல் போரிட்ட னர். நம்முடைய வீரர்களும் மிகவும கொடுமையான துப்பாக்கித் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தனர். கேப்டன் கூப்பருக்கு விரல் துண்டானது. லெப்டினன்ட் சான்சனுக்கு ஒரு கை ஊனமானது. 3-சிப்பாய்கள் கொல் லப்பட்டு 46-பேர் படுகாயமுற்றனர். 2-பதினெட்டு பவுண்டு பீரங்கி, சில 9-பவுண்டு பீரங்கி ஆகியவற்றைக் கொண்டு கோட்டையின் ஒரு வாயிலை நோக்கி இடை விடாமல் சுடும்படிக் கட்டளையிட்டேன். படைகள் சோர் வடைந்து விட்டதால், கோட்டையை உடனடியாகச் சுற்றி வளைத்து முற்றுகையிடுவதற்கு முடியாமல்

போயிற்று. சேத்தூர்க்கோட்டை, பாளையங்கோட்டை யைப் போலவே பெரிதாக இருக்கிறது. இங்கு ஆயிரம் பொதிமாடு சுமையுள்ள உணவுப் பொதிகளும், கொல்லங் கொண்டானிலிருந்து கொண்டு வரப்பட்ட 400 பொதிச் சுமையுள்ள உணவுகளும் இருப்பதாகக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. ஏராளமான படையும் அனுப்பிவைக்கவும். இதைத்தகர்க்கும் வேலையை நாளைச் செய்கிறேன். இதன் தென்பகுதியிலுள்ள எல்லாக்கோட்டைகளையும் அடக்கும்வரை என்படைகளில் ஒரு பட்டாளத்தை இங் கேயே வைத்துக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

டொனால்டுகாம்பெல்

வடகரைப்பாளையம்

வடகரை என்றழைக்கப்படும் சொக்கம் பட்டிப் பாளையக் காரனான குமார சின்னணைஞ்சாத்தேவன். இவன் மாபெரும் போர்வீரனாகத் திகழ்ந்தான். மாவீரன் புலித்தேவனின் மிகவும் நெருங்கிய நண்பர்களில் ஒரு வனாகவும் விளங்கினான். குமார சின்னணைஞ்சாத தேவ னின் கோட்டையில் மிகவும் சிறந்த போர்வீரர்கள் இருந் தார்கள். ஏராளமான ஆயுதங்களையும் சேகரித்து வைத் திருந்தான். இவர்கள் குற்றாலத்திலுள்ள குற்றாலநாதர் கோயிலில் பல கட்டடங்களைக் கட்டியவர்கள். 'ஐந்து தேர் ஓடும் அரியதலம குற்றாலம்'' என்று உலகு போற் றும குற்றாலத்தில், கண்ணுதற்கடவுள் திருமுன் கற்றூ ணில் இவர்களுடைய திருஉருவச்சிலைகள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இச்சிலைகளின்மேல் பொறிக்கப் பட்டுள்ள வாசகம் வருமாறு :- ''துவஜஸ்தம்பததைச் சுற்றியுள்ள மண்டபமும் கட்டி, சிததிரசபையில் செப் பேடு வேய்ந்தும், முகப்பு மண்டபம கட்டியும், தெப்பக் குளம் வெட்டியும், ஐந்து தேர்கள் செய்து கொடுத்தும் திருப்பணி ஆற்றிய வடகரை ஆதிக்கம் சின்னப்பாட்டம்

இராசகோபாலத்தேவர் (கி.பி. 1660-1721) இவ்வடகரை ஆதிக்கம் பெரியசாமி செம்புலி சின்னணைஞ்சாத்தேவர் (கி.பி.1660-1721)

இவர்களின் ஆதரவில் திரிகூடராசப்பக்கவிராயர், "திருக்குற்றாலக் குறவஞ்சி' நூலையும், குற்றாலஸ்தல வரலாற்று நூலையும் எழுதினார். இராசகோபாலத்துறை மீது பாடிய "இராசகோபால மாலை", என்ற நூல் புகழ் பெற்றதாகும்,

இத்தகைய பெருமக்களின் வழிமரபினரே குமார சின்னணைஞ்சாத்தேவர். போராட்டக்காலத்தில் புலித் தேவருக்கு ஆருயிர்த் தோழராயும், ஆலோசகராகவும் விளங்கினான். வடகரைப்பாளையக்காரர் அழைத்த போதெல்லாம் புலித்தேவர் தம் போர்வீரர்களை அனுப்பி வைத்தார். இச்செய்தியை இந்துஸ்தான் வரலாறு பகுதி 1 பக்கம் 420 இல் காணலாம்.

இந்த வடகரைப் பாளையம் திருவாங்கூர் எல்லையை அடுத்திருந்தது. திருவாங்கூரையும், வடகரைப்பாளையத் தையும் பிரித்துவிடச் சதி செய்தான் யூசப்கான். அதில் வெற்றியும் பெற்று யூசப்கான் வடகரையைத் தாக்கி னான். மகமதுயூசப்கானின் படையைக்கண்டு ஒரு சிறிதும் மனம்கலங்காமல் 24மணி நேரம் தொடர்ந்து பீரங்கித் தாக்குதல் நடந்தும் வீர ஆவேசத்துடன் போர் செய்தான். கடைசியில் யூசப்கானின் கொடுமையான தாக்குதலுக்கு ஆற்றாது தன் கோட்டையைவிட்டுப் புலித்தேவனின் நெற்கட்டான் செவ்வல் கோட்டைக்கு ஓடிவிட்டான், புலித்தேவன் இதனை அறிந்து, மிகவும் வருந்தினான். குமார சின்னணைஞ்சாத்தேவனுக்குத் தன் அரண்மனை யில் தஞ்சமளித்து, "காலம்வருமவரைக் காத்திருக்க வேண் டும்" என்று அறிவுரையும் கூறினான். தக்கசமயம் வந்த வுடன் வடகரைக்கு மீண்டும் அனுப்பி வைத்தான். படை

களையும் பலப்படுத்தினான். எந்த நேரத்திலும் அவனுக்கு ஆதரவு தருவதாகப் புலித்தேவர் கூறினார்.

இந்த நேரத்தில் யூசப்கானிடமிருந்த ஏராளமான படைகளுடன் (20,000) திருவாங்கூர் மன்னனின் படைகளும் சேர்ந்தன. 5000 குதிரைவீரர்களையும், கொச்சியிலிருந்த 10,000 படைகளையும் அனுப்பிவைத்தான் திருவாங்கூரான். ஜகவீரக்கெட்டி பொம்மூவின் படைகளும் மதுமது யூசப்கானுக்கு ஆதரவாக வந்தன. இத்தகைய மாபெரும் படைகளுடன் கிட்டத்தட்ட 30,000 காலட் படை 10,000 குதிரைவீரர்கள், 6,000 துப்பாக்கி வீரர்கள், பீரங்கிப்படையினர், வெடிகுண்டுப்படையினர் ' ஆகியவற்றுடன் மகமது யூசப்கான் வடகரையைத் தாக்கினான். குமார சின்னணைஞ்சாத்தேவன் யூசப்கானுக்கு அஞ்சாது எதிர்த்தான். ஒருநாள் முழுவதும பீரங்கிகள் அலறிய போதும் கோட்டை யூசப்கானிடம் சிக்கவில்லை. கடைசியில் மேலும் 10,000 பேரை வரவழைத்து யூசப்கான் தாக்கினான். இரவெல்லாம் போர்நடந்தது. கோட்டை எதிரியிடம் சிக்கிவிடும் என்ற அபாய நிலையில் எஞ்சிய படைகளுடன் நெற்கட்டான் செவ்வலுக்குச் சென்றுவிட்டான் குமார சின்னணைஞ்சாத்தேவன். இருதரப்பிலும் ஏராளமான போர் வீரர்கள் கொல்லப்பட்டனர். இறுதியில் வடகரைக் கோட்டையை யூசப்கான் கைப்பற்றினான்.

ஈஸ்வரத்தேவனுடன்போர் :

புலிததேவனின் மற்றொரு நண்பனான தலைவன் கோட்டைப் பாளையக்காரனான ஈஸ்வரத்தேவனின் கோட்டையை யூசப்கான் தாக்குவதற்குத் திட்டமிட்டான். இதன்பின்னர் புலித்தேவன் கோட்டையைத் தாக்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்று நினைத்தான். 1756 நவமபர் 16ல் யூசப்கானின் படையும், திருவாங்கூர்படையும் ஒன்று சேர்ந்து ஈஸ்வரத்தேவன் கோட்டையைத்

தாக்கியது. புலித்தேவனின்படைகளும், தலைவர்களும் காடுகளில மறைந்திருந்து கொரிலாப் போர் நடத்தினர். ஈஸ்வரத்தேவனின் கோட்டையும், காடுகளும் பெரும் பாதிப்புக்குள்ளாயின. யூசப்கானின் ஏரர்ளமான போர் வீரர்கள் மாண்டார்கள். மூன்று நாட்களாக இரவு பகலாகப் போர் நடைபெற்றது. முடிவில் யூசபகான் எஞ்சிய போர்வீர மறவர்களுடன் நெற்கட்டான் செவ் வல்லை அடைந்தான். புலித்தேவனும் அவனை எதிர் கொண்டழைத்து ஆறுதல்கூறினான்.

நமது கடமை :

இந்திய நாட்டின் விடுதலை இயக்கத்தின் வரலாற் றைக் காய்தல் உவத்தலின்றி. நடுநிலையில் நின்று தக்கபடி ஆராய்ந்து உண்மையான வரலாற்றைக் காண்பது நம் முடைய கடமையாகும். மேலை நாடுகளிலெல்லாம தம் வரலாற்றின் விடுபட்ட பகுதிகளை யெல்லாம் மீண்டும் இணைத்துக் கொண்டு உண்மையான வரலாற்றைப் படைக்கும்போது, நாம் மட்டும் ஏன் தயங்கவேண்டும்? வரலாற்றைத் திரித்துக் கூறுபவர்களை ஒதுக்கித் தள்ளி விட்டு, உண்மையான வரலாற்றை வருங்காலச் சமுதாயத் திற்கு எடுத்துக் கூற உரிமைக் குரல் கொடுப்போம் அப் போதுதான் மூடி மறைக்கப்பட்ட உண்மைகள் முற்றத்தல் வந்து வெளிச்சம் காட்டும்

இந்திய விடுதலை இயக்கத்தின் காலகட்டங்களை உற்று நோக்கினால் உண்மை நன்கு விளங்கும். இது முதலா வதாக அந்நியர்களுக்கும் முடிமன்னர்களுககும் நடை பெற்ற விடுதலைப் போராகும. இரண்டாவதாக ஆங்கி லேயர்களுக்கும் சிப்பாய்களுக்கும் நடைபெற்ற கலகமாகும். மூன்றாவதாக ஆங்கிலேயர்களை எதிர்த்து மக்கள முழங்கிய முழக்கமாகும். இவ்வாறாக மூன்று காலகட்டங் களாக விடுதலைப் புரட்சி நடைபெற்றது. இதில் நான் கூறும் இந்திய விடுதலைப்போரின் முழக்கம் முதலாவது

கட்டமான அந்நியருக்கும் முடிமன்னர்களுக்கும் நடை பெற்ற விடுதலைப் போராட்டமாகும்.

"சுதந்திரப் போர்க்களம்" என்ற நூலில் பாளையக் காரர் போர் I வீரபாண்டியன், பாளையக்காரர் போர் II ஊமத்துரை, பாளையக்காரர் போர் III, மருது சகோதரர் கள் என்று வரிசைப்படுத்துகிறார் ம.பொ சி. வீரபாண் டியனுக்கு முன்னால் நடைபெற்ற பாளையக்காரர்களான மாவீரன் புலித்தேவன், வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியவர்களைப் பற்றி ம.பொ.சி. குறிப்பிடவில்லை.

"தமிழ்நாட்டின் வரலாறும் பண்பாடும்" என்ற நூலில் வீரபாண்டியனுக்கு முன்னால் ஆங்கிலேயருக்கு எதிர்ப்புக் குரல் கொடுத்தவர் புலித்தேவர் என்று ந.க. மங்கள முருகேசன் எழுதியுள்ளார்.

"தமிழக வரலாறும் பண்பாடும்" என்ற நூலில் வெள்ளையர்களை நடு நடுங்க வைத்த வீரன் புலித்தேவன். இவன் பெயரைவிட இவன் கோட்டையின் பெயரான நெற்கட்டான் செவ்வல் என்பதைக் கேட்டாலே அந்நியர் களுக்குக் குலை நடுக்கம். வரிகொடுக்க மறுத்த புலித் தேவனை வெள்ளையர்களால் பணியவைக்க முடிய வில்லை" என்று எஸ். நடராசன் எழுதியுள்ளார்.

ம.பொ.சி. கூறியுள்ள பாளையக்காரர்களின் போர் வரிசையில் கூறிய வீரபாண்டியன், ஊமத்துரை. மருது சகோதரர்கள் ஆகியவர்களுக்கு முன்பே, மாவீரன் புலித் தேவன் வெள்ளையரை எதிர்த்துப் போரிட்டான் என் பதை ந.க. மங்கள முருகேசன், எஸ். நடராசன் ஆகியவர் களின் நூல்களிலிருந்தும், மற்றும் பல அறிஞர்களின் நூல் களிலிருந்தும் தெரிந்துகொள்ள முடிகிறது.

எனவே "முதல் முழக்கம் முழங்கியது யார் ?" என் பதே வரலாற்றில் மூடி மறைக்கப்பட்ட உண்மையாகும். பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களையும் சீர் தூக்கிப்

பார்த்தால் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெற்றென விளங்கும். "வீரபாண்டியக் கட்டபொம்மன் தான் இந்திய விடுதலைக்காக முதல் முழக்கம் "முழங்கினான்" என்று ம.பொ.சி கூறுகிறார். "மாவீரன் புலித்தேவன்தான்வெள் ளையரை முதன் முதல் எதிர்த்துப் போரிட்டு விடுதலைக் காக முழக்கம் முழங்கினான்" என்று பல அறிஞர்கள் கூறுகிறார்கள. அசோக் மேத்தா, வீர சவர்க்கார் போன்ற வர்கள் "1857ல் வடநாட்டில் நடந்த சிப்பாய்க்கலகமே இந்தியாவின் முதல் விடுதலை முழக்கம்" என்பர். இந்த மூன்று செய்திகளையும் மையமாக வைத்துக்கொண்டு ஆராய்ந்து முடிவெடுப்பது நமது கடமையாகும்.

சிப்பாய்கலகம் :

1867-ல் நடந்த சிப்பாய்க் கலகத்தை எடுத்துக் கொள் வோம். உண்மையில் இது சிப்பாய்க் கலக மட்டுமன்று ; வாரீசுக் கொள்கையால் பாதிக்கப்பட்ட சுதேச மன்னர் களும், தொழிலாளர்களும், பொதுமக்களும் சேர்ந்து போராடிய விடுதலை முழக்கமாகும். இதற்கு முன்பு நடந்த போராட்டத்தைக் காட்டிலும் இதில் சிறப்பான அம்சம் என்னவென்றால், முடிமன்னர்கள், சிப்பாய்கள், பொதுமக்கள் ஆகிய மூன்று தரப்பினரும் சேர்ந்து வெள் ளையரை எதிர்த்துப் போராடும் போரட்டமாகும்.

இந்தியாவின் கவர்னர் சென்ரலாக அப்போதிருந்த டல்லெளசிப்பிரபு ஆங்கில ஆதிக்கத்தை விரிவடையச் செய்வதற்காகக் கையாண்ட குறுக்கு வழிகள் பலவாகும். அவன் முதலாவதாக "வாரீசு இல்லாத சமஸ்தானங்கள் ஆங்கில அரசுடன் சேர்த்துக்கொள்ளப்படும்" என்று கூறினான். அதன்படி சான்சி, சதாரா, நாகபுரி ஆகிய சமஸ்தானங்களைச் சேர்த்துக் கொண்டான். இரண்டாவ தாக இந்து, இஸ்லாமியச் சிப்பாய்களைப் பன்றிக் கொழுப்புத்தடவிய தோட்டாக்களைக் கையாளுமாறு கூறினான். இச்செயல்களே சிப்பாய்களையும், மக்களை

யும், வீறுகொண்டு எழச் செய்தது. இப்புரட்சிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்களில் நானாசாகிப், சான்சி ராணி இலட்சுமிபாய் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இப்போராட்டத்திற்கு முன்னின்று தக்க ஆலோசனைகளைக் கூறியவன் நெற்கட்டான் செவ்வல் பாளையத்தைச் சேர்ந்த வீரமறத் தமிழன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் சிவகங்கைப்போர் தோல்வியுற்ற பின்னர் வெள்ளையத் தேவனின் படையைச் சேர்ந்த "சின்னி வீரத்தேவன்" என்ற இளைஞன் வட இந்தியாவிற்குத் தப்பிச் சென்று சான்சிராணி இலட்சுமிபாயின் படையில் சேர்ந்து 1857ல் நடந்த சிப்பாய்க்கலகத்தில், காரண கர்த்தாவாக விளங்கினான் என்று ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

எனவே வடநாட்டில் ஏற்பட்ட விடுதலைப் புரட்சிக்குத் தென்னாட்டு வீரமறவர்களே முன்னோடிகளாகச் செயல் பட்டார்கள் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். தென்னாட்டு மண்ணில் விளைந்த வீரமே வடநாட்டுப் போருக்கும் உரமாக இருந்தது என்று சொன்னால் மிகையாகாது.

எனவே, சிப்பாய்க்கலகத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பின்னோக்கிப் பார்த்தால் புலித்தேவனின் காலத்திலேதான் இந்திய விடுதலை இயக்கத்தின் முதல் முழக்கத்திற்கான வித்து ஊன்றப்பட்டது என்பது தெள்ளத்தெளிவாக விளங்கும்.

வேலூர் புரட்சி :

"1857ல் நடந்த சிப்பாய்க் கலகத்திற்கு முன்னோடியாக 1806ல் வேலூரில் நடந்த சிப்பாய்க் கலகமே இந்தியாவின் முதல் முழக்கம்" என்று சுட்டிக் காட்டுகிறார் டாக்டர் சுரேந்திரநாத். இந்த வேலூர்ப் புரட்சிக்கான காரணமாவது :

"இந்திய சிப்பாய்கள், தங்கள் தலையில் புதுத்தலைப் பாகையை அணிந்து கொள்ள வேண்டுமென்று ஆங்கிலேயர் கட்டளையிட்டனர். புதுவகைக் காலுறைகளும் தோலாற் செய்யப்பட்ட குல்லாய்ச்செண்டுகளும், இறகுச் செண்டுகளும் அணியவேண்டும். மார்பிலே சிலுவை போன்ற ஒன்றைத் தொங்க விட்டுக் கொள்ள வேண்டும்" என்றும் ஆங்கிலேயர் வற்புறுத்தனர். "தேவையற்ற இந்தத் திடீர்க் கட்டளைகளால இந்திய சிப்பாய் களிடையே மனக்குமுறல் ஏற்பட்டது சிப்பாயகள் அவற்றை அணிய இயலாது என்று உறுதியாக மறுத்து விட்டனர். இதுவே "வேலூர் புரட்சிக்கான காரணம்" என்று டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் "1806" என்ற நூலில் கூறுகிறார்.

இதிலிருந்து, 1857ல் நடைபெற்ற சிப்பாய்க் கலகத் திற்கு முன்னோடியாகவும ஒத்திகையாகவும் 1806ல் நடந்த "வேலூர் சிப்பாயக கலகம்" தோன்றியது என்பது தெளிவாகிறது.

"இந்த வேலூர் புரட்சிக்கு முன்னோடியாக இருந்தது பாஞ்சாலங்குறிச்சிப் போர்" என்று ம.பொ.சி. கூறு கிறார். அவர் தன்னுடைய முதல் முழக்கம் என்ற புத்தகத் தில் "பாஞ்சாலங்குறிச்சியில் தொடங்கிய விடுதலைப் போரின் அடுத்த கட்டம்தான் வேலூர் சிப்பாய்களின் புரட்சி. இந்த இரண்டும் நடந்து ஓய்ந்த ஐம்பது ஆண்டு களுக்குப்பிறகு 1857 இல் தான் வடக்கே சிப்பாய்களின் புரட்சி நடைபெற்றது. எனவே, இந்திய விடுதலைப் போரின் வரலாறு பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் நடத்திய வீரப்போரிலிருந்து தான் தொடங்குகிறதென் பதில் ஐயமில்லை" என்று கூறுகிறார்.

மேலே கூறிய 1857 சிப்பாய்க்கலகம், 1806 வேலூர்ப் புரட்சி, 1799 பாஞ்சாலங்குறிச்சிப்போர் ஆகியவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஆராயுங்கால் 1857ல்

நடைபெற்றது சிப்பாய்க் கலகத்திற்கு முன்னோடியானது 1806ல் நடைபெற்ற வேலூர் புரட்சி என்றும், 1806ல் நடைபெற்ற வேலூர் புரட்சிக்கு முன்னோடியானது 1799ல் நடைபெற்ற பாஞ்சாலங் குறிச்சிப்போர் என்றும் தெரிகிறது.

ஆனால் உண்மையான வரலாற்றை ஆராய்ந்தால் வீரபாண்டியக் கட்ட பொம்மனுக்கு முன்னோடியாகச் சிவகங்கை அரசியார் வீரமங்கை வேலுநாச்சியார் 1772ல் ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை முழக்கம் முழங்கினார். வீரமங்கை வேலுநாச்சியாருக்கு முன்னோடியாக மாவீரன் புலித்தேவன் 1755 ஆங்கிலேயரை எதிர்த்துக் குரல் எழுப்பினான்.

இந்த இடத்தில் தான் "இந்திய விடுதலை இயக்கத்தின் முன்னோடி யார்"? என்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பாஞ்சாலங் குறிச்சிப்போர் நடைபெறுவதற்கு முன்னால் நடந்த விடுதலை இயக்கப் போர்களைப் பற்றி ம.பொ.சி. கூறவில்லை. பாஞ்சாலங் குறிச்சிப்போர் நடை பெறுவதற்குக் காரணமே, 1755ல் புலித்தேவன் தலைமையில் நடைபெற்ற விடுதலை எழுச்சியேயாகும். இந்த விடுதலை எழுச்சியானது ம. பொ. சிக்குத் தெரியவில்லையா.? அல்லது தெரிந்திருந்தும் மறைக்கப்பார்க்கிறாரா? 'எந்தப் போராட்டம் பற்றிய வரலாறாயினும் சரி; அது நிகழ்ந்த காலத்தை யடுத்தே, அதில் சம்மந்தப்பட்டவர்களாலேயே எழுதப் படவேண்டும். அதுதான் உண்மையான வரலாறாக இருக்க முடியும். காலங்கடந்து பிற்காலத் தலைமுறையினரால் எழுதப்படுவது ஒரு புதிய புராணமாக அமைந்து விடவும் கூடும்" என்று தாம் எழுதிய "விடுதலைப் போரில் தமிழகம்" என்ற புத்தகத்தில் ம பொ.சி. குறிப்பிட்டிருப்பதால், புலித்தேவனின் புரட்சி வீரபாண்டியக் கட்ட பொம்மனுக்கு முந்தியே நடந்தது என்பதால், காலம் கடந்தது என்று தள்ளி விட்டார் போலும்.

“தமிழ்வாணன் யார்?” என்ற புத்தகத்தில் “புலித் தேவனைப் பற்றியும் வீரபாண்டியக் கட்ட பொம்மனைப் பற்றியும் தமிழ்வாணன் எழுதும் போது நிறைய ரிக்கார்டு களையும், கல்வெட்டுக்களையும், வரலாற்று ஆசிரியர் களின் நூல்களையும் சேகரித்து எழுதியிருக்கிறார். உண்மை என்றும உண்மை தான். பொய் நிலைத்து நின்றதாகச் சரித்திரமேயில்லை”. என்று சேலம் மணாளன் எழுதியுள்ளார்.

எது முதல் முழுக்கம்?

1799ல் பாஞ்சாலங்குறிச்சியில் நடைபெற்ற போருக்கு முன்னோடியாக நடைபெற்றது 1772ல் நடைபெற்ற வீரமங்கை வேலு நாச்சியாரின் போராட்டம். வேலு நாச்சியாரின் போராட்டத்திற்கு முன்னோடியாக நடை பெற்றது 1755ல் நடைபெற்ற மாவீரன் புலித்தேவனின் போராட்ட மாகும்.

“வீரபாண்டியக் கட்ட பொம்மன் தான் இந்திய விடுதலை இயக்கத்தில் முதல் முழக்கம் முழங்கியவன்” என்று ம.பொ.சி. எழுதிய பிறகு. ஏராளமான அறிஞர்கள் அதனை மறுத்து, “இந்திய விடுதலை இயக்கத்தில் முதல் முழக்கம் முழங்கியவன் மாவீரன் புலித்தேவன்தான்” என்று எழுதினர். அதற்குப்பிறகாவது ம. பொ. சி. அது பற்றிய கருத்துக்களைக் கூறியிருக்கலாம், அதற்கும் செவிசாய்க்காமல் வாளாயிருந்து விட்டார். ஒருவேளை மௌனம் சம்மதத்திற்கு அறிகுரியாகும் என்று எடுத்துக் கொள்ளலாம் “ஒரு பொய்யைப் பலதடவை சொல்லிக் கொண்டே வந்தால் அது மெய்யாகிவிடும்” என்று சொல்லுவார்கள். ஒரு வேளை அப்படியும் நினைத்துக் கொண்டு இருக்கலாம்.

“தமிழ்நாட்டுத் தலைவர்கள் வரிசை” என்ற புத்தகத் தில் “முதன் முதலாகத் திருநெல்வேலிப் பகுதியில்தான்

ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து போர்முரசு முழங்க ஆரம்பித்தது.'' நெற்கட்டும் செவ்வல் பாளையத்தின் அதிபதி புலித்தேவனே'' அதற்குத்தலைமை தாங்கியவன். மறவர் குலப்பாளையங்களை ஒன்று திரட்டி வெள்ளை யரை எதிர்த்து வீரப்போர் புரிதான் புலித்தேவன். நாயக கர் குலப்பாளையக்காரர்கள் இவ்விசயத்தில் புலித்தேவ னுடன் ஒன்று சேரவில்லை. 1755ல் ஆங்கிலேயப்படை முதன் முதலாகப் புலிததேவனிடம் வாசுதேவ நல்லூரில் தோற்றது. புலித்தேவருக்குப்பின் பாஞ்சாலங்குறிச்சி யைச் சேர்ந்த வீரபாண்டியக் கட்டபொம்மன் சுதந்திரத் தை நிலைநாட்ட வெள்ளையரை எதிர்த்து வெண் சமர் புரிந்து இறுதியில் தூக்கிலிடப் பட்டான்'' என்று டாக்டர். எஸ். கதிர்வேல் கூறுகிறார்.

எனவே டாக்டர் எஸ். கதிர்வேலின் கூற்றுப்படி மாவீரன் புலித்தேவன் திருநெல்வேலிச்சீமையில் முதன் முதல் ஆங்கிலேயரை எதிர்த்து முதல் முழக்கம் முழங்கி னான் என்றும், ஆனால் வீரபாண்டியக்கட்டபொம்மன், மாவீரன் புலித்தேவனின் முதல் முழக்கத்தினை உறுதி செய்து சுதந்திரத்தை நிலைநாட்ட வெள்ளையரை எதிர்த்தான் என்று தெளிவாகத் தெரிகிறது.

எனவே, ''வெள்ளைய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முதல் முழக்கம் முழங்கியது தென் பாண்டி நாடுதான்'' என்பது யாவர்க்கும் தெளிவான திட்டவட்டமான முடி வாகும். ''வட நாட்டில் நடந்த (1857) சிப்பாய்க்கலகம் இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்க மல்ல'' என்பதும், அறிஞர் பெருமக்களின் ஏகோபித்த முடி வாகும்.

'கட்ட பொம்மன் கதை'' என்ற நூலில் கட்ட பொம்மனின், சுதந்திரப்போராட்டம் என்பது நிச்சய மாகச் சொல்ல முடியாவிட்டாலும் Discretion is the

Better part of valour என்று சொல்லும்படியாக இருந்தாலும் பாமரமக்கள் இன்னும் பாஞ்சாலங் குறிச்சியின் நிகழ்ச்சிகளைப்பாடி வருகிறார்கள்'' என்று டி கே. ராமானுசம் கூறுகிறார்.

''கட்டபொம்மன் மக்கள் ஆதரவை முழுவதுமாகப் பெறத்தவறிவிட்டான்'' எனப்பேராசிரியர் வானமாமலை குறிப்பிடுவதிலிருந்து தெரிகிறது. மேலும் கட்டபொம்மனுக்கு எதிராக ஆங்கிலேயரிடம், மக்களே குற்றச்சாட்டு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு ஆதார நாட்டுப்பாடல் ஒன்றைச் சான்றாகக் காணலாம். இது மாக கட்டபொம்மன் காலத்திலேயே நடந்தது.

''கட்டபொம்மேந்திரன் துட்ட நடத்தையைக்
காட்டி விவரமாய்ச் சொல்லுவராம் !
……………………………………
அருங்குளத்திலே கம்பஞ்சாலைக்கதிர்
ஆயிரங் கட்டையும் கொள்ளை கொண்டான்
வருமாங்குளத் தட்டை……………………
……………………………கொழுத்தி விட்டான்
வீடுகளில் கொள்ளையிட்டான்
30, 40 பால்பசு, 300 எருது
இதை கேட்காவிட்டால்
படியிலே ஒரு நொடியிலே சென்னைப்
பட்டணம் போறோம் பிராதுக்கென்றார்''

(கட்டபொம்மன் குமபி ஏட்டுப்பிரதி (பக்கம் 2440-2443)

மாவீரன், புலித்தேவனா ? வீரபாண்டியக்கட்டபொம்மனா ? இவர்களில் யார் முதன்மை யானவர் ?

என்று ஆராய்ந்து பார்ப்பதும் நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

வீரபாண்டியக் கட்டபொம்மனைப் பற்றிக்கூறிய அறிஞர்களின் கருத்துக்களையும், மாவீரன் புலித்தேவனைப்பற்றிக் கூறிய அறிஞர்களின் கருத்துக்களையும் ஆராய்ந்து பார்த்து உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும். "கைப் புண்ணைப் பார்ப்பதற்கு கண்ணாடி தேவையில்லை" என்பார்கள். ஆகையால் இருதிறத்து அறிஞர்களும் இதற்கான காலத்தைத் தெளிவாக வரையறுத்துக்கூறியுள்ளார்கள். வீரபாண்டிய கட்டபொம்மனின் காலம் மாவீரன் புலித்தேவனின் காலத்திற்குப் பிந்தியது. புலித்தேவனின் போராட்டம் ஆரம்பமான காலத்தில் வீரபாண்டியக்கட்ட பொம்மன் பிறக்கவேயில்லை. எனவே புலித்தேவன்தான் விடுதலையியக்கத்தில் காலத்தால் முந்தியவன் என்ற கருத்தே விஞ்சி நிற்கிறது. எனவே புலித்தேவனின் முழக்கம் முதல் முழக்கமாகும்.

அடுத்து வெள்ளையனை எதிர்த்துப் போர்க்கொடியை உயர்த்தியவர்களில் முன்னணியில் இருந்தவர் யார்? என்று பார்க்க வேண்டும். மாவீரன் புலித்தேவன் முதன் முதல் 1755ல் வெள்ளையரை எதிர்த்தான் அதற்கு முன்னர் எவ்வளவு காலம் வெள்ளையரை எதிர்க்கத் திட்டமிட்டிருப்பான் என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும். இருப்பினும் திட்டவட்டமான 1755ம் ஆண்டை வைத்தே நாம் கணக்கிடுதல் வேண்டும். வீரபாண்டியக் கட்டபொம்மன் 1798ல் தான் முதன் முதல் வெள்ளையரை எதிர்த்துப் போர் முழக்க மிட்டான்.

இருவருடைய போர்க்காலப் பண்புகளையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும் மாவீரன் புலித்தேவனின் ராசதந்திரம் மிகவும் போற்றத்தக்க முறையில் இருந்தது. தன்னுடைய படை பலத்தைப் பெருக்கிக்கொண்டேயிருந்தான். ஆனால் அதே நேரத்தில் பக்கத்திலிருந்த

பாளையங்களின் படை பலத்தையும் பெருக்கிக்கொண்டே யிருந்தான். தங்களுக்குள் ஒரு பலம் வாய்ந்த ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டான்.

வள்ளுவர் கூறியபடி எதிரியோடு போர் செய்யும் ஒருவன் முதலில் தனது பலத்தையும், பின்னர் தனக்கு உதவியாக வருபவர்களின் பலத்தையும், அதன் பின்னர் எதிரிகளின் பலத்தையும், அவர்களுக்காக உதவிக்கு வருபவர்கள் பலத்தையும் திட்டவட்டமாக தெரிந்து கொண்டுதான் மாவீரன் புலித்தேவன் வெள்ளையரை எதிர்த்துப் போராட்டங்களில் இறங்கினான். இதை யெல்லாவற்றைக் காட்டிலும் ஏனையப் பாளையக்கார நண்பர்களெல்லாம் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டுத் தோற்றுத்தஞ்சம் புகுந்த நேரங்களிலெல்லாம் தன் பாளையத்தில் அடைக்கலம் கொடுத்துப் புலித்தேவன் காப்பாற்றினான்.

ஆனால் வீரபாண்டியக் கட்டபொம்மன் தன்னுடைய பலத்தில் நின்றானே யொழிய பக்கத்துப்பாளையங்களை அனுசரித்துத் தனக்கு ஆதரவாக வைத்துக் கொண்டது மில்லை ; வேறு யாருக்கும் தஞ்சம் கொடுத்தது மில்லை. மாறாகப் பக்கதது் பாளையக்காரனான எட்டையா புரத்துடன் நீண்ட பகையாளியாகவும் இருந்தான். அதோடு பக்கத்துப் பாளையப்பட்டுக்களைக் கொள்ளை யும் அடித்தான். இதனால் வீரபாண்டியன் மக்கள் ஆதர வையும் இழந்தான்.

''பாஞ்சாலங்குறிச்சி வேந்தன் தனித்து நின்று போராட வில்லை. நாகலாபுரம், ஏழாயிரம் பண்ணை, சிவகங்கை ஆகிய பாளையங்களின் தலைவர்கள் பலர் பக்கத்துணை யிருந்தனர்'' என்று ம.பொ.சி. கூறுவது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. இதற்கு எந்த விதமான சான்றையும் காட்ட வில்லை.

அடுத்து இருவருடைய குறிக்கோளையும் பார்க்க வேண்டும். மாவீரன் புலித்தேவன், "தென்னகம் முழுவதிலும் அந்நியன் எவனும் காலடி எடுத்துவைக்கக்கூடாது" என்ற உயர்ந்த குறிக்கோளை மையமாகவைத்தே போர் முழக்கம்முழங்கிவந்தான். "மதுரையில் நாயக்கராட்சியை நீக்கி மீண்டும் பாண்டியர்களின் ஆட்சியை நிலை நாட்ட வேண்டும்" என்ற தென்பாளையக்காரர்களின் குரலுக்கு புலித்தேவன் ஏற்றம் கொடுத்தான். தமிழகத்தின் தென்திசையிலிருந்து வடதிசை வரையிலும் புலித்தேவனின் கால்படாத இடமே கிடையாது. மகமதியப் படையாக இருந்தாலும சரி, கும்பினியர் படையாக இருந்தாலும் சரி, டச்சுக்காரர் படையாக இருந்தாலும் சரி எல்லோரும் அந்நியரே" என்று புலித்தேவன் வீர முழக்கமிட்டான். புலிததேவன் பல இடங்களில வெள்ளையரை எதிர்த்துப் போரிட்டும், கும்பினியரை எதிர்த்தவர்களை ஆதரித்தும் வந்தான். தனக்கு எதிர் முகாமிலிருந்த நாயக்க மன்னனையும், திருவாங்கூர் மன்னனையும். முடேமியா, நபிகான் கட்டாக் போன்ற பட்டாணியத் தளபதிகளையும கூட்டணியாகச் சேர்த்துக் கொண்டு வெள்ளையனை விரட்டியடிக்கத் திட்டமிட்டுப் பல ஆண்டுகள் போராடினான்.

ஆனால் வீரபாண்டியக் கட்டபொம்மனோ பாஞ்சாலங்குறிச்சி என்ற வளையத்துக்குள்ளேயே நின்று கொண்டு தன்னுடைய சுயநலத்திற்காகப் போராடினான். அவனுடைய போராட்ட காலங்கள். நான்காண்டுகள் தான். அதுவும் நேருக்கு நேர் பாஞ்சைக் கோட்டையில் நடைபெற்ற போர் ஒன்றுதான் குறிப்பிடத்தக்க தாகும். தன்னுடைய காலத்தில் கம்பெனியாருக்கும் இராமநாதபுரம் சேதுபதிக்தம நடந்த போராட்டத்தில் நெல்லைப் பாளையங்கள் எல்லாம் சேதுபதிக்கு உதவிய போதுகூட, வீரபாண்டியக் கட்டபொம்மன் சேதுபதிக்கு ஆதரவாக

உதவவில்லை என்ற செய்தியும் இங்கு குறிப்பிடத்தக்க தாகும்.

வீரபாண்டியக்கட்ட பொம்மன் தனக்கு ஆதரவாக எந்தப்பாளையத்தையும் அழைக்கவுமில்லை, எந்தப் பாளையத்திற்கும் வீரபாண்டியன் ஆதரவு கொடுக்கவு மில்லை என்பதால், "தான்" என்ற மமதையில் செயல் பட்டான் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த மமதையே இவன் தோல்விகளுக்கெல்லாம் முக்கிய காரண மாக அமைந்தது.

வீரபாண்டியக் கட்டபொம்மனின் அருங்குளம், சுப்புலாபுரம் ஆகிய இரண்டு கிராமங்களையும் எட்டய புரத்துடன் சேர்த்துச் செட்டில்மெண்ட் செய்தனர். கும்பினியர். தன்னுடைய சொந்தக் கிராமங்கள் பறி போய்விட்டதே என்ற ஆத்திரத்தில்தான் கும்பினியரை எதிர்த்தான். பாஞ்சைப் பகுதிக்குள் அந்நியன் எவனும் கால் வைக்கக்கூடாது என்று முழங்கினான்.

கும்பினியர் வரிகட்ட வேண்டும் என்றும், அதற்காகத் தன்னை வந்து பேட்டிகாண வேண்டும் என்றும் ஜாக்ஸன் கூறியபோது, முதலில் மறுத்தான். பின்னர் கலெக்டரைப் பார்ப்பதன் மூலம் பகைமையைக் குறைக்கலாமென நம்பினான். இந்த இடத்தில் கட்டமொம்மனின் தன் மானம் பறிபோகிறது. "தனியே சென்று கலெக்டரைச் சந்தித்தால் தீங்கு நேரும்" என்று எண்ணி 1798ல் தள பதிகள் முன் செல்லத்தம்பிமார் புடைசூழக் கலெக்டரைக் காணத் திருநெல்வேலி சென்றான் வீரபாண்டியன். வீர பாண்டியக்கட்ட பொம்மனை அவமதிக்கும் நோக்கத் தோடு ஜாக்ஸன் குற்றாலத்துக்குச் சென்று விட்டான்.

"பேட்டி காண வந்த தன்னை அவமானப் படுத்தி விட்டான் ஜாக்சன்" என்பதை வீரபாண்டியக் கட்ட பொம்மன் நன்கு உணர்ந்தான். அவன் ஒரு சுத்த

சுதந்திர வீரனாக இருந்திருப்பானே யானால் குற்றாலத்தை நோக்கித் திரும்பிக்கூடப் பார்த்திருக்கமாட்டான். பாவம் அவன் ஒரு கோழை என்பதை நிரூபித்துக்காட்டி விட்டான். குற்றாலம் நோக்கிச்சென்ற வீரபாண்டியனின் பயணம் பரிதாபமாக இருந்தது. அதுமட்டுமா, குற்றாலத்திலிருந்து சொக்கம்பட்டி, சிவகிரி, சேத்தூர் திருவில்லிபுத்தூர், பேரையூர், பாவாலி, பள்ளிமடை, கமுதி, ஆகிய ஊர்களுக்கெல்லாம் சென்று 23 நாட்கள் கடந்து, கடைசியாக இராமநாதபுரத்தில் வைத்து சாக்சன் வீரபாண்டியனுக்குப் பேட்டி கொடுத்தான், சாக்சனின் சதித்திட்டம் வீரபாண்டியனுக்கு விளங்கியும் கூட பின் தொடர்ந்து சென்றான் என்றால் அவனைத் தன்மானம் காத்த மாவீரன் என்று எப்படிச் சொல்வது. "மற்றப் பாளையங்களெல்லாம் பணிந்து நடக்கின்றன, நாம் மட்டும் ஏன் வீணாக ஆங்கிலேயரைப் பகைத்துக் கொள்ள வேண்டும். ஏதாவது நொண்டிச் சாக்கைச் சொல்லி தற்போதைக்குச் சமாளித்துக் கொள்வோம்" என்ற நோக்கமே தவிர, வேறு நோக்கமில்லை. ஒரு மாபெரும் விடுதலை வீரனாக வீரபாண்டியன் இருந்திருப்பானே யானால் இவ்வளவு தூரம் வந்து சாக்சனைப் பேட்டி காண வேண்டிய அவசியமில்லை. இவனைப் போய் மாவீரன் என்றும், விடுதலை முழக்கத்தின் முதல்வன் என்றும் கூறலாமா?

"உலகத்தில் இரண்டு விதமான சக்திகள் உண்டு. ஒன்று சுதந்திர சக்தி. மற்றொன்று அதிகாரசக்தி. முன்னது இயற்கையானது, பின்னது செயற்கையானது தான் சுக சௌக்கியத்துடன் இருக்க வேண்டுமென்பதற்காக, அஃது, இயற்கைக்கு விரோதமான முறைகளையே கையாள்கிறது. சில சலுகைகளைக் கொண்டுதான் அது வாழ்கிறது. பிறரை அடக்கியாள்கிறது" என்று சாமிநாத சர்மா எழுதியிருப்பது வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

'' வரி கொடுக்கும் வழக்கம் எங்கள் வம்சத்திலில்லை ; அன்னியனுக்கு அடங்கி வாழ்வது எமது அரசு மரபுக்கு இழுக்கு. ஆதலால் வரிகொடுக்க முடியாது'' என்று சாக்சனிடம் வீரபாண்டியக்கட்ட பொம்மன் கூறினான் என்று ம.பொ.சி கூறியிருக்கிறார்.

''வரிகொடுக்கும் வழக்கம் எங்கள் வமசத்திலில்லை'' என்றும் ''அன்னியனுக்கு அடங்கி வாழ்வது எமது அரசு மரபுக்கு இழுக்கு'' என்றும் கூறிய வீரபாண்டியனுக்கு சாக்சனைப் பேட்டிகாண வேண்டியதன் அவசியம் என்ன? ''பகைமையைக் குறைக்கலாம் என்று நம்பிக்கை தான்'' என்பதே பிரதான நோக்கமாகத் தெரிகிறது. சாக்சன், கட்டபொம்மனைப் பற்றி நன்கு புரிந்து கொண்டான் ''கழுவுகிற மீனிலும், நழுவுகிற மீன்'' என்ற பழமொழிக்கு ஏற்ப, கட்டபொம்மனை ஒப்பிட்டு சாக்சன் மனதில் நினைத்திருப்பான். மேலும் ''வீரபாண்டியனை வெள்ளையருக்கு எதிரியாக்கியதே தானாவதிப் பிள்ளை தானென்றும், அவரில்லையேல், வீரபாண்டியன் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பணிந்து போயிருப்பான்'' என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதாக ம.பொ.சி கூறுகிறார். இதிலிருந்தே கட்டபொம்மனின் உண்மை வடிவத்தைக் காணலாம். கட்டபொம்மன் மட்டுமல்ல அவன் முன்னோர்களெல்லாம் கப்பம் கட்டித்தான் வாழ்ந்தார்கள் என்பது வரலாறு கூறுகிறது.

இராமநாதபுரம் சம்பவத்தில் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று கட்டபொம்மன் ஓடோடி நெடுந்தூரம் வந்த பின்னர்தான் தானாபதிப்பிள்ளையைக் காணாததை அவனால் அறிய முடிகிறது என்றால் கட்டபொம்மனின் வீரத்தைப்பற்றி என்ன நினைப்பது கோழை என்று தான் நினைக்கத் தோன்றுகிறது.

தூ ந்துக்குடியிலிருந்த டேவிசன் என்னும் ஆங்கி லேய்ருககு இராமநாதபுரம் சம்பவம் பற்றியும், அதனால் இனி நேர விற்தும் தொந்தாவுகளையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டு, மேற்கொண்டு என்ன செய்வதென்பதை ஆலோசிக்க விரைந்து வருமாறு கட்டபொம்மன் அழைப்பு விடுத்தான், டேவிசனும் விரைந்து வந்தான்.

"உனக்தும் அவர்களுக்கும் உறவை வளர்க்க என்னால் இயன்றதைமயல்லாம் செய்கிறேன். கவலையை விடுத்துக் காரியத்தைக் கவனி" என டேவிசன் கட்டபொம்மனிடம் கூறுவதாகவும் ஒரு செய்தியை ம.பொ.சி. கூறுகிறார்.

இச்செய்தியிலிருந்து நாம் அறிவதாவது "விர பாண்டியக் கட்டபொம்மன் இராமநாதபுரம் சம்ப வதுதுக்குப்பிறகு இனி என்ன நேருமோ"? என்று பயம் ஏற்பட்டு விட்டதாகவே தோன்றுகிறது. ஆகையால் வெள்ளையர்களிடம் உறவை வளர்க்கவே விரும்பினான் என்றே தெரிகிறது. விடுதலை வீரனென்று அழைக்கப் படும் கட்டபொம்மனின் பரிதாப நிலையை எண்ணும் தோறும் வேதனையாக இருக்கிறது.

மேலும் கைது செய்யப்பட்ட தானாவதிப்பிள்ளையை திருச்சியில் விசாரிக்கும்போது "சுதந்திரமாக வாழவிரும்பு வதைத் தவிர ஆங்கிலேயருக்குத் தாங்கள் எவ்விதத்தும் பகைவரல்லர்" என்று தானாபதிப்பிள்ளைகூறுவதிலிருந்து வீரபாண்டியன் ஆங்கிலேயரைப் பகைத்துக்கொள்ள கட்டபொம்மன் விரும்பவில்லையென்று அவனுடைய தலைமை ஆலோசகரான தானாபதிப்பிள்ளை. கூறுவதி லிருந்து இது தெளிவாகத் தெரிகிறது.

'வானம் பொழிகிறது, பூமி விளைகிறது" உனக்கேன் கொடுக்க வேண்டும் கிஸ்தி? என்று அழகாக சினிமாவில் கட்டபொம்மனாக நடிக்கும் சிவாஜிகணேசனின் சிம்மக்

குரல் ஒலிக்கிறது ஆனால் வீரபாண்டியக் கட்டபொம்மன் கிஸ்தி கொடுக்க முடியாது, என்று திட்டவட்டமாகச் சொன்னது மில்லை, எழுதியதுமில்லை.

இதற்குச் சான்றாக சாக்சனுக்குப் பதிலாக வந்த லூசிங்டன் வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு எழுதிய கடிதத்ல் செலுத்த வேண்டிய வரிப்பாக்கியை எடுத்துக் கொண்டு தாம்தமின்றி இராமநாதபுரம் வந்து தம்மைக் காண வேண்டுமென்று எழுதியிருந்தான். அக்கடிதத்திற்கு வீரபாண்டியக் கட்டபொம்மன் எழுதிய பதிலாவது :

"பாஞ்சாலங்குறிச்சி யெங்கும் மழையின்மையால் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. பஞ்சத்திற்கு அஞ்சிய மக்கள் நிலங்களைத் தரிசாகப் போட்டுவிட்டு வெளியேறி விட்டனர். அவர்கள் திரும்பி வந்து சாகுபடி செய்யத் துவங்கியதும் கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய வரியைச் சேகரித்து எடுத்துக்கொண்டு நேரில் வருகிறேன்" என்று லூசிங்டனுக்கு வீரபாண்டியன் கடிதம் எழுதினான்.

எனவே, வீரபாண்டியக் கட்டபொம்மன் வரியைக் கட்ட மறுக்க வில்லை. வரியைக் கட்டுவதற்குத் தவணை வேண்டுமென்று கேட்டான் என்பதுதான் உண்மை, இந்தக் கடிதம் இன்றும் அரசாங்க ஆவணக் காப்பகத்தில் உள்ளது "வரிகட்ட மறுத்தான் வீரபாண்டியக் கட்ட பொம்மன்" என்று எப்படிச் சொல்ல முடியும்? கட்ட பொம்மன் கும்பினியரிடம் அவன் முனனோர்கள் பாணி யிலேயே சாக்குப் போக்குச் சொல்லி, தன்னைப் பாது காத்துக் கொண்டு வந்தான்.

மற்றுமொரு கடிதத்தையும் நாம் பரிசீலனை செய்ய வேண்டும், ஆங்கிலேயரைக் கமுதியில் வந்து காணமாறு வீரபாண்டியனுக்கு ஒரு கடிதம வந்தது. அதற்கு வீர

பாண்டியன், "இன்று வருகிறேன், நாளை வருகிறேன் என்று சாக்குப் போக்குகளைச் சொல்லிக் காலங்கடத்தி னான். மேலும் ''வரமுடியாது'' என்று சொல்ல அவனுக்குத் துணிவில்லை. எனவே, உடல் நிலைசரியில் லாததால் உடனே புறப்பட்டு வரமுடியாதென்றும்; மேலும், அன்றைக்கு நாளும் நன்றாக இல்லையாதலால் மறுநாள் வருவதாகவும்'' பதில் விடுத்தான். ஏற்கனவே இராமநாதபுரத்தில் சாக்சனைப் பேட்டி காணச்சென்று அவமானப்பட்ட பின்னர், இரண்டாவது தடவையாகப் பேட்டிகாண அழைக்கப்பட்டபோது மறுக்க வேண்டாமா ?

மூன்றாவது தடவையாகப் பானர்மெனின் அழைப் பிற்கு "வரமுடியாது'' என்று கண்டிப்பாகச் சொல்லாமல், வருவதாக ஒப்புக்கொண்டு, அன்று நாள் நன்றாக இல்லை யாதலால், நல்ல நாள் பார்த்து ஒருவாரத்திற்குள் பாளை யங்கோட்டைக்கு வருவதாக பானர்மெனுக்குத் தெரிவிக்கு மாறு வீரபாண்டியன் ஒரு தூதுவனை அனுப்பினான் அத்தூதுவனைப் பானர்மேன் கைது செய்தான்

கட்டபொம்மனுடன் கும்பினியர் சமாதானம் :

கட்டபொம்மனுக்கும் கும்பினியருக்கும் திருச்சியில் நடந்த பேச்சு வார்த்தைகளை ம.பொ.சி தன்னுடைய நூலில் எழுதவில்லை. வரலாற்றையே மூடி மறைக்கும் செயலாகும். வீரபாண்டியனுக்கும் கும்பினியருக்கும் நடத்த பேச்சுவார்த்தையை எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் ''கட்டபொம்மு'' என்ற நூலில் 45, 46 ஆம் பக்கங் களிலும், வீ. சே. லீலாவதி ''வீரபாண்டிக் கட்டபொம்மு'' என்ற நூலில் 43, 44 ஆம் பக்கங்களில் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்க தாகும்.

செகவீரபாண்டியனார் எழுதிய ''பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம் என்ற நூலில் பக்கம் 130, 132, 133ல் கூறும்

செய்தியும் நாம் காணத்தக்க தாகும். "இனி நிர் நமக்கு இனியராய் நின்று, என்றும் இதம் புரிந்து வரவேண்டும்" என்று பதம்பெற உரைத்தார். துரைகள் உரைத்த அவ்வுரைகளைக் கேட்டு, இவர் உள்ளம் மிக மகிழ்ந்து கிழமை பகர்ந்தார். "பழமையான என் நிலமை குலையாமல் நெறி முறை தெரிந்து நீதி செலுத்தி வரின், தலைமை அதிபதிகளாகிய தங்கள் ஆணையையான் யாண்டும் கடவேன். வேண்டும் உதவிகளை விழைந்து புரிவேன், கும்பினி அரசுக்கு இடையூராக யாரேனும் தடை செய்ய நேரின் யானே நேரெதிர்ந்து அவரை நிலையழித்து இங்கு நலமுறச் செய்வேன். பல கூறி என் ? உலகறிய நின்று எந்நிலையிலும் தளராமல் கும்பினிக்கு உறுதியாய் உழைப்பேன். இதுவான் அறிய, மண் அறியச்சொன்ன உண்மை" என ஆணை கூறித்தந்தார். இவ்வாறு ஒத்துழைக்க இவர் உறுதி செய்து தரவும், இத்தகைய் சுத்தவீரன் துணை அமைந்தது தங்களுக்குப் பேருதியா மென அவர் பெரிதும் மகிழ்ந்தார். இவரது உரைகளையும் உற உரிமைகளையும பாராட்டி உள்ளம் குளிர்ந்தார்"

இதிலிருந்து கட்டபொம்மன் கும்பினியருடன் செய்து கொண்ட ஒப்பந்தம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. இந்நிலையில் கட்டபொம்மனை எப்படி விடுதலை முழக்கம் முழங்கினான் என்று சொல்ல இயலும். சொல்லவே நாவு கூசுகிறது.

கும்பினியருடன் மட்டுமல்ல டச்சுக்காரர்களுடனும் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டு தன்னைப்பாது காத்துக் கொள்வதற்காக நவீன ஆயுதங்களை வாங்கி யுள்ளான் என்பதும் நாடறிந்த உண்மை. ஆனால் மாவீரன் புலித்தேவனுக்கு டச்சுக்காரர்கள் ஆயுதம் வழங்க முன் வந்த போது "கும்பினியனானாலும் சரி, டச்சுக்காரனானாலும் சரி யாராயிருந்தாலும் எனக்கு

அந்நியரே'' என்று வீர முழக்கம் முழங்கினான். இவனன்றோ விடுதலை முழக்கம் முழங்கிய மாவீரன்.

மதுரையிலிருந்து வெளி வரும் 'கண்ணகி' என்ற மாத ஏடு மாவீரன் புலித்தேவனின் முதல் முழக்கத்தையும், அந்த மாவீனான் வரலாற்றை மறைக்க எண்ணும் எந்தச் சரித்திர ஆசிரியனும் அசல்சரித்திரப் புரட்டன் என்று கூறுவதைக் காணலாம்.

''வெள்ளையர்கள் இந்த நாட்டில் வாணிபம் நடத்த வந்த பின்னர் மெல்ல மெல்ல நாட்டையே தனது ஆட்சியில கொண்டு வந்திருந்த நேரம் ஆற்காடு நவாப் வெள்ளைக்காரக் கம்பெனியிடம்(கிழக்கிந்திய வியாபாரக் கமபெனி) வாங்கிய கடனுக்காக தனக்கு நெல்லை மாவட்டத்து குறுநில மன்னர்கள் கட்ட வேண்டிய வரியை வசூலித்து பாக்கியை கழித்துக்கொள்ள ஒப்புதல் வழங்கிய நேரம் முதன் முதல் வெள்ளையர்கள் வரி வசூலிக்கும் உரிமையைப பெற்று நெல்லைமாவட்டம் நெற்கட்டும் செவ்வல் பாளையத்தை ஆண்டு வந்த பூலித்தேவன் என்ற குறுநிலமன்னனிடம் வந்தார்கள். ஆற்காடு நவாப் தங்களுக்கு உரிமை வழங்கி இருப்பதைக் காட்டி வரியை (கப்பத்தை) கேட்டார்கள். அதற்குப் பூலித்தேவன் ஆற்காடு நவாப்புக்கே கப்பம் கட்டாத நான், நவாப் வரி கேட்ட போது கொடுக்க மறுத்த நான், உங்களுக்கு வரி கொடுப்பேன் என்று எதிர்பார்த்து வந்திருந்தால் ஏமாந்து போவீர்கள். இந்தப் பூமி என் பாட்டன் பூட்டன் பிறந்து ஆண்ட பூமி இதில் எங்கிருப்தோ இங்கு பிழைக்க வந்த நீயா வரி கேட்பது என்று சீறினான். பூலித்தேவன். வெள்ளையர்களா விடுவார்கள் ? போர் மூண்டது. நெற்கட்டும் செவ்வல் பக்கத்தில் ஒரு சிறு குன்றுக்குப் பக்கத்தில் போர் மூண்டது ! குன்றுக்குப் பக்கத்திலுள்ள குளத்திலே வெள்ளையர்களின் தலைகளையும் நவாப்பின் துலுக்கர்

படைகளின் தலைகளையும் வெட்டி வீசி எறிந்து தலை களை குளத்தில் மிதக்கும் தாமரை இலை போல் குவித்துக் காட்டினான் பூலித்தேவன்.

ஆனாலும் வெள்ளையர்களின் துப்பாக்கிக்கு முன் னாலும், பீரங்கிக்கு முன்னாலும் பூலித்தேவனுடைய வாளும் வேலும் தாக்குப்பிடிக்க முடிய வில்லை. எனவே போர்க் களத்திலிருந்து புறப்பட்டு 6 கல் தொலைவில் உள்ள சங்கரன் கோவில் கோவிலுக்குள் சென்ற பூலித் தேவன் திரும்பவே இல்லை. இது வரலாறு பூலித்தேவன் வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மூதன் முதலில் போர் முரசு கொட்டியவன். வெள்ளையருக்கு விரோத மாக வாளை மூதன் முதல் உறையிலிருந்து உருவியவன் பூலித்தேவன்தான், என்பதை எந்த சரித்திர ஆசிரியனும் மறுத்தால் அவன் அசல் சரித்திரப் புரட்டன் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

''கட்டபொம்மன் தெலுங்கன், கொள்ளைக்காரன், அவனுக்கு முன்பே புலித்தேவன் என்கிற வீரமறவன் போராடினான், என்று போராட்டத்தை ஆரம்பித்தார் கல்கண்டு தமிழ்வாணன்'' என்று அறந்தை நாராயணன் தமிழ் சினிமாவின் கதை என்ற புத்தகத்தில் கூறியுள்ளார்.

மேலும் 'இந்தியப் பெரியார்கள்' என்ற நூலில் புலித்தேவனைப்பற்றிப் பாவலர் எழிலன். ''புலித் தேவன் பெயரைக் கேட்டாலே வெள்ளையருக்கு குலை நடுக்கம். கப்பம் கட்டமறுத்த புலித்தேவனை அந்நியரால் பணிய வைக்க முடியவில்லை. இவனது கோட்டை ''நெற்கட்டான் செவ்வல்'' மிகவும் புகழ் படைத்ததாகும். முதலில் களக்காட்டில் வெள்ளையரை எதிர்த்துப் போராடி புலித்தேவன் வெற்றி பெற்றான். தொடர்ந்து மூன்று வெற்றிகள் இவனுக்குக் கிடைத்தன. இதனால் கும்பினியர் பயந்து போய் லண்டனிலிருந்து அதிகபடைகளை அனுப்பும்படி எழுதினர்.

கோலார் பட்டியில் தங்கியிருந்த போது, கும்பினியரிடம் சரணாகதி அடைய சென்னை செல்வ தாகத் தீர்மானித்த செயலும் தானாபதிப் பிள்ளைக்கு ஒவ்வாத கருத்தாக இருந்திருக்கலாம். இதன் அடிப்படையில் வீரபாண்டிய னுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆகையால் தான் பானர்மேன், 'வீரபாண்டியன் வெள்ளையருக் கெதிராகப் போர்க் கோலங் கொள்ளக் காரணமாயிருந்தவர் தானாபதிப் பிள்ளை" என்று கூறியதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

எனவே மேலே கூறப்பட்ட கருத்துக்களை மையமாக வைத்து ஆராய்ந்துபார்த்தால் வீரபாண்டியனை வெள்ளை யருக்கு எதிரியாக்கியதே தானாபதிப்பிள்ளை தானென் றும், அவனில்லையேல் வெள்ளையருக்கு வீரபாண்டியன் பணிந்து போயிருப்பானென்றும், ஆங்கிலேயருக்குத் தாங்கள் எவ்விதத்திலும் பகைவரல்லர் என்று கூறுவதி லிருந்து வீரபாண்டியனை விடுதலை முழக்க வீரன் என்று சொல்வதற்கே கூசுகிறது.

வீரபாண்டியனுடைய ஆருயிர் தம்பி ஊமத்துரையை யும் மையமாக வைத்து ஆராய்வதும் வீரபாண்டியன் முதல் முழக்கம் முழங்கினான் என்று சொல்வதற்கே அருகதையில்லாதவன் என்பதும் நன்கு விளங்கும.

வீரபாண்டியன் தன் தம்பி ஊமத்துரையை உயிருக்கு உயிராக நேசித்தான். வீரபாண்டியனுடைய இறுதி மூச்சு உள்ள வரையிலும், ஏன் அதற்குப்பிறகுங்கூட தன்னுடைய அண்ணன் விட்டுச்சென்ற பணியை தொடர்ந்து துணிவுடன் நடத்தியவன். வீரபாண்டியன் தன் இறுதிக்காலத்தில் வேறுயாரையும் எண்ணிப் பார்க் காமல் தன் தம்பி ஊமைத்துரை ஒருவனையே எண்ணி வருந்துகிறான். "வீரபாண்டியனின் கண்கள் சுற்றும் முற்றும் சுழன்றன. ஆசைத்தம்பி அண்ணனுக்கு உற்ற

துன்பமெல்லாம் தன்னுடையதாகக் கொண்ட அன்புத் தம்பி ஊமத்துரையைக் காணவே, வீரபாண்டியனின் கண்கள் சுழன்றன அவனது உள்ளம் கொல்லன் உலை போலக் கொதித்தது'' (மு. மு. ப 66) ''அண்ணனுக்குப் புகழ் தேடித்தந்த அந்த ஊமத்துரை, ஆவி பிரியும் நேரத்தில் தன் அண்டையில் இல்லையே என்று ஆறாத் துயரமடைந்தான் வீரபாண்டியன்'' என்றும் ம.பொ.சி. கூறுவதிலிருந்து தெரிகிறது.

இராவணனைத் திருத்த முடியாத கும்பகர்ணனைப் போல் செஞ்சோற்றுக்கடன் களிப்பதே தன்னுடைய கடமையாகக் கொண்டிருந்தான் ஊமத்துரை என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

வீரபாண்டியன் மறைந்த பிறகு ஊமத்துரை பாஞ்சாலங்குறிச்சிப் போரில் தோல்வி ஏற்படப்போவதை அறிந்து கோட்டையை விட்டு வெளியேறுவது என்ற முடிவுக்கு வருகிறார். ''தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்'' என்று வீரபாண்டியனைப் போல் கோட்டையை விட்டு ஓடிவிடாமல் பொருப்புள்ள வனாக, கடமை வீரனாக நடந்து கொண்ட செயலானது ஊமத்துரையின் உயர்ந்த பண்பைக் காட்டுகிறது.

ஊமத்துரை தன்னுடைய புரட்சி வீரர்களுக்கு பின் வருமாறு கட்டளை பிறப்பித்தான்.

''புரட்சி வீராகளே! புற முதுகு காட்டாது போரிட்டுக் கொண்டே கோட்டையிலிருந்து வெளியேறுங்கள். படுகாய முற்ற வீரர்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர் ஆகியவரைக் கோட்டைக்கு வெளியே பாதுகாபபான இடத்திற்குக் கொண்டு செல்லுங்கள்'' (மு.மு.ப. 90) என்று ம.பொ.சி கூறுவதிலிருந்து ஊமத்துரை வெள்ளையருடன் போரிட்டுக் கொண்டே கோட்டையை விட்டு வெளியேறினான் என்பது தெரிகிறது.

ஆனால் வீரபாண்டியனோ சுத்த வீரனாக நடந்து கொள்ளாமல் ஒரு கோழையைப் போல் நடந்து கொண்டான் வீரபாண்டியன் கோட்டையை விட்டு வெளியேறும் போது இரவு பத்தரைமணி இருக்கும் (மு. மு ப. 43) வீரபாண்டியன் தன்னை நம்பி இருந்தவர்களையெல்லாம் அநாதைகளாக, ஆதரவற்றவர்களாக விட்டுவிட்டுத் தன்னுடைய உயிரை மட்டும் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்று இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் கோட்டையை விட்டு வெளியேறினான் என்பதை நினைக்கும்போது நம் உள்ளம் எரிமலையாகக் கொதிக்கிறது அதே நேரத்தில் ஊமத்துரையை எண்ணும் போது நம் உள்ளம் ஆறுதல் அடைகிறது.

பாஞ்சாலங்குறிச்சி முற்றுகையின் போது, கோட்டைக்குள் தன்னந்தனியனாக இருந்த வீரபாண்டியனைக் காப்பாற்ற வெள்ளையத்தேவன், ஊமத்துரை, தானாபதிப் பிள்ளை, ஆகியோர் கோட்டைக்குள்ளே வந்தார்கள். ஆனால் வீரபாண்டியனோ அவர்களையெல்லாம் நிராதரவாக விட்டு விட்டு தன்னுடைய உயிரே பெரிது என்று கோட்டையை விட்டு வெளியேறினான் இந்த இழி நிலையை எண்ணும் போது நெஞ்சு பொறுக்குதில்லையே.

வீரபாண்டியனின் பயந்தாங்கொள்ளிப் போக்கையும் ஊமத்துரையின் வீர ஆவேசத்தையும் கண்ட கம்பெனியார் இருவரையும் மதிப்பிட்டுப் பார்த்து "ஊமத்துரையைக் காட்டிலும் வீரபாண்டியனே கம்பெனி ஆட்சிக்கு நல்லவன் என்று முடிவுக்கு வருகிறார்கள் "ஊமத்துரையைவிட வீரபாண்டியனே நல்லவன் அவனிடம் சமரசம் செய்து கொள்ளாமல் போனோமே" என்று கூடக்கம்பெனித் தலைவர்களில் சிலர் கருதலாயினர்" (மு. மு. ப. 86) என்று ம.பொ.சி. கூறுவதிலிருந்து நாம் அறிகிறோம்.

எனவே இதிலிருந்து ஊமத்துரையைக் காட்டிலும் வீரபாண்டியனே நல்லவன் என்று கும்பினியர் எண்ணும் அளவிற்கு ஏகாதிபத்ய எதிர்ப்பு வீரபாண்டியனிடம் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும் போர் நிறுத்தம் ஏற்பட்ட பிறகு இரவோடு இரவாகக் கோட்டையை விட்டு வெளியேறி வீரபாண்டியன் ஓடிய செயலானது தமிழரின்போர் நெறிக்கே மாறுபாடான இழிசெயலாகும். இந்த இழிவான போக்கைக் கண்டே வீரபாண்டியனைத் தூக்கிலிட்ட போதும், அதற்குப் பிறகும் அமைதியாக மக்கள் இருந்தனர் என்பதிலிருந்து தெளிவாகிறது ஆனால் பாளையங்கோட்டையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஊமத்துரையை வெளியே கொண்டுவர மக்கள் போராடினார்கள் என்பதையும் எண்ணும் போது வீரபாண்டியன் மக்கள் சக்தியை இழந்திருந்தான் என்பதும், அவன் தம்பி ஊமத்துரை மகத்தான மக்கள் சக்தியைப் பெற்றிருந்தான் என்பதும் தெரிகிறது.

வீரபாண்டியனின் நெருங்கிய ஆங்கிலேய நண்பரான டேவிசன் என்பவரையும் ஆராய்வது நமது கடமையாகும். வீரபாண்டியனின் குணத்தை நன்கு புரிந்தவன் டேவிசன். வீரபாண்டியனின் மனம்போனபோக்கிலேயே சென்றவன் டேவிசன். ஆனால் எப்படியும் ஆங்கிலேயரிடம் விரபாண்டியனை சரணடைய வைப்பதே அவனுடைய நோக்கம் விரபாண்டியனாகிய மீனைப்பிடிப்பதற்கு டேவிசனைத் தூண்டிலாகப் பயன் படுத்தினர் ஆங்கிலேயர். ஆங்கிலேயருக்கும் வீரபாண்டியனுக்கும் உறவை வளர்ப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தவன் டேவிசன் இராமநாத புரத்தில் நடந்தசம்பவத்தை விரபாண்டியன் டேவிசனிடம் எடுத்துக்கூறிய போது "நினைக்கும் அவர்களுக்கும் உறவை வளர்க்க என்னால் இயன்றதையெல்லாம் செய்வேன். கவலையை விடுத்துக் காரியத்தைக் கவனி" (மு. மு ப. 21) என்று ம.பொ.சி. கூறியதிலிருந்து தெளிவாகிறது.

பானர்மென், பாளையங்கோட்டைக்கு வந்து தன்னைப் பார்க்க வேண்டுமென்று ஒரு தூதுவன் மூலம் வீரபாண்டியனுக்குச் செய்தி அனுப்பினான். உடனே வீரபாண்டியன் தூத்துக்குடி சென்று டேவிசனைச் சந்தித்து ஆலோசனை கேட்டான். "தாமதமின்றிப் பாளையங்கோட்டை சென்று பானர்மெனைக் கண்டு பேசிச் சமரசம் செய்து கொள்வதே சண்டையைத் தவிர்ப்பதற்குள்ள ஒரே வழி "என்று டேவிசன் வீரபாண்டியனுக்கு யோசனை கூறினான்" (மு.மு ப. 34) ஆனால் வீரபாண்டியன் டேவிசனின் உரையை ஏற்க மறுத்து விட்டான்.

வீரபாண்டியன் பானர்மேனைக் கண்டு சமரசம் செய்து கொள்ளாமல், அதற்குமாறாக தூதுவனை அனுப்பிச் சமரசம் செய்து கொள்ள விரும்பினான் வீரபாண்டியன். டேவிசன் உரையை வீரபாண்டியன் மறுத்ததற்குக் காரணம் பானர்மென் தன்னைக் கைது செய்து விடுவான் என்ற அச்சம்தான் காரணம். ஆங்கிலேயருடன் சமரசம் செய்து கொள்வதில் வீரபாண்டியனுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை.

எனவே இதிலிருந்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிடுவதை விட்டு விட்டு சமரசம் செய்து, சாம்ராட்சியத்தைக் கட்டிக்காப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தான் வீரபாண்டியன். தன்னுடைய தூதுவனைப் பானர்மென் கைது செய்தபோது கூட அமைதியாக இருந்தான் வீரபாண்டியன், என்னே! அவனுடைய வீரம்.

மேலும் "வீரபாண்டியனின் அன்னை, தம்பியர், மனைவி ஆகியோர் உள்பட இவனுடைய உறவினர் இருபத்திரண்டுபேர் ஆண்களும் பெண்களுமாக, டேவிசன் துரையிடம் அடைக்கலம் புகுந்தனர், ஆனால் இந்தச் சமயம் டேவிசனும் கம்பெனி பக்கம் சேர்ந்துகொண்டார். தளபதிபானர்மென் கேட்டுக்கொண்டபடி வீரபாண்டி

யனின் குடும்பத்தார் அனைவரையும் கம்பெனியாரிடம் ஒப்புவித்துவிட்டார். கம்பெனி அதிகாரிகள் அவர்களைச் சென்னைக்கு அனுப்பி அங்கு காவலில் வைத்தனர். மு.மு.ப. 49, 50 என்று ம.பொ.சி. கூறுகிறார்.

இதிலிருந்து வீரபாண்டியனைச் சரிப்படுத்த ஆங்கிலேயர்கள் டேவிசனைப் பாலமாகப் பயன்படுத்தினார்கள் இனம் இனத்தோடு சேரும் என்பதற்கு டேவிசன் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினான். வீரபாண்டியன், டேவிசன் ஆகிய இருவரில் டேவிசனே வீரபாண்டியனை வென்றான் என்றால் மிகையாகாது.

காந்திய அறப்போரும், கட்டபொம்மனின் ஆயுதப் போரும் ஒன்று என்று கூறுகிறார் ம.பொ.சி. இது எப்படி பொருந்தும். அண்ணல் காந்தி போர்பந்தர் மட்டும் வெள்ளையரிடமிருந்து விடுதலையடைந்தால் போதும். என்று எண்ண வில்லை. இமய முதல் குமரி வரை பரந்து கிடக்கும் பாரதநாடு முழுவதற்குமான விடுதலையை வேண்டியே உழைத்தார். ஆனால் வீரபாண்டியனோ, பாஞ்சாலங்குறிச்சியின் மீது மட்டும் வெள்ளையர் கை வைக்கக்கூடாது என்று எதிர்த்தான். தன்னுடைய அண்டைப் பாளையக்காரர்களின் மீது வெள்ளையர் கை வைத்தபோது, ஆதரவுக்காக கண்டனக் குரல் கூட எழுப்ப வில்லை. இங்ஙனம் இருக்க காந்தியப் போராட்டத்துடன் கட்டபொம்மன் போராட்டத்தை ஒப்பிடலாமா? எந்த இடத்திலும் "கட்டபொம்மன் ஆங்கிலேயருக்கு வரிகட்டமாட்டேன்" என்று திட்டவட்டமாகக் கூறியது கிடையாது. காலங்கடந்து வரி கட்டுவதாகத் தான் கூறியிருக்கிறான் இதை ம.பொ சியே கூறியிருக்கிறார். அப்படி இருக்கும்போது காந்தியின் வரிகொடா இயக்கத்துடன் கட்டபொம்மனின் வரி கொடா இயக்கத்தை ஒப்பிட்டுக் கூறுவது பொருந்தாத ஒன்றாகும்.

இது காறும் கூறப்பட்ட கருத்துக்களை மையமாக வைத்து ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும்

வீரபாண்டியக் கட்டபொம்மன் பாஞ்சை என்ற வட்டத்திற்குள்ளேயே சுற்றி வந்தான். அதையே தனது உரிமைத்திருநாடாகவும் எண்ணினான். இந்த நாட்டில் ஆங்கிலேயர்கள் என்ன செய்தாலும் அதைப்பற்றிய கவலை அவனுக்கில்லை. தன் அடி மடியில் மட்டும் கை வைக்கக் கூடாது என்ற சுய நலத்தையே பெரிதாக எண்ணினான் அடுத்த வீட்டில் தீப்பற்றியெறியும்போது கவலைப்படாமல், தன் வீட்டில் மட்டும் தீப்பற்றாமல் இருந்தால் போதும் என்று எண்ணுகின்ற மனிதனைப் போல் கட்டபொம்மன் இருந்தான்.

ஆங்கில நூலாசிரியர்கள் கருத்து :

நம் நாட்டு அறிஞர்கள் மட்டும், கட்டபொம்மனைக் கொள்ளைக் காரனென்றும், கொலைகாரனென்றும் கூற வில்லை. ஆங்கில நூலாசிரியர்கள் சிலர் கட்டபொம் மனைக் "கொள்ளைக்காரன்" என்றும், "கொலைகாரன்" என்றும் வர்ணித்து நூல்கள் தீட்டியுள்ளார்கள். இந்த நூல்களின் பெயர்கள் வருமாறு.

1. ரெவ்ரெண்ட் கிரான்ஸ் என்பவர் எழுதிய "பாஞ் சாலங்குறிச்சிப் பாளையத்தைப் பற்றிய குறிப்புகள.

2 கால்டுவெல் என்பவர் எழுதிய "திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் பொது வரலாறு "

3. ஏ. ஜே ஸ்டுவார்ட் என்பவர் எழுதிய "திருநெல் வேலி மாவட்ட மானுவல்"

4. எச். ஆக்பேட் என்பவர் எழுதிய 'திருநெல்வேலி மாவட்ட கெசட்டியார். இந்த நான்கு அறிஞர்களில் கால்டுவெல் கூறிய கருத்துக்களை ஏற்கனவே கூறியிருக் கிறேன்.

இங்கு ஸ்டுவார்ட் என்ற ஆங்கிலேயன், கட்டபொம் மனைப் பற்றிக் கூறியதை மட்டும் கூறுகிறேன்.

“கட்டபொம்மன் நாட்டைக் கொள்ளையடிப்பதிலும் அமைதியான மக்களைக் கொலை செய்வதின் மூலம் அமை தியைக் குலைப்பதிலும் ஈடுபட்டிருந்தான்” என்பதாகும். இந்த நான்கு ஆங்கிலேய நூலாசிரியர்களும் கட்டபொம் மன் காலத்திலேயே வாழ்ந்தவர்கள். சம்பவம் நடக்கும் போது நேரில் கண்டும், கேட்டும் எழுதினார்கள். ஆங்கி லேயர்கள் கட்டபொம்மனைக் குறைகூறி எழுதியிருக் கிறார்கள் என்பதற்காக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

வீரபாண்டியனைக் காட்டிலும் மாவீரன் புலித்தேவன் ஆங்கிலேயரை வன்மையாக எதிர்த்தான். அப்படி இருந்தும் புலித்தேவனைப் பற்றிக் குறைவாக ஆங்கிலே யர்கள் எந்த இடத்திலும் எழுதினதாகத் தெரியவில்லை. மாவீரன் புலித்தேவன் நேருக்குநேர் தைரியமாக எதிர்த் தான், இல்லாததையும், பொல்லாததையும் ஆங்கிலேயர் எழுதுவதென்றால் மாவீரன் புலித்தேவனையுமல்லவா குறைவாக எழுதியிருக்க வேண்டும். அவ்வாறு ஆங்கி லேயர்கள் எழுதவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத் தக்க தாகும்.

இந்த நான்கு ஆங்கிலேயர்களும் கட்டபொம்மனைப் பற்றிக் கூறியதைக் கண்டித்தும், நாட்டுப்பாடல்களையும் மையமாக வைத்தும் வீரபாண்டியக் கட்டபொம்மனைப் பற்றி ஈ. யூ. தாமோதர் என்பவர் எழுதியுள்ளதும் குறிப் பிடத் தக்கதாகும்.

மாவீரன் புலித்தேவன் வெள்ளையரை எதிர்த்துப் போர் நடைபெறும் அந்த நேரத்திலும் கூட, உணவுப்

கரிவலம் வந்த நல்லூர்பால்வண்ண நாதர்
கோவிலுள்ள புலித்தேவனின் சிலை

பற்றாக்குறையைப் போக்க விவசாயத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கும்படி மக்களைக் கேட்டுக் கொண்டான். அதற்கான தாக்கீதுகளையும் மக்களுக்கு அனுப்பி வைத்தான. சமயப்பணிகளையும் புலித்தேவன் செவ்வனே செய்து வந்தான். கரிவலம் வந்த நல்லூரிலுள்ள பால் வண்ணநாதர் ஆலயத்தில் அவன் கட்டிய முன் மண்டபத்தில், இறைவனை வணங்கும் கோலத்தில் அவன் திரு உருவச்சிலை இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டு சரித்திர நாயகர்களான மாவீரன் புலித்தேவனையும்,வீரபாண்டியக் கட்டபொம்மனையும் பற்றி நம் நாட்டு அறிஞர்களின் கூற்றையும், மேலை நாட்டு அறிஞர்களின்கூற்றையும் ஆராய்ந்து பார்த்தால்,இருவரில் முதல் முழக்கம முழங்கியவர் யார் ? என்று தெளிவாகத் தெரியும்.

ஒருவர், இருவரைத்தவிர, நம்நாட்டு அறிஞர் பெருமக்கள் மாவீரன் புலித்தேவன்தான் என்று தெளிவாக ஏகோபித்த குரலில் கூறியுள்ளனர். அதே நேரத்தில் கட்டபொம்மன் ஒரு “கொள்ளைக்காரன்” என்ற கருத்தையும் கூறியிருக்கிறார்கள். ஆனால் இவர்களில் யாரும் மாவீரன் புலித்தேவனைப் பற்றி எந்த விதமான குறையையும் சொல்லவில்லை. அதுவே புலித்தேவனுக்குச் சூட்டும் புகழாரமாகும். இதில் கட்டபொம்மனைக் காட்டிலும் மாவீரன் புலித்தேவனின் விடுதலை முழக்கமே மிகவும் விஞ்சி நிற்கிறது.

மேல் நாட்டு அறிஞர்களின் பார்வையிலிருந்து கட்டபொம்மனைக் காட்டிலும், மாவீரன் புலித்தேவனின் தியாகம் ஈடு இணையாகச் சொல்ல முடியாத நிலையில் உயர்ந்து நிற்கிறது. கோழைத்தனத்தை அவன் வாழ்வின் எந்தப் பகுதியிலும் காண முடியவில்லை புலித்தேவனின் மாபெரும புரட்சியால் அவன் மண்ணே சிவந்தது. அதனால் மேற்கு வானமே சிவந்தது.

முடிவுரை:

இந்திய விடுதலை சரித்திரத்தில் 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலிருந்தே மாவீரன் புலித்தேவன் விடுதலை முழக்கமிட்டிருக்கிறான். அவனின் விடுதலை முழக்கம் அநத நூற்றாண்டின் இறுதிக் காலம் வரை எதிரொலித்துக் கொண்டேயிருந்தது. இந்த விடுதலைப் போரைப்போல் ஒரு நூற்றாண்டு காலம் இடைவிடாமல் தொடர்ந்து நடந்த போராட்டம் வேறெதுவுமில்லை. அதுவும் மாவீரன் புலிததேவனின் தலைமையில ஏனையப் பாளையக்காரர்களெல்லாம் ஒன்றுபட்டு வீரப் போராட்டம் நடத்தினர். புலித்தேவனின் இந்தப் போராட்டம் வெள்ளையரை எதிர்ப்பதற்காக மட்டுமன்று; டச்சுக் காரர், பிரஞ்சுக்காரரர் ஆகியவர்களையும் எதிர்த்து முழங்கிய முழக்கமாகும். ஆகையால் மாவீரன் புலித்தேவனும் அவனைச் சார்ந்தவர்களுமே இந்திய விடுதலை இயக்கத்தின் முதல் முழக்கம் முழங்கிய செம்மல்களாவர்.

“எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு”.

என்ற வாசகத்திற்கிணங்க. இந்தியாவிலேயே முதல் முழக்கம் முழங்கிய முதல் இந்தியன் மாவீரன் புலித்தேவன் தான். வீரமறவர் குடியில் பிறந்தான் என்ற காரணத்தினால் ஒதுக்கித்தள்ளப்பட்டான் என்று எண்ணத் தோன்றுகிறது. ஏ! சுதந்திரமே! உனக்குக்கூட சாதீயச் சாயம் பூசப்படுகிறதே. உன்னால் இதை எப்படிச் சகித்துக் கொள்ள முடிகிறது.

“உண்மை ஒருநாள் வெளியாகும்—அதில்
உள்ளங்களெல்லாம் தெளிவாகும்
பொறுமை ஒருநாள் புலியாகும்—அதற்குப்
பொய்யும் புரட்டும் பலியாகும்”

என்ற பட்டுக்கோட்டையாரின் பாடல் கூறுவதுபோல் உண்மையான வரலாறு ஒருநாள் நிச்சயம் வெளியாகும்

என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் இருக்கிறது. பொய்யும் புரட்டும் பலியாகும். அதைத்தடுக்க யாராலும்முடியாது. தடுக்க நினைத்தாலும் அது நடக்காது.

> ''காலம் தெரிந்து கூவும் சேவலைக்
> கவிழ்த்துப் போட்டாலும் நிறுத்தாது
> கல்லைத் தூக்கிப் பாரம் வைத்தாலும்
> கணக்காய்க் கூவும் தவறாது.''

என்ற பட்டுக்கோட்டையின் பாடலே அதற்குச் சான்றாகும்.

1755இல் ஆரம்பித்த இந்திய விடுதலைப் போரின் முழக்கம் 1947 ஆகஸ்ட் 15இல் முடிந்து விடுதலை மலர்ந்தது. விடுதலைக்குப்பிறகாவது உண்மையான இந்திய விடுதலைப்போர் வரலாறு எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இது காரும் எழுதப்படவில்லை. இதற்கென்று டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அதுவும் சரியாகச் செயல்படவில்லை. அதற்குப்பிறகு ஒவ்வொரு மாநிலமும் தயார் செய்ய வேண்டும் என்று நடுவண் அரசிடமிருந்து ஆணை வந்தது. ஆனால் தமிழகம் மட்டும அதில் அக்கறை காட்டவில்லை. இது வருந்தத்தக்கதாகும். அரசு இதில் கவனம் செலுத்தாததால் சில சுய நலமிகள், தமிழகத்தின் விடுதலைப் போரை மறைத்தும், தங்களுக்குச் சாதகமானவர்களை அறிமுகப்படுத்தியும், வரலாற்றையே திசை திருப்பும் வண்ணம் எழுதி வருகிறார்கள். ஆகையால் மாநில அரசு உடனடியாகத் தலையிட்டு பலதரப்பட்ட அறிஞர்களின் குழு ஒன்றை நியமித்து. தமிழகத்தில் நடந்த விடுதலை இயக்கத்தின் உண்மையான வரலாற்றை எழுத வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்துவது நமது கடமையாகும்.

அதே நேரத்தில் நடுவண் அரசு இந்திய விடுதலை இயக்கத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடிய போது மாவீரன் புலித்தேவனை மறந்து விட்டது. இச் செயல் குறித்து யாரும் இதுவரை வருத்தம் தெரிவிக்கவில்லை. அது மட்டுமல்லாமல் இந்திய விடுதலை இயக்க வீரர்களுக் கெல்லாம் அஞ்சல் தலை வெளியிட்டுக் கௌரவப்படுத்திய போதுகூட புலித்தேவன் ஒதுக்கப்பட்டான். ஆங்கிலேயர் களால் வர்ணிக்கப்பட்ட குற்றப்பரம்பறை சாதியில் பிறந் தான் என்ற காரணத்தினால் ஒதுக்கப்பட்டிருப்பானோ? என்றும் அய்யம் ஏற்படுகிறது.

நடுவண் அரசு புலித்தேவனை மறந்துவிட்டது. கட்ட பொம்மன், மருது பாண்டியர், வீரன் சின்னமலை ஆகிய வர்களின் பெயரைத் தாங்கிப் பேருந்து வண்டிகள் ஓடு கின்றன ஆனால் மாவீரன் புலித்தேவன் பெயரில் ஒரு நினைவுச் சின்னம் கூட இல்லை. வீரபாண்டியக் கட்ட பொம்மனுக்குப் பாஞ்சையில் அரசு சார்பாகக் கோட்டை கட்டியுளளது ஆண்டுதோறும் விழா நடத்துகிறது. ஆனால் மாவீரன் புலித்தேவனைப் புறக்கணித்துள்ளது. இந்த நிலையானது மாவீரன் புலித்தேவனை அவமதிப்பது மட்டுமல்லாமல்,இந்திய விடுதலைப் போரையே அவமதிக் கும் செயலாகும். யார் மதித்தாலும், மதிக்காவிட்டாலும் இந்த நாட்டின் தேசியவாதிகள் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றுவிட்டான் மாவீரன் புலித்தேவன். இந்திய விடு தலைப் போராட்டத்தின் முதல் முழக்கம் முழங்கிய முதல் இந்தியன் மாவீரன் புலித்தேவன், மொழியாலும், இனத் தாலும் அவன் தமிழனாக இருப்பதால், தமிழர்களாகிய நாம் பெருமைப் படுகிறோம்.

இந்திய விடுதலை இயக்க வரலாற்றில், இந்திய விடு, தலைப் போராட்ட வீரர்களின் முடிவு துப்பாக்கிக் குண்டு தூக்குக்கயிறு ஆகியவற்றிற்கு இறையானதாகவே இருந் தது. ஆனால மாவீரனின் முடிவு தனது இறுதிக்காலத்தில்

கூட அன்னியன் கரங்களில் சிக்கித் தன் உயிரைப் போக்காமல், தான் யாருக்கும் அடிமையல்லன், பரிபூரணனான சங்கரனுக்கே அடிமை யென்று சங்கரன் கோவில் குகைக்குள் சென்று அவன் திருவடி நிழலில் ஐக்கியமாகி விட்டான். அம்மாவீரன் சங்கரன் கோவிலுக்குள் மறைந்த இடம், 'புலித்தேவர் அறை" என்று இன்னும் விளங்கிவருவது அவன் புகழுக்கு ஒரு சான்றாகும்.

மாவீரன் புலித்தேவன் தன்னுடைய இலட்சியத்தில் வெற்றி பெறவில்லை என்பது உண்மை. ஆனால் மாவீ.ரன் புலித்தேவனுடைய விடுதலை எழுச்சி, வீரம், தியாகம் ஆகியவை அனைத்தும் அவனுக்குப் பின்னால் ஏற்பட்ட வீரமங்கை வேலு நாச்சியாரின் போராட்டம், வீரபாண்டியனின் போராட்டம், மருது சகோதரரின் போராட்டம், வேலூர் புரட்சி, சிப்பாய்க் கலகம் போன்ற புரட்சிகளுக்கும், மற்றும் ஏனைய முடிமன்னர்களின் விடுதலைப் புரட்சிக்கும வழி வகுத்ததோடு, மக்களின் தேசிய எழுச்சிப் போராட்டத்திற்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. விடுதலை இயக்க சரித்திரம் படைத்தான் புலித்தேவன். புலித்தேவனின் முதல் முழக்கத்தை புலவர் கூட்டம் தமிழால் புகழ் பாடட்டும். எதிர் வரும் காலம் அவனை ஏத்திய புகழும. தாயகம் வென்றிடவும, தண்டமிழ் வாழ்ந்திடவும் வஞ்சகராம் ஆங்கிலக் கும்பினியருக்குச் சாவு மணி அடிக்க முதல் குரல கொடுத்த வீரச்சிங்க மறவன் புலித்தேவனன்றோ.

புரட்சித் தலைவன் புலித்தேவனின் போர்க்குரல் கேட்டது. பொங்கிய தோழர்களின் உள்ளம் வெளளமெனப பாய்நதது. புலி வஞ்சகப் பூனைக்கு அஞ்சிடுமா? மூன்று தடவை வெற்றி பெற்ற கால முண்டு ஆம மாவீரன் புலித்தேவன் நம்மிடமிருந்து மறைந்து விட்டான். அவன் புகழ் இந்த மண்ணும வானும் உள்ள மட்டும் மறையாது.

மதுரையிலுள்ள அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை யினரால் புலித்தேவனால் உபயோகப் படுத்தப்பட்ட இரும்புக்குண்டுகள், ஆயுதங்கள், பீரங்கிகளின் பகுதிகள் ஆகியவை பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளன. அவை உள்ள அளவும் அவன் புகழ் குன்றென நிமிர்ந்து நிற்கும்.

மாவீரன் புலித்தேவன் பிறந்த மண்ணின் மைந்தர்கள், அவன் வரலாற்றை ஓயில் கும்மிப்பாடலாக இன்றுமபாடி வருகிறார்கள் இப்பாடல்கள் யாவும் ஒலைச் சுவடிகளில் உள்ளன. செண்பகா புரத்தைச் சேர்ந்த கார்த்திகைச் சாமி என்பவரும், அவரைச் சார்ந்தவர்களும் பாடிவருகின் றனர். கார்த்திகைச் சுவாமியின் முன்னவரான முத்துக் கருப்பத்தேவர் காலத்திலிருந்து இது நாள் வரை புலித் தேவனின் புகழ்பாடி வருவதிலிருந்து. அவன் புகழ் சிகர மென உயர்ந்து நிற்கிறது. அந்தப்பாடல்களிலிருந்து சில பாடல்களைக் காணலாம்.

புலித்தேவன் புலியை அடக்க மதுரைக்குச் சென்ற காட்சியை விவரிக்கும் பாடல்.

கச்சை யிடையில் வாள் வரிந்துகட்டப் –புலி
கத்தி சமுதாடு தானெடுத்தார்
கொண்டயங் கோட்டை மறத்தி பெற்ற –புலி
கோடிப் பாம்பு போல அங்கே
சந்தனம் குங்குமம் பொட்டணிந்தார்—தேவர்
சரிகைத் துப்பட்டி தோளிலிட்டார்
வெற்றியுடனே திரும்பென்று புலிக்கு
நெற்றியில் நீரிட்டாள் கோமதியும்
வேந்தனும் சிந்தனை செய்து நின்றார்—வீர
இலட்சுமியும வந்து தோளில் நின்றாள்
படை மன்னர்களும் பின் நடக்கப்—புலி
பட்டத்துக்-குதிரையும் முன் நடக்க
மிக்கப் புகழ் வெற்றிதான் பெறவே—புலி
சொக்கர் மீனாட்சியைத்தாள் பணிந்தார்

புலித்தேவன், மதுரையின் வீதி வழியே செல்லும் போது அவனுடைய கம்பீரமான தோற்றத்தை கண்டு பெண்கள் புகழ்ந்து பாடிய பாடல்.

அடி கன்னியரே இங்கு வாருங்கடி – இந்தக்
கட்டழகன் தன்னைப் பாருங்கடி
அந்நிய நாட்டுக் கரசனடி—பார்க்க
அர்ச்சுனன் போலவே தோணுதடி

....

....

சந்தணப்பொட்டு இலங்குதடி—இவர்
சரிகைத்துப்பட்டு மின்னுதடி
கந்தம் கமழ்கின்ற வாசனையும் பார்க்க
காமனைப் போலவே தோணுதடி
காமனென்று இவரைச் சொன்னாயம்மா—அவர்
கரும்புவில் மலர் அம்பு கொண்டு—இந்தப்
பூ மகன் கைதனில் வேல்கம்பும் கத்தியும்
புரட்சி வீரனாய்த் தோணுதம்மா
எந்த ஊரு மகராசனோடி—பார்க்க
இளஞ்சிங்கம் போலத் தோணுதடி
சிந்தித்துப் பாராமல் புலியின் கையில்
சிக்கிக் கொண்டாரையா பாபமடி
சிக்கிக் கொண்டாரென்று சொல்லாதம்மா
இவர்சேதி யறியாமல் பேசாதம்மா
சுற்றிச் சுற்றிவரும் யானையின் மத்தகம்
குத்திப் பிளந்து விடும் சிங்கமடி

புலித்தேவன் புலியை வென்றபின்பு, மதுரை மன்னனால் பரிசுகள் பலபெற்று, புலித்தேவன் பல்லக்கில் பவனி வரும் காட்சி.

நெற்கட்டும் புலியென்றால்—உலகில்
திக்கெட்டும் தான் நடுங்கும்

....

... .

தங்கிடும் வேங்கை தன்னைச் செயித்து
சன்மானம் பெற்ற வீரன்
திக்கு விசயம் பெற்று புலிமன்னன்
தென்னாட் டதிபதிக்கு
லட்சணமாய்ப் பவனி மதுரையில்
நாலு வேளை குறித்து

....

துன்னும் படைவீரர் எல்லோரும்
தோத்திரம் செய்து நின்றார்.

புலித்தேவனை ஆங்கிலேயர் கைது செய்து பாளையங் கோட்டைக்குக் கொண்டு சென்ற போது, சங்கரன் கோவிலில் புலித்தேவன் பாடிய பாடல்.

உன் கமலத்தை என் நாவறியாய்
உமை சங்கரனே புகலக் கேண்மின்
தீங்குபுரி மூவாசை வினை சிக்கி
உழலும் அடியேன் தன்னை
ஓங்கபுள் சூழ் உலகமதில் உனையன்றி
எனைக்காக்க ஒருவருண்டோ
ஈங்கெழுந்தருள் புரியும் இன்பவாருதியே
இறைவனே போற்றி ! போற்றி !
புலித்தேவன் மறைவு குறித்துவரும் பாடல்.
ஈடில்லா புகழ்புலிஆயிரத்தெழு நூற்றிஅறுபத்தேழில்
இதமான ஆடியீரைந்தாம் தேதி
கோதிலா அமர பட்சம் குருவாரம் தன்னில்
குணமுடைய பூசை நட்சேத்திர நாளில்
பேர்புகழும் சங்கரன் கோவிலாலயத்தில்
பிரபலமாகி லிங்கச்சோபதி தன்னுள்
பார்புகழும் தென்னாட்டுப் புலிஞானி
பண்புடனே பரமபதம் சேர்த்த தன்றே
வாழ்க புலி ! வாழ்கதமிழ் ! வாழ்க அரசு !

தென்பாண்டியச் சிங்கத்தின் பெயரால் நெற்கட்டும் செவ்வல் மக்கள், "மாவீரன் புலித்தேவன் உயர்நிலைப் பள்ளி" என்றும், "புலித்தேவன் நடு நிலைப்பள்ளி' யென்றும், "புரட்சித்தலைவன் புலித்தேவன் இளைஞர் மன்றம்" என்றும் அவனின் வீரத்தியாகத்தை மறவாமல் நன்றி உணர்வோடு செய்திருக்கின்ற செயலானது அவன் புகழுக்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் மாவீரன் புலித்தேவனே முதல் முழக்கம் முழங்கினான் என்ற செய்தியை பொறித்து முதன்மை வழங்க வேண்டும். நாட்டுப் பற்று குறைந்து கொண்டேவரும் இந்த நேரத்தில் புலித்தேவனின் வீரவரலாற்றை மாணவர்களுக்கு எடுத்துக் கூறும் வண்ணம் பாடத்திட்டம் அமைதல் வேண்டும்.

பல்கலைக் கழகங்களிலும், போக்குவரத்துக் கழகங் களிலும் அவன் பெயர் துலங்க வேண்டும். அவன் சொந்த ஊரான நெற்கட்டும் செவ்வலில் அவனுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும். இதுவே இந்திய விடுதலைச் சிற்பி புரட்சி வீரன் மாவீரன் புலித்தேவனுக்குச் செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

"புலித்தேவர் மகாபராக்கிரம சாலியாயும் அஞ்சாத நெஞ்சம் படைக்கப்பட்டவராயு மிருந்தார். ஆங்கிலேயர் சைனியம் நெற்கட்டான் செவ்வலையடையவும், கும்பினி யர்களின் உத்தரவுகளைச் சிறிதுகூட இலட்சியப் படுத் தாமல் நிராகரித்து விட்டதை யறிந்து எப்படியாவது இரு பதினாயிரம் ரூபாய் கொடுக்கிறதானால் சைனியத்துடன் போய் விடுவதாகக் கும்பினியர் சொல்ல, அதற்கு புலித் தேவர் தன்னுடைய பாளையப் பட்டில் பூராவும் வசூலித்துப் பார்த்தாலும் அத்தொகை கிடைக்கா தென்றும், பணத்தின் அருமை அவருக்குத் தெரிந்திருப்பது போல் மற்றவர்களுக்குத் தெரிந்திருப்பதால் இப்படி கும்பினியார் தன்னைக் கேட்டிருக்க மாட்டார்கள்

என்றும், தன்னால் ஒரு ரூபாய்கூட கொடுக்க சக்தி யற்றிருப்பதாயும் மறுத்துச் சொல்லி விட்டார்.

புலித்தேவர் அஞ்சாத நெஞ்சம் படைத்தவர். இராணுவ முறையில் கைதேர்ந்தவர்களும் மெச்சும்படி யான யுத்தப் பயிற்ச்சியின் நுண்ணறிவையும சைனியங் களின் நிதானங்களைக் குறிப்பினால் அளவிடும சக்தியை யும், சைனியங்களுக்கு உற்சாகத்தை யூட்டும் வாக்கு வல்லமையும, ஒரே நாளில் 40 முதல் 50 மைல்கள் தூரம் யுத்தளவாடங்கள் சகிதம் களைப்பில்லாமல நடககும் ஆற்றல் படைக்கப்பட்டிருந்ததையும் அவர் அடைந் திருந்ததுடன், பார்வைக்கு உயர்ந்து நிதானமான ஆகிரு தயுடன் கண்களும், நெஞ்சம், புயங்களும் பரந்து விசால பாகவும், ஆசானுபாகுவான கைகளையும, சிறுத்த நீண்ட விரல்களையுமுடைய வராயுமிருந்தார் என்பது கர்ண பரம்பரை.

இராச தந்திர விசயத்திலும், காரியங்களைச் சமயோ சிதமாக இராசதந்திர நிபுணத்துவத்துடன் செய்து முடிக்கும் ஆற்றல், அக்காலத்தில் மேல் பாடகையில் புலித் தேவர் ஒருவருக்கே சிறந்திருந்ததால் அவரது அக்ராசனத் தின் கீழ் ஒரு யுத்த ஆலோசனை சபை நிகழ்ந்தது "என்று திருநெல்வேலிச் சீமை சரித்திரத்தில் குருகுகதாசர் கூறு வதிலிருந்து புலித்தேவரின் புகழ் பளிச்சென்று மின்னு கின்றது.

மாவீரன் புலித்தேவனின் வீரத்தையும், விவேகத்தை யும், தியாகத்தையும் வருங்கால இளஞ்சிங்கங்களுக்கு எடுத்துக்கூறும் முகத்தான் புலித்தேவனுக்குப் பண் பாட்டுக் கழகங்கள் ஏற்படுத்தி நாட்டுப்பற்றை வளர்ப் பது நம்முடைய மகத்தான பணியாகும்.

"எந்த நாடும் இதற்கீடில்லை என்றே—என்
சொந்த நாட்டைச் சொர்க்க மாக்கிடுவேன்"

என்ற பாரதியின் வாக்கை மெய்யாக்குவோம்.
வாழ்க புலித்தேவன் புகழ். வளர்கதேசியம்.

எழுதுவதற்கு உதவியாக இருந்த நூல்கள்

1. வீரத்தலைவர் புலித்தேவர்-டாக்டர் ந. சஞ்சீவி
2. History of Marava-டாக்டர். எஸ். கதிர்வேல்
3. கட்டபொமமுன் கொள்ளைக்காரன்-தமிழ்வாணன்
4. புலித்தேவன் (நாடகம்) தமிழ்வாணன்.
5. தமிழ்வீரன் பூலித்தேவன்-எஸ். கே. சாமி
6. விடுதலைப் போராட்ட வரலாறு-
டாக்டர். ச. செயம்பிரகாசம்
7. சிவகங்கைச்சீமை-எஸ். கே. சாமி
8. கான்சாகிப்சண்டை-பேராசிரியர். ந வானமாமலை
9. புரட்சித்தலைவன் புலித்தேவன்-
வ. வேணுகோபாலன்
10. மூவேந்தர் குலத்தேவர் சமுக வரலாறு-
பி. முத்துத்தேவர்
11. History of Madurai-டாக்டர். கே. ராசய்யன்.
12. மெர்க்கன்சியின் சுவடிகள்-தமிழக அரசு தொல் பொருள் ஆராய்ச்சி வெளியீடு.
13. ஆனந்தரங்கம்பிள்ளை-பேராசிரியர்.
சி. எஸ் சீனிவாசகாச்சாரியார்
14. History of Tirunelvelly-கால்டுவெல்
15. Records of Fort St., George, Country Correspondence, 1758.
16. திருநெல்வேலிச் சீமை சரித்திரம்-
எஸ். குரு குகசாதப்பிள்ளை
17. யூசப்கான் எஸ். C. ஹால்
18. பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம்-
செகவீர பாண்டியனார்
19. The Aristocracy of South India A. VADIVELU

20. சுதந்திரப் போர்க்களம்-ம.பொ. சிவஞானம்
21. தமிழ் நாட்டின் வரலாறும பண்பாடும்-
எஸ். நடராசன்
22. தமிழ் நாட்டின் வரலாறும் பண்பாடும்.
ந. க. மங்கள முருகேசன்
23. வேலூர் புரட்சி-டாக்டர். ந. சஞ்சீவி
24. வீரபாண்டியக் கட்டபொம்மன்-ம.பொ. சிவஞானம்
25. தமிழ்வாணன் யார் ?-சேலம் மணாளன்
26. விடுதலைப்போரில் தமிழகம்-ம.பொ.சிவஞானம்
27. முதல் முழக்கம்-ம. பொ. சிவஞானம்
28. தமிழ்நாட்டுத் தலைவர்கள் வரிசை-
டாக்டர். எஸ் கதிர்வேல்
29. கட்டபொம்மன் கதை-டி. கே ராமா
30. பாண்டியர் வரலாறு-சதாசிவப்பண்டாரத்தர்
31. வீரபாண்டியக் கட்டபொம்மன்-ஈ. யூ. தாமோதர்
32. தேவர் குரல்-டாக்டர். வீ. ராமகிருட்டிணன்
33. அகம்படியார்-பாண்டியன்
34. கண்ணகி இதழ்
35. சினிமாவின் கதை-அறந்தை நாராயணன்
36. தினமலர் கட்டுரைகள்-வெ. கிருட்டிணன்
37. வீரபாண்டியக் கட்டபொம்மன்-சிரஞ்சீவி
38. தமிழக வரலாறும் பண்பாடும்-
டாக்டர். ஐ. அண்ணாமலை
39. கொம்மந்தன் கான்சாகிப்-டாக்டர். ந. சஞ்சீவி
40. கட்டபொம்மு-எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்
41. வீரபாண்டிக் கட்டபொம்மு-வி. சே. லீலாவதி

இந்நூல் ஆசிரியர்



பெயர்:- ந. இராசையா எம். ஏ.

பிறப்பு:- 6-10-1932

ஊர்:- சேத்தூர் (முகவை மாவட்டம்)

பெற்றோர்:- நச்சாடலிங்கம்
பெத்தம்மாள்

மனைவி:- ஞானமணி

தமிழ்ச்சேவை:- சேரை மன்னர்களின் செந்தமிழ்ப்பற்று
சேரை வளமும் சேவுகப்பாண்டியர் கொடையும்
சேரை வரலாறும் பெருஞ் சமையனும்
காலண்டர் பிறந்த கதை
நத்தையின் காதல்
பாரதிதாசனும் பட்டுக்கோட்டையும்
தமிழ் நாட்டின் தவ நடிக பூபதி P.U. சின்னப்பா

பொதுநலப்பணி;- தமிழாசிரியர் பேரவையின் மாநிலப் பொதுச் செயலாளர்
முற்போக்கு இயக்கங்களில் ஈடுபாடு